www.tamilarangam.net


# களத்தில்

மழலைகள் மடியும் போதும் மறந்திரோ தமிழ் மண்ணை?
குழந்தைகளைக் குதறும் போதும் பதறாது போனீரோ புலம் பெயர்ந்தோரே?

திருவள்ளுவர் ஆண்டு 2026 கன்னி 18 (04.10.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 40p


# கல்குடாவில் காவல் நிலையம் தாக்கியழிப்பு

28-09-95 வியாழனன்று இரவு 11.40 மணிக்கு மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கல்குடாவில் உள்ள சிறீலங்காக் காவல்துறை நிலையம் மீது தாக்குதலை மேற்கொண்ட விடுதலைப் புலிகள் அதனை 30 நிமிடத்தில் கைப்பற்றினர்.

## 22 சிங்களக் காவற் துறையினர் பலி

இத்தாக்குதல் நடந்து கொண்டிருந்த சமயம் 300 யார் தொலைவிலுள்ள இராணுவ முகாமிலிருந்து உதவிக்கு வந்த இராணுவத்தினர் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலின் போது 22 காவல்துறையினர் கொல்லப்பட ஏனையோர் தப்பி ஓடிவிட்டனர். ஏராளமான ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதோடு காவல்துறை நிலையமும் அழிக்கப்பட்டது. இத் துணிகரத் தாக்குதலின்போது விடுதலைப் புலிகள் தரப்பில் மட்டக்களப்பைச் சேர்ந்த 2 ஆம் லெப்ரினன் அழகப்பன் செல்லையா மனோகரன், வீரவேங்கை செல்வம் வைரமுத்து ஆகிய இரு போராளிகள் வீரச்சாவடைந்தனர். தாயக மண்ணை மீட்கும் புனிதப் போரில் வீரவிதையாகிய இவ் விடுதலை வீரர்களுக்கு விடுதலைப் புலிகள் வீர வணக்கத்தைச் செலுத்துகின்றனர்.

# வடமராட்சியில் விமானக்குண்டு வீச்சு

❁ 2 வயோதிபர் 1சிறுவன் பலி ❁ 32 பேர் படுகாயம்

20-09-95 இலும், 21-09-95 இலும் சிறீலங்காப் படைகள் வடமராட்சிப் பகுதி மீது நடத்திய விமானக் குண்டு வீச்சு, மற்றும் கண்மூடித்தனமான எறிகணைத் தாக்குதல்களினால் இரண்டு வயோதிபர்களும் ஒரு சிறுவனும் பலியாகினர். அப்பாவிப் பொது மக்கள் 32 பேர் காயமுற்றனர். மக்களின் உடமைகளும் சேதமடைந்தன.

20-09-95 அன்று 12.30 மணியளவில் புக்காரா விமானம் ஒன்று வடமராட்சி கிழக்கு வடமுனை, குடாரப்புப் பகுதிகளில் தொடர்ச்சியாக ஆறு குண்டுகளை வீசியது. மீண்டும் பிற்பகல் 3 மணியளவில் அப்பகுதிக்கு வந்த சப்பர் சொனிக் விமானமும் புக்காரா விமானமும் பல குண்டுகளை

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# பாடசாலையில் சிறீலங்கா விமானங்கள் குண்டு வீசின

## 34 மாணவர்கள் உட்பட 100 பேருக்கு மேல் பலி

## 150 க்கும் மேற்பட்டோர் படுகாயம்

சிறீலங்கா விமானப்படை, நாகர்கோயில் மத்திய வித்தியாலயத்தில் நடாத்திய குண்டு வீச்சில், 25 மாணவர்கள் உடல் சிதறி அதே இடத்திலேயே துடிக்கக் துடிக்கக் கொல்லப்பட்டுள்ளனர். 82 மாணவர்கள் படுகாயம் அடைந்துள்ளனர். சந்திரிகா அரசின் இக்கொடுமை 22-09-95 வெள்ளிக் கிழமையன்று நடைபெற்றது. இப்பாடசாலை மாணவர்கள், மதியபோசன இடைவேளையில் குதூகலித்து மகிழ்ச்சியுடன் காணப்பட்ட வேளையிலேயே அங்கு திடீரெனத் தோன்றிய 'புக்காரா' விமானம் மூர்க்கத்தனமான முறையில் குண்டுகளை வீசியது. ஸ்தலத்தில் கொல்லப்பட்ட 25 மாணவர்களை விட, காயப்பட்டவர்களில் 9 மாணவர்கள் வைத்தியசாலையில் இறந்துள்ளனர். இதனால் இறந்த மாணவர்களின் தொகை 34 ஆக அதிகரித்துள்ளது. படுகாயமடைந்த மாணவர்களில் மேலும் பலர் இறக்கக் கூடுமென அஞ்சப்படுகின்றது.

இறந்த மாணவர்களில் 21 பேரின் சடலங்கள், இரத்த வெள்ளத்தினுள்ளே பெரும் சிரமத்தின் மத்தியிலேயே அடையாளம் காணப்பட்டுள்ளது. இவர்கள் யாவரும் 10 தொடக்கம் 17 வயது வரையிலான மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அடையாளம் காணப்படாத மாணவர்களின் உடல்கள் மிக மோசமான முறையில் சிதைவுற்று, அங்கு காணப்பட்ட மரக்கிளைகளில்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# காங்கேசன்துறை துறைமுகத்துள் விடுதலைப்புலிகளின் மூன்றாவது தாக்குதல்

ஈழப்போர் 3 ஆரம்பமான பின்னர் காங்கேசன்துறை துறைமுகத்தினுள் விடுதலைப் புலிகள் நுழைந்து நடத்திய மூன்றாவது தாக்குதல் 20-09-95 இல் இடம்பெற்றது. கடும் பாதுகாப்புடன் கூடிய காங்கேசன்துறைத் துறைமுகம், யாழ்ப்பாணத்தில் நிலைகொண்டுள்ள படையினருக்கு உணவு மற்றும் ஆயுத விநியோகங்களை வழங்கும் துறைமுகமாகும். மூன்றாவது ஈழப்போர் ஆரம்பித்ததில் இருந்து துறைமுகத்தினுள் விடுதலைப் புலிகள் இதுவரை நுழைந்து தாக்கியதில் ஒரு கட்டளைக் கப்பல், 516 ரக படகு, தரையிறங்கு கப்பல், டோராப் படகு என்பன அழிக்கப்பட்டுள்ளன. 67 நாட்களுக்குள் இத் தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

20-09-95 இல் காங்கேசன்துறை மற்றும் மாதகல் கடற்பரப்பில் மூண்ட பெரும் சமரின் போது, கடற் கரும்புலிகள் நடத்திய தாக்குதலில் வீரச்சாவடைந்த மேஜர் அன்பு, மேஜர் கீர்த்தி, கப்டன் சிவா, கப்டன் செவ்வானம் ஆகியோரின் திருவுருவப் படங்களைத் தாங்கிய ஊர்தி, யாழ் குடா நாடெங்கும் பவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. மேஜர் கீர்த்தியின் நினைவுக்கல் 23-09-95 அன்று 9.00 மணிக்கு கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திலும், மாலை 4.00 மணிக்கு மேஜர் அன்பு அவர்களின் நினைவுக்கல் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்திலும், 24-09-95 அன்று மாலை 4 மணிக்கு கப்டன் சிவா, கப்டன் செவ்வானம் ஆகிய இருவரது நினைவுக்கற்கள் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்திலும் சகல இராணுவ அணிவகுப்பு மரியாதைகளுடன் நாட்டப்பட்டன.

# யாழ் நகரில் வரலாறு காணாத மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி

ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் யாழ் குடாநாட்டில் இடம் பெற்ற கண்டனப் பேரணியில் கலந்து கொண்டனர். 29.09.95 காலை 10.40 மணியளவிற் கடல் வெள்ளம் போல் பெருகிய மக்கள் சிறீலங்கா அரசின் கண்மூடித்தனமான, மிலேச்சத்தனமான, பொதுமக்களுக்கும், மாணவர்களுக்கும் எதிரான தாக்குதல்களையும், இனப் படுகொலைகளையும் கண்டிக்கும் கோசங்களை எழுப்பினர். இதில் வெகுசன அமைப்புப் பிரதிநிதிகள், மதகுருமார்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், கூட்டுறவாளர்கள், வணிகர் கழகங்கள், வணிக ஊழியர் சங்கங்கள், தொழிற் சங்கங்கள், அரச, கூட்டுத் தாபன, உள்ளூராட்சி ஊழியர்கள், விளையாட்டுக் கழகங்கள், ஏனைய பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரும் கலந்து கொண்டனர்.

இப்பேரணியிற் கலந்து கொண்ட மாணவர்கள் கடந்த 22 ஆம் திகதி நாகர் கோயில் மகா வித்தியாலயத்திற் குண்டு வீசிக் கொல்லப்பட்ட மாணவர்களின் இரத்த உடல் அவயவங்களின் படங்களை ஏந்தியவாறு கோசங்களை எழுப்பிச் சென்றனர்.

யூ. என். எச். சி. ஆர், ஐ. சி. ஆர்.

தொடர்ச்சி 12 ஆம்பக்கம்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

www.tamilarangam.net



# பாதுகாப்பு நிதிக் கூட்டத்தில் பல இலட்சம் ரூபா நிதி அன்பளிப்பு

அண்மையில் நடைபெற்ற தமிழீழ தேசியப் பாதுகாப்பு நிதிப்பரப்புரைக் கூட்டங்களில் தேசிய பாதுகாப்பு நிதிக்கு பொது நிறுவனங்களினாலும், பொதுமக்களினாலும் 13 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா அன்பளிப்புச் செய்யப்பட்டது. அண்மையில் நீர்வேலிப்பகுதி அரசகேசரிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நடை-பெற்ற மேற்படிக் கூட்டத்தில் வைத்து 24 பொதுமக்கள் தமது அன்பளிப்புத் தொகையாக ஏழு இலட்சத்து இருபத்தையாயிரம் ரூபாவினை தமிழீழ நிதிப் பொறுப்பாளர் செ. தமிழேந்தியிடம் கையளித்தனர்.

இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவிலடியில் நடைபெற்ற கூட்டத்தில் 21 பேர் ஆறு இலட்சத்து அறுபதினாயிரரூபாவினை அன்பளிப்பாக, தமிழீழ நிதிப் பொறுப்பாளரிடம் கையளித்தனர். இணுவில் சிறி பரராசசேகரப் பிள்ளையார் கோவில் சார்பாக பிரதம குரு. சிவசிறி. வை. சோமஸ்கந்த குருக்கள் ஒரு இலட்சத்து ஐயாயிரம் ரூபாவினையும், ஏழாலை தெற்கு களவாவோடை அம்மன் கோவில் சார்பாக நித்தியானந்தன் வசந்தகுமார் ஒரு இலட்சம் ரூபாவினையும், உடுவில் பாலாவோடையைச் சேர்ந்த ஆறுமுகம் சண்முகநாதன் ஐம்பதாயிரம் ரூபாவினையும், இணுவிலில் நடை-பெற்ற தேசிய பாதுகாப்பு நிதிப்பரப்புரைக் கூட்டத்தில் வழங்கினர்.

நீர்வேலிப் பகுதியில் நடைபெற்ற கூட்டத்தில் உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த இராமன் செல்லையா அறுபதினாயிரம் ரூபாவினையும், நீர்வேலி மேற்கைச் சேர்ந்த தம்பையா இராசரத்தினம் ஐம்பதினாயிரம் ரூபாவினையும் வழங்கினர்.

நீர்வேலி கந்தன் ஆலய நிர்வாகத்தினர் மண் மீட்கும்புனிதப் பணிக்கு ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளனர். தமது ஆலயத்திலிருந்து மேலும் பங்களிப்புச் செய்ய முடிவு செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

வல்வை முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் அண்மையில் நடைபெற்ற தேசிய பாதுகாப்பு நிதி பரப்புரை வைபவத்தில், வல்வை முத்துமாரியம்மன் சார்பாக 10 இலட்சமும், ஏனைய பொது அமைப்புகளும், விடுதலை விரும்பிகளுமாக 6 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய்களும் வழங்கியுள்ளனர்.

தென்மராட்சியில் தனியார் கல்வி நிறுவனம் ஒன்று நாலரை இலட்சம் ரூபாவை, 'டிறிபேக்' கல்லூரியில் இடம்பெற்ற திலீபன் நினைவுநாள் வைபவத்தில் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் தமிழேந்தியிடம் வழங்கியுள்ளது.

தனிப்பட்ட மக்கள் பலரும் தாமாகவே தேசிய பாதுகாப்பு நிதிக்கு தம்மால் இயன்றளவு நிதியை, மனமுவந்து கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

தம்பசிட்டி பருத்தித்துறை பண்டாரி அம்மன் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற தமிழீழத் தேசியப் பாதுகாப்பு நிதிப் பரப்புரைக் கூட்டத்தினபோது மாவீரர் ஒருவரின் தந்தையும், சட்டத்தரணி ஒருவரும், இன்பருட்டிச் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச் சங்கத்தினரும் தலா 50 ஆயிரம் ரூபா வீதமும் பருத்தித்துறை கொட்டடிச் சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினர் 25 ஆயிரம் ரூபாவையும் தேசிய பாதுகாப்பு நிதியாகத் தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தியிடம் கையளித்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர் திரு. ராஜன் தலைமையில் நடைபெற்ற இத் தேசியப் பாதுகாப்பு நிதிப் பரப்புரைக் கூட்டத்தின்போது தமிழீழ நிதிப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி அவர்கள் உரையாற்றி முடிவடைந்தவுடன் இந்தத் தேசிய பாதுகாப்பு நிதி வழங்கல் இடம்பெற்றது.

இதன்போது தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் முன்னாள் மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி கடற்கரும்புலி லெப். கேணல் நளாயினியின் தந்தையான முருகுப்பிள்ளை ஆறுமுகசாமி 50 ஆயிரம் ரூபாவைத் தேசிய பாதுகாப்பு நிதிக்காக வழங்கினார். இந்நிதியை அவரது மகள் தமிழீழ நிதிப் பொறுப்பாளரிடம் கொடுத்து அதற்கான பத்திரத்தைப் பெற்றார். அடுத்துச் சட்டத்தரணியான திரு. செல்லத்தம்பி கணேசராசா 50 ஆயிரம் ரூபாயும், இன்பருட்டிச் சிக்கனக் கடனுதவு கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் அதன் செயலாளர் திரு. க. சூரியகுமார் 50 ஆயிரம் ரூபாவையும், பருத்தித்துறை கொட்டடிச் சித்தி விநாயகர் ஆலயச் சார்பில் அதன் பரிபாலன சபைத் தலைவர் திரு. முருகுப்பிள்ளை தணிகாசலம் 25 ஆயிரம் ரூபாவையும் தேசியபாதுகாப்பு நிதிக்கு வழங்கினார்கள்.

# தமிழ் மக்கள் தரும் 100 கோடி ரூபா எமது போராற்றலை மேம்படுத்தும்

## -நிதித்துறை பொறுப்பாளர் தமிழேந்தி தெரிவிப்பு

இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் ஏழை-எளிய-நடுத்தர மக்கள் நிறையப் பேர் பங்களித்துக் கொண்டிருக்கிறார்கள் என நிதித்துறைப் பொறுப்பாளர் திரு. தமிழேந்தி தெரிவித்தார்.

புத்தூர் சனசக்தி சனசமூக நிலையத்தில் புத்தூர் - வேம்பிராய் மக்களும் கோப்பாய் உதவி அரச அதிபர் பிரிவிலிருந்து தேசிய பாதுகாப்பு நிதி செலுத்த வந்திருந்த ஏனைய மக்களிடையேயும் அண்மையில் நடைபெற்ற நிதிப்பரப்புரைக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

அன்றாடம் உழைக்கும் பணத்திலிருந்து இந்த மக்கள் விடுதலைப் போராட்டத்திற்குப் பங்களிப்புச் செய்யப் போகின்றார்கள் என்று அறிவிக்கப்பட்டபோது உண்மையில் - நாங்கள் அந்தப் பணத்தைப் பெறக்கூடாது என்ற நிலையிலேயே இருந்தோம்.

அந்த மக்கள் அன்றாடம் உழைத்துச் சிறுகச் சிறுகத் திரட்டிய காசைப் பெற நாங்கள் விரும்பவில்லை. பின் நாங்கள், அவர்களின் உள்ளங்களைப் புண்படுத்தக் கூடாதென்ற நோக்கிலும், அவர்களின் நாட்டுப் பற்றையும், விடுதலை வேட்கை யையும் மதிக்க வேண்டுமென்ற நோக்கிலுமே பெற்றுக் கொள்வதென முடிவு செய்தோம்.

உண்மையிலேயே இந்த மக்களுடைய இன உணர்வை - நாட்டுப்பற்றை எண்ணி நாங்கள் பெருமைப்படுகிறோம். அவர்களுடைய கிராமத்திற்குச் சென்று நன்றி கூறவேண்டும் என்ற எண்ணத்தில் - அந்தக் கிராமத்தில் இந்த நிகழ்வு நடக்க வேண்டும் என விரும்பினோம். ஆனால் அந்த நிகழ்வு இன்று அங்கு நடைபெற முடியாத நிலை ஏற்பட்டதற்காக வருந்துகிறோம்.

தலைவரை நான் சந்திக்கும் போது, முதலில் இந்த நிகழ்வைத் தான் சொல்லுவேன். இந்த மக்களின் மண்பற்றைப் பற்றித் தலைவருக்கு எடுத்துக் கூறுவேன்.

இந்த நாட்டினுடைய விடுதலைப் போராட்டத்தில் ஏழை-நடுத்தர மக்கள் நிறையப் பேர் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றார்கள். வசதி படைத்தவர்களில் நிறையப் பேர் இந்தப் போராட்டத்தோடு ஒன்றிணைந்து நிற்பினும் ஒரு சிலர் இன்றும்கூட எட்டி நிற்கின்றனர். இந்த நிலை மாற வேண்டும்.

சிறீலங்கா அரசிடமிருக்கும் போர்த் தளபாடங்களில் கால் பங்கு எம்மிடம் இருப்பின் மிகக்குறுகிய காலத்திலேயே நாம் எமது மண்ணை மீட்டெடுக்கலாம். அந்த வகையிலே நாங்கள் தமிழ் மக்களிடமிருந்து நூறுகோடி ரூபா திரட்டுவதற்கு முடிவு செய்திருக்கின்றோம். இன்று நீங்கள் ஏறக்குறைய ஐந்து இலட்சம் ரூபாவைத் தந்திருக்கின்றீர்கள். இந்தப் பணம் எல்லாம் சேர்த்து 100 கோடி ரூபாவாகத் திரளுகின்ற போது, நாம் பெரும்போர் ஆற்றலைப் பெற்று எதிரியை முறியடிப்போமென்றார்.

# அரசியற் தீர்வுத் திட்டத்திற்கு எதிராக கொழும்பிலிருந்து கதிர்காமத்திற்கு பிக்குகள் முன்னின்று பேரணி

சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா அறிவித்துள்ள தீர்வுத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கி அண்மையில் வாகனப் போராட்ட ஊர்வலமொன்று நடத்தப்பட்டது.

தமிழ் மக்களுடன் அதிகாரப் பரவலாக்கல் செய்யும் அரசின் யோசனைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நடத்தப்பட்ட இந்தப் பேரணியில் சமார் நானூறு பேர் கார்கள், பஸ்கள் மற்றும் வாகனங்களுடன் கலந்து கொண்டதாகவும் பௌத்த மதகுருமார் இந்தப் பேரணியை முன்னின்று நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறீலங்கா பௌத்த சம்மேளன தலைமை அலுவலகத்தின் முன்னால் இவ்வூர்வலம் தொடங்கியது. பல இடங்களில் இவ் வாகனங்கள் தரித்து நிற்கும்போது, மேலும் பலர் ஊர்வலத்தில் இணைந்தார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஊர்வலம் கதிர்காமம் கரி விகாரையை அடைந்ததும் அங்கு நடைபெற்ற விசேட பூசைக்குப் பின்னர் ஒருநாள் அடையாள உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை அதிகாரப் பரவலாக்கலுக்கு தான் ஒருபோதும் எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை என்றும் நாடு பிளவுபடுவதை தடுப்பதற்காகவே கதிர்காமம் நோக்கி வாகன ஊர்வலத்தை நடத்தத் திட்டமிட்டதாகவும் இவ் ஊர்வலத்தை ஏற்பாடு செய்ய மக்கள் ஐக்கிய முன்னணியின் தலைவர் தினேஸ் குணவர்த்தனா தெரிவித்துள்ளார். அரசு தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறியுள்ளது இதனை நாம் கண்டிக்கிறோம் என தினேஸ் குணவர்த்தனா மேலும் தெரிவித்துள்ளார்.

## நான்கு மாத போரில் 1100 படையினர் பலி

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய-தின் பின்னர் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் 1104 சிறீலங்காப் படையினருக்கு மேல் உயிரிழந்துள்ளதுடன் பல நூற்றுக்கணக்கானோர் அங்கவீனமும் அடைந்துள்ளனர்.

அண்மையில் முடிவடைந்த இந்த நான்கு மாத காலப்போரில் 889 இராணுவத்தினரும், 72 பொலிசாரும், 22 கடற்படையினரும், 06 ஊர்காவற் படையினரும் கொல்லப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திலீபன் 8 ஆம் ஆண்டு நினைவு நாள்

## தமிழீழத்ததில் உணர்வுடன் நினைவு கூரப்பட்டது

தியாகி திலீபனின் 8ஆம் ஆண்டு நினைவுநாள் கடந்த 26-09-1995 அன்று தமிழீழத்தின் பல பாகங்களிலும் எழுச்சிபூர்வமாக நினைவு கூரப்பட்டது. யாழ். குடாநாட்டில் வலிகாமத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலிலும், வடமராட்சியிலும், தென்மராட்சியிலும் உண்ணாவிரதம், நினைவுப் பொதுகூட்டங்கள் ஆகியன இடம்பெற்றன. ஆயிரக்கணக்கில் மக்கள் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நல்லூர் கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் திரு. வே. பாலகுமாரன் 'சிங்கள இராணுவம் எதைச் செய்தும் எமது போராட்டத்தை வெல்ல முடியாது, இந்தியப்படையால் எம்மை வெல்லமுடியவில்லை, இதேபோல் சிங்களப்படையும் தோற்கும்' எனத் தெரிவித்தார். கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் உரை நிகழ்த்தும் போது 'போராளிகளைப் போன்று அனைவரும் தியாக உணர்வு உடையவர்களாக இருக்க வேண்டும், இலட்சிய உணர்வு உள்ளவர்களே போராட்டத்திற்கு வலுச்சேர்க்கின்றார்கள்' என்று குறிப்பிட்டார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தப்பிக்க ஒரே வழி

இன்று சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா தலைமையிலான பொஐ.மு அரசின் முழுக்கவனமும் போரப்பக்கமே திரும்பி உள்ளது. மறு வடிவமாகக் கூறுவதானால், சந்திரிகா அரசிற்கு போர் அவசியமானதொன்றாக மாறி உள்ளது. ஐ.தேக அரசின் இறுதி ஆண்டுகளிலும் இதே போன்றே போர் அவசியமாக இருந்தது. நாட்டில் பல்கிப் பெருகிவிட்ட பல்வேறு பிரச்சினைக-ளிற்கு ஐ.தேக அரசு போரையே வழிகாலாகக் கொண்டது. எப்பொழுது போர் நிற்கின்றதோ அப்பொழுதே ஐ.தேக அழிந்துபோகும் என அரசியல் நிபுணர்கள் அன்று தெரிவித்தனர். அந்த அளவிற்கு ஐ.தேக அரசின் இறுதி ஆண்டுகள் மோசமானவையாக இருந்தன. மோசடி, ஊழல், சட்ட ஒழுங்கு சீர்குலைந்து விலைவாசி ஏற்றம், பொருண்மிய நெருக்கடி என்பன மீளமுடியாத பிரச்சினைகளாக, அரசு திக்குத் திணறியது.

வெளிநாட்டு உதவிகள் கணிசமாகக் கிடைத்தபோது, இந்த நிலையில்தான் ஐ.தேக அரசம் போரைத் தக்க வைத்திருக்க முனைந்தது. அரசின் முக்கிய குறிக்கோள் என்பது நாட்டின் அனைத்து விடயங்களிலும் புலிகளிற்கு எதிரான போரே விபரிக்கப்பட்டது. ஆயுத படைப்பலம் பற்றியும், போர்வெற்றி பற்றியும் அதற்கான காலவரையறை பற்றியும் திட்டம் தீட்டப்பட்டது. ஐ.தேக அரசு போரில் வெற்றி பெறமுடியாது என்பதைத் தெளிவாகவே உணர்ந்திருந்தது. வெல்ல முடியாது என இராணுவமும் சோர்வடைந்திருந்தது. இதனை ஐ.தேக அரசு பெரும்படை எடுப்பை எடுக்காததிலிருந்தே புரிந்து கொள்ளலாம். எனினும் போரைக் கைவிடுவது பற்றியோ, சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்துவது பற்றியோ அரசு யோசிக்கவில்லை. அது தற்கொலைக்கு ஒப்பானது என அரசு கருதியது. இந்நிலையில்தான் ஐ.தேக அரசு தேர்தலில் தோல்வி கண்டது. பொஐ.மு இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் அரசியல் தீர்வு காணலாம் என வாக்குறுதி அளித்தது. பொஐ.முன்னணியின் இவ் வாக்குறுதியைச் சிங்கள மக்களும் நம்பினர். ஏனெனில் போரில் வெற்றி பெறுவது சாத்தியமல்ல என பொஐ.முன்னணியே பிரச்சாரம் செய்தது. ஆனால் சந்திரிகா பொறுப்பேற்று 5 மாத காலத்திற்குள் மீண்டும் போர் வெடித்தது. சந்திரிகா அரசு இனப்பிரச்சினை தொடர்பாக முன்னேற்றமான எதனையும் கொண்டிருக்காமல் இருந்தமையே இதற்குக் காரணமாகியது. ஆனால் மோதல் தவிர்ப்பு காலத்தில் சந்திரிகா அரசு போரிற்கே தயாராகிக் கொண்டிருந்தது. அதாவது சந்திரிகா அரசு பதவி ஏற்று 5 மாத காலத்துள் அரசு எதிர்கொண்ட நெருக்குதல்களிற்கு வழிகால் ஒன்று தேடவேண்டி இருந்தது. இந்நெருக்கடிகள் அனேகமாக ஐ.தேக அரசு எதிர்கொண்ட நெருக்கடிகள் போன்றே இருந்தன. இதற்கு, அரசிற்குத் தெரிந்த ஒரே வழியாக இருந்தது, போரைத் தொடரும் ஆட்சி முறையே ஆகும். இதன்மூலம் மீண்டும் சகலரின் கவனத்தையும் போரின் பக்கம் திருப்புவதும், அதன்மூலம் தமது நெருக்கடிகளைத் தவிர்த்துக் கொள்வதும் நோக்கமாக இருந்தது. சந்திரிகா அரசு எதிர்பார்த்தது போன்று சனாதிபதி ஆட்சிமுறை உட்பட, கொடுத்த வாக்குறுதிகள் யாவும் போரினால் மூடிமறைக்கப்பட்டது. பேச்சுவார்த்தை மூலம் சமாதானத் தீர்வைக் கொண்டு வரப்போவதாகக் கூறி ஆட்சிக்கு வந்த அரசு, சிங்கள சமூகத்தை வெண்தாமரை இயக்கம் போன்றவற்றால் போரில் இறக்கியுள்ளது. சந்திரிகா அரசின் சிந்தனைகள் யாவும் போரைப் பற்றியே உள்ளது.

முக்கிய கட்டமாக மார்கழி மாத இறுதிக்குள் போரில் வெற்றி பெறுவோம் என ஆளும் கட்சி அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். இதேவேளை போரால் நாடே குட்டிச் சுவராகி உள்ளது என பிரச்சாரம் செய்து ஆட்சிக்கு வந்த சந்திரிகா, அடுத்த ஆண்டு பாதுகாப்புச் செலவை 2400 கோடியிலிருந்து 3390 கோடியாக அதிகரிக்க உள்ளார். அதாவது இராணுவ செலவீட்டை அதிகரிப்பதன் மூலம் போரை விஸ்தரிக்க முனைகிறார். இந்த நிலையானது ஐ.தேக அரசு இறுதிக் காலத்தில் செய்ததைச் சந்திரிகா அரசு தொடக்கத்திலிருந்தே செய்து வருகின்றது எனலாம். ஆகையால் சந்திரிகா அரசு எதிர்கொள்ளும் போரிலிருந்து மீளும்வரை போரைக் கைவிடப் போவதில்லை. போரே அரசிற்கு வாழ்வளிக்கப் போகின்றது. இந்த நிலையானது சிங்களவர்கள் போரை முற்றாக நிராகரிக்கும் வரை தொடர்ந்தும் இருக்கும்.

# பிரான்சைச் சேர்ந்த MSF சர்வதேச வைத்தியக் குழு வழங்கிய செவ்வி

பிரான்சைச் சேர்ந்த MSF சர்வதேச வைத்தியக் குழுவின் வடமராட்சிக்கிளைச் செயலகம் கடந்த முதலாம் வாரத்தில் வடமராட்சியில் நடந்த குண்டுவீச்சு மற்றும் பலாலி முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட எறிகணைத்தாக்குதலால் உயிரிழந்த, படுகாயமடைந்த, நிரந்தரப் பாதிப்புற்ற மக்களின் நிலையினை நேரிற் கண்டு அவர்களுக்கு வைத்திய உதவி புரிந்துள்ளதுடன் கொழும்பில் உள்ள தலைமை அலுவலகத்தின் ஊடாக வடமராட்சியில் இடம் பெற்ற அட்டூழியங்களின் போது பாதிப்புற்றவர்களின், மரணமடைந்தவர்களின் நிலைமை பற்றிச் சர்வதேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தது. உலகமே அறியும் வண்ணம் செய்துள்ளது. இவ்வாறான மனித நேயம் படைத்த திருமதி மரீட் அம்மையார் தலைமையிலான MSF வைத்தியக் குழுவினரை வடமராட்சியில் உள்ள புலோலி, பருத்தித்துறையில், அவர்களது காரியாலயத்தில் வைத்துக் கண்ட பேட்டியின் விபரம் வருமாறு-

கே - வடமராட்சியில் அண்மையிற் சிறீலங்கா படையினரின் அனர்த்தங்கள் பற்றி உங்கள் தலைமைச் செயலகத்தினூடாகச் சர்வகேச மன்னிப்புச் சபையிடம் தெரிவித்தீர்கள். இதனால் ஏதும் நன்மை உண்டா!

ப - அது எமது நிறுவனத்தின் கடமையும் மனிதாபிமான நடவடிக்கையும் கூட. மேலும் நாம் அப்படித் தெரிவித்ததனாற் சர்வதேச அரங்கில் உண்மை நிலை தெரியவும் நியாயம் கேட்கவும் ஒரு வாய்ப்பு ஏற்படலாம்.

கே : அந்த அசம்பாவிதத்திற்கு ஏதாவது பரிகாரம் உண்டா!

ப : பொசனியா, ஆப்கானித்தான், தன்சானியா போன்ற நாடுகளில் இது போன்ற கொடூரச்செயல்கள் நடந்து வருகின்றன. ஆனால் எமது கடமை உண்மை நிலைப்பாட்டைச் சர்வதேச அரங்கில் அறிவிப்பதோடு சரி. ஆனால்- அதற்கு அங்கு என்ன நடக்கிறது என்று தெரியாது

கே : இவ்வாறான செயலால் பாதிக்கப்படும் மக்கள் நிம்மதியாக வாழ முடியாதா!

ப : இங்குள்ள எமது நிறுவனம் கொழும்பிலுள்ள பொது அலுவலகத்திற்கும், அதனுடாக ஜெனீவாவிலுள்ள தலைமைச் செயலகத்துடனும் தொடர்பு கொண்டு நிலைமைகளைத் தெரிவிப்பதன் பலனாக எமது சர்வதேச நிறுவனமும் சர்வதேச மன்னிப்புச் சபையும் மக்களைக் காப்பாற்றும்படி சிறீலங்கா அரசைக் கேட்கும். இதனால் மக்களுக்கு ஓரளவு நிம்மதி கிடைக்க வழி ஏற்படலாம்.

கே : சிறீலங்கா இராணுவத்தினால் அப்பாவி மக்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைச் சம்பவங்களுக்குக் காரணம் எதுவாக இருக்கும் எனக் கருதுகிறீர்கள்!

ப : அது பற்றி எங்களுக்கு எதுவும் தெரியாது.

கே : கடந்த வாரம் 22-09-95 அன்று வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் இடம் பெற்ற வெவ்வேறு நிகழ்வுகளின் போது புக்காராக்களின் கண்மூடித்தனமான தாக்குதலால் பல மாணவர்கள், சிறுவர்கள், ஆசிரியர்கள் இறந்ததும் பலர் படுகாயமடைந்த நிலையில் லொறிகளிலும், வாகனங்களிலும், அம்புலன்சு வண்டிகளிலும் குவியலாகப் பருத்தித்துறை அரசி-னர் ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுச் சீமேந்து நிலத்திலும், கட்டில்களிலும், பிரேத அறைகளிலும் குவிக்கப்பட்டதைத் தாங்கள் நேரிற் கண்டபோது என்ன தோன்றியது!

ப : அவர்களுக்கு வேண்டிய வைத்திய உதவி-களை மட்டுமே செய்வது எமது கடமையாக இருந்தது. மேலும் இது பற்றி நாம் ஒன்றும் கூற முடியாதுள்ளது.

கே : இராணுவ நடவடிக்கைகளினால் மாணவர்களினதும, குழந்தைகளினதும் அறிவு வளர்ச்சியும் உளவியல் ரீதியான தாக்கமும் ஏற்படாதா!

ப : உளவியல் ரீதியாக நிச்சயம் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் எமது கடமை வைத்திய உதவி செய்வது மட்டுமே.

கே : சிறீலங்கா அரசின் படைகளாற் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பேரிழப்புக்கள், பாதிப்புக்கள் போன்றவற்றைத் தாங்கள் நேரிற் கண்டுள்ளீர்கள். இச்சம்பவங்களில் இறந்த மக்களைக் காப்பாற்றத் தாங்கள் தங்கள் தலைமைச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு மக்கள் பாதிப்படையாமல் இருக்க ஏதாவது வழிவகைக-ளைப் பெற்றுத் தர முடியாதா!

ப : தாக்குதல் இழப்புக்கள், பாதிப்புக்கள் பற்றி எமது தலைமைப்பீடத்திற்கு மனிதநேயத்துடன் தெரிவிப்பதும் வைத்தியப் பணியைப் புரிவதும் தான் எமது கடமை. ஆனால் இதைப் பற்றி எமது தலைமைச் செயலகம் விரும்பினால் ஏதாவது நன்மை செய்யலாம்.

கே : சந்திரிகா அரசும், சிறீலங்கா இராணுவமும் நாகர் கோவில் மகா வித்தியாலயம் மாணவர் படுகொலையை, தங்களது செய்தி நிறுவனங்கள், பத்திரிகைகள், தொலைக்காட்சிகளின் மூலம் விடுதலைப்புலிகளின் முகாம் மீது தாக்குதல் நடத்தியதாகவும், இறந்தவர்கள் அனைவரும் விடுதலைப்புலிகள்தான் என்றும் மாணவர்கள் பொதுமக்கள் அல்ல என்றும் தெரிவிக்கின்றது. இத்தாக்குதலில் இறந்தவர்களையும், காயமுற்றவர களையும் நீங்கள் நேரில் இனங்கண்டுள்ளீர்கள். எனவே இதுபற்றி என்ன கூறுகிறீர்கள்!

ப : நாகர் கோவிலில் நடந்த தாக்குதல் பற்றி நாம் நன்கு அறிவோம். எனினும் அது எமக்குத் தேவையில்லாதது. ஆனால் லொறிகள், அம்புலன்சு வண்டிகள், டிரக்டர்கள் வாகனங்களில் கொண்டு வந்து குவிக்கப்பட்ட 12 வயதுக்குட்பட்ட 24 பாடசாலைச் சீருடை அணிந்த மாணவர்களின் சடலங்களையும், பொதுமக்கள் 20 பேர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் குற்றுயிரும், குறை உயிருமாக எடுத்து வரும்போது இறந்தவர்களின் சடலங்களையும், காயமடைந்த பாடசாலை மாணவர்கள் 150 பேரையும், காயமடைந்த பொதுமக்களையும் நேரிற் கண்டோம். மேலும் 5 சிறுவர்கள் மற்றொரு தாக்குதலின் போது மரணமடைந்து சடலமாகவும், 5 சிறார்களை உயிரிழந்தநிலையிலும் எமது MSF வைத்தியக்குழுவினர் கண்டனர். வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவர்கள் மாணவர்களே. இவர்கள் பொதுமக்களே அன்றி விடுதலைப்புலிகள் அல்ல. இதை நாம் எமது தலைமையகத்துக்கும் சர்வதேச மன்னிப்பு சபைக்கும் தெரிவித்துள்ளோம்.

கே : வடமராட்சியின் பிரதான வைத்தியசாலையாக உள்ள பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையிற் போதிய வைத்தியர் பற்றாக்குறை, மருந்துத் தட்டுப்பாடு, விசேட வைத்தியர் இன்மை போன்ற காரணங்களால் நோயாளர்கள், காயமடைந்தோர் யாழ் வைத்தியசாலைக்கு அனுப்பப்படுகின்றார்கள். வல்லை வெளியினுடாக யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் போது, நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன் உயிரிழப்புக்களும் ஏற்படுகின்றது. இதற்குத் தங்கள் நிறுவனம் மூலம் ஏதும் உதவி செய்து மக்களைக் காப்பாற்றினால் என்ன!

ப : இதில் உண்மையுண்டு, நாம் எம்மால் இயன்ற அளவு எமது தொண்டினைச் செய்து நோயாளரை யாழ் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதைக் குறைத்து. இங்கேயே வைத்தியம் செய்கின்றோம். தலையில் படுகாயமடைந்த, இடுப்புக்கு மேல் மோசமான காயம்பட்ட, நினைவிழந்து உயிராபத்து ஏற்படலாம் என்ற முடிவுக்கு வந்த நோயாளரை மட்டும் யாழ் வைத்தியசாலையிற் கண்ணாடிப் பாதுகாப்பு அறையில் வைத்து விசேட வைத்திய சிகிச்சைக்காக மட்டும் அனுப்புகின்றோம். வைத்தியர்கள் பற்றாக்குறையுள்ளது. சேவை மனப்பான்மையுடன் வருபவர்களையும், ஊதிய அடிப்படையில் வேலை செய்ய விரும்புபவர்களையும் இணைத்து, சேவையாற்றத் தயாராக உள்ளவர்கள் இப்படியாவது முன்வரலாமே என்றும் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# புலிகளே போரிடும் சக்தி தீர்வுக்கு அவர்கள் அவசியம்

## - பொதுஅமைப்புக்கள் ஐ.நா. அதிகாரியிடம் தெரிவிப்பு

'விடுதலைப் புலிகளே தமிழர்களின் உரிமைக்காகப் போரிடும் சக்தியாக உள்ளனர். புலிகளின் பங்களிப்பின்றி எந்த ஒரு தீர்வுத் திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது' என யாழ். மாவட்டத்தில் உள்ள பல்வேறு பொதுஅமைப்புக்களையும் சேர்ந்த பிரதிநிதிகள் யாழ். சென்றிருந்த ஐ.நா. அபிவிருத்தி திட்டமிடல் ஆலோசகர் றோலண்ட் கட்சனிடம் தெரிவித்தனர்.

யாழ். பிரசைகள் குழு, யாழ். மாவட்டம் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், தமிழாசிரியர் சங்கம், யாழ். மறை மாவட்ட நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு, இந்து- கிறிஸ்தவ அமைப்புக்கள், இனங்களிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகளை அவர் சந்தித்த போதே இவ்வாறு எடுத்துக் கூறப்பட்டது.

தற்போது வடபகுதி உணவு நிலைமை, இராணுவத்தின் கொடூரமான தாக்குதல்கள் என்பவை பற்றி இவ் அமைப்புக்கள் ஐ. நா. அதிகாரிக்கு விளக்கியுள்ளனர்.

விடுதலைப் புலிகளே தமிழர்களின் உரிமைக்காக போராடும் சக்தியாக உள்ளனர். புலிகளின் பங்களிப்பின்றி எந்தவோர் தீர்வுத்திட்டத்தையும் நடைமுறைப்படுத்த முடியாது எனவும் அவருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

வடக்கு-கிழக்கில் அரசின் இராணுவ, பொருண்மியத் தடைகளை அகற்றி தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து தமிழரின் பிரதிநிதிகளான புலிகளுடன் பேச்சுநடத்திஇனப்பிரச்சினையைத் தீர்க்க ஐநா. உதவவேண்டும் என யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஐ. நா. அதிகாரியைக் கேட்டுக் கொண்டனர். புலிகளின் போராட்டம் நீதிக்கும், தர்மத்திற்குமான போராட்டம் என வெகுசன அமைப்புகளின் ஒன்றியத் தலைவர் குறிப்பிட்டார். சுயநிர்ணய உரிமைமூலம் எம் மண்ணை பாதுகாக்கவே போராட்டம் நடைபெறுகின்றது. சர்வதேசம் இப்போராட்டத்தை அங்கீகரிக்கும் வகையில் நீங்கள் எமக்கு உதவுங்கள் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதில் புலிகளின் பங்கு முக்கியமானது. எந்தத் தீர்வுத்திட்டமாயினும் புலிகளுடன் பேச்சு நடத்தியே அமுல் செய்ய அரசு முனைய வேண்டும் என தமிழாசிரியர் சங்கப் பிரதிநிதி குறிப்பிட்டார்.

தமிழர் ஆயுதப்போர், உணவுப் போர் என்பனவற்றை ஒரே நேரத்தில் சந்திக்கின்றனர். அரசின் இவ்விரு போர்களும் அப்பாவித் தமிழர்களுக்கு எதிரானது. வரலாற்றில் பல தீர்வுத் திட்டங்களைக் கண்டு நாம் களைத்துவிட்டோம். போராடும் மக்களை கலந்தாலோசியாது பேச்சுக்கள் நடத்தாமல் எத்திட்டத்தையும் அமுல் செய்ய முடியாது. ராஜீவ்-ஜேஆர் ஒப்பந்தத்திலும் சோக அனுபவமே கிடைத்தது. அப்படித்தான் சந்திரிகாவின் யோசனையிலும் ஏற்படும். நாம் தற்காலிக சமாதானத்தை விரும்பவில்லை. தமிழர் பாரம்பரிய பிரதேசத்தைத் தனித் தேசமாக அங்கீகரிப்பதன் மூலமே நிரந்தர சமாதானம் ஏற்படும் என யாழ். மறை மாவட்ட நீதி சமாதான அபிவிருத்தி ஆணைக்குழு பிரதிநிதி தெரிவித்தார்.

இந்து, கிறித்தவ ஆலயங்கள், பாடசாலைகள், பொதுமக்கள் கூடும் இடங்கள் மீது சிறீலங்கா அரசு குண்டு வீசி தமிழ் மக்களை அழிக்கிறது. இதுபற்றி பல மகஜர்களை அனுப்பியும் அரசு கவனிக்கவில்லை என மதகுருமார் தெரிவித்தனர்.

# மட்டக்களப்பில் திலீபன் நினைவுநாள் நிகழ்ச்சிகள்

மட்டக்களப்பில் வாகரை, கதிரவெளி, காயங்கேணி, பனிச்சங்கேணி, மாங்கேணி, மதுரங்குளம், பால்சேனை, குஞ்சங்குளம், மகிழடித்தீவு, ஆயித்தியமலை, கரடியனாறு, இலுப்படிச்சேனை, கன்னங்குடா, மண்குளாவெளி, பாவற்கொடிச்சேனை, கொக்கட்டிச்சோலை, மணற்காடு முதலைக்குடா, வண்ணாச்சியார் வெளி, மண்டபத்தடி போன்ற மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் தியாகி லெப். கேணல் திலீபனின் நினைவுநாள் நிகழ்ச்சிகள் மிகவும் உணர்வுபூர்வமாக நிகழ்ந்துள்ளது. சிறுவர்கள், சிறுமிகள், பெண்கள், முதியவர்கள் என பலதரப்பினரும் ஆயிரக்கணக்கில் கலந்து கொண்டு அடையாள உண்ணா விரதங்கள் மற்றும் அஞ்சலி நிகழ்வுகள் என அந்நிகழ்ச்சிகளைச் சிறப்பித்தனர்.

# இளம் கண்டுபிடிப்பாளருக்கு அறிவியற் கழகம் அழைப்பு

இளம் கண்டுபிடிப்பாளர்களை உருவாக்கும் நோக்கில் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையிலிருந்து உருவாக்கம் பெற்ற மாணவர் 'அறிவியற் கழகம்' புதிய கண்டுபிடிப்புக்களில் ஆர்வமுள்ள மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளித்து ஊக்குவிக்கவுள்ளது.

காங்கேசன்துறை சாலை, கோண்டாவிலில் அமைந்துள்ள மாணவர் அறிவியற் கழகம், மாணவர்களின் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு வழிவகைகளை அளித்து வருகிறது.

இந்த வகையில் தனது செயற்பாட்டைத் தீவிரப்படுத்தும் நோக்குடன் க.பொத. (உயர்தர) தேர்வு எழுதிய, புதிய கண்டுபிடிப்புக்களில் ஆர்வமுள்ள மாணவர்களை அறிவியற் கழகத்துடன் இணைந்து கொள்ள அழைப்பு விடுத்திருக்கின்றார்கள்.

# எங்கள் வாழ்விலே இயல்புநிலை தோன்ற சர்வதேச சமூகம் உடன் உதவவேண்டும்

## - யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் அறிக்கை

யாழ் மாவட்ட வெகுசன அமைப்புக்கள் ஒன்றியம் யாழ்ப்பாணத்தில் வைத்து வெளியிட்ட அறிக்கையில் 'சிறீலங்கா அரசானது இனவாத நோக்குடன் தமிழ் மக்கள் மீது பாரிய ஒடுக்குமுறைகளைத் தொடர்ச்சியாகக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. தமிழ் மக்களுக்கு எதிரான கொடுமைமிகு வன்முறைகளை நிறுத்துமாறு பல தடவைகள் சிறீலங்கா அரசைக் கோரியுள்ளோம். ஆனால், அவை எவற்றையுமே சிறீலங்கா அரசு செவிசாய்க்கவில்லை. தொடர்ந்து சிறீலங்கா முப்படைகளின் தாக்குதலாலும் விளைந்துவரும் அனர்த்தங்களாலும் தமிழ் மக்கள் படும் இன்னல்கள் பெருகி வருகின்றன. மனித உரிமைகளை மதிக்காது மனிதாயத்தை ஒதுக்கி விட்டு தமிழ் மக்களை அழிப்பதற்கான நடவடிக்கைகளை முடுக்கி விட்டிருக்கின்றது. இச் செயற்பாடுகளின் உச்சக்கட்டமாக கடந்த 22 - 09 -1995 முதல் வடமராட்சிப் பகுதிகளில் பரவலான விமானக் குண்டுவீச்சுக்களும் எறிகணை வீச்சுக்களும் பெருமளவில் மேற்கொள்ளப்படுகின்றன. நாகர் கோயில் மத்திய மகாவித்தியாலயம் வெட்டவெளியில் அமைந்துள்ளது. பாடசாலையில் மேல் வெள்ளைக் கொடி பறக்க விடப்பட்டுள்ளது. பாடசாலை எளிதில் இனங்காணக்கூடியதாக இருந்தது. அப்படி இருந்தும் பாடசாலையைச் சுற்றி 22 -09 - 1995 வெள்ளிக்கிழமை அன்று நண்பகல் விமானக் குண்டுவீச்சு பலமுறை நடத்தப்பட்டுள்ளது. பிள்ளைகள் ஓடிய நேரத்தில் வெள்ளைச் சீருடை அணிந்தவர்கள் மாணவர்கள் என அறிந்தும் இவர்கள் மீது விமானக் குண்டுவீச்சு நடைபெற்றுள்ளது. இது மிகக் கொடூரமான செயலாகும். இச்சம்பவத்தில் 25 மாணவர்கள் அவ்விடத்திலேயே உடல்சிதறிப் பலியானார்கள். பிள்ளைகளைத் தேடிச் சென்ற பெற்றோர்களில் 12 பேர் பின் எறிகணை வீச்சுக்குப் பலியானார்கள். வடமராட்சிப் பகுதியில் பரவலாக நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சினால் 40 பேர் பலியானார்கள். 160க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். சிறீலங்கா அரசு தொடரும் ஈவு இரக்கமற்ற மனித நியாயமற்ற கொடூரங்களைச் சர்வதேச சமூகமும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருப்பதைத் தவிர்த்து சிறீலங்கா அரசின் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும் என்பது மனிதாயத்தின் அடிப்படையில் மிகமிக அவசியமானது ஆகும். சிறீலங்கா அரசுக்கான ஆயுத விநியோகமும் முற்றாக தடுக்கப்பட வேண்டும். திட்டமிட்ட அரக்கத்தன்மையான இத் தாக்குதல்களை உடனடியாக நிறுத்தவும் தமிழ் மக்களாகிய எம் வாழ்க்கையில் இயல்புநிலை தோற்றுவிக்கப்பட சர்வதேச சமூகம், சிறீலங்கா அரசின் மீது தனது அழுத்தங்களை ஏற்படுத்த வேண்டும்' என வற்புறுத்தப்பட்டுள்ளது.

# சுவிசில் தியாகி திலீபனின் ஞாபகார்த்த எழுச்சி விழா

சுவிசின் பாசல் நகரில், தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளையினரால் தியாகி திலீபனின் 8ஆம் ஆண்டு நிறைவு எழுச்சி விழா நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு, சுவிசின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான தமிழீழ மக்கள் வருகை தந்திருந்தனர். அமைதி வணக்கத்தைத் தொடர்ந்து தேசியக் கொடியேற்றல், நினைவுச் சுடரேற்றலுடன் தொடங்கிய விழாவானது எழுச்சி நடனங்கள், பேச்சுக்கள், கவிதைகள், நாடகங்கள், காவடியாட்டம், எழுச்சி கானங்கள் என அமைந்தன.

பாசல் கலாநிகேதன் நாட்டியாலய மாணவிகளும், சூரிச் தமிழ் சிறுவர் பாடசாலை மாணவிகளும் லுசேர்ன் நாட்டிய கலையரங்க மாணவிகளும் சிறப்பாக எழுச்சி நடனம் ஆடி மக்களின் கரகோசங்களைப் பெற்றனர்.

தொடர்ந்து வந்த 'அபலை' என்ற சிறுவர்களின் நாடகம், புலம்பெயர்ந்து வாழும் எம்மவர்களின் வாழ்க்கைப் பிரச்சினைகளை படம்பிடித்துக் காட்டியது. இந்நாடகம் சுவிசில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 10 ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்ட நாடகப் போட்டியில் இரண்டாம் இடத்தையும், சிறந்த நடிகர், நடிகை தெரிவில் இதில் நடித்தவர்களே முதல் இடங்களைப் பெற்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இந் நாடக முடிவில் சிறந்த நடிகர், நடிகைக்கான பரிசினை தமிழீழ விடுதலைப் புலிகளின் சுவிஸ் பிரதிநிதி திரு. ந. முரளிதரன் அவர்கள் வழங்கினார். இந்நாடகத்தினை நெறிப்படுத்தியவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே.

'எதை மறப்பது' எனும் தலைப்பில் கீழ் மூவர் கவி பாடினார்கள். 'தியாகி திலீபன்' பற்றிப் பேசிய செல்வி நித்தியானந்தன் நீதிவாவின் பேச்சும் நன்றாக இருந்தது. தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, பண்பாட்டுக் கழக சுவிஸ் கிளையினரின் 'பொய்முகங்கள்' எனும் நாடகம் மேடையேறியது. இதைத் தொடர்ந்து சிறப்புரையாற்றிய திருந. முரளிதரன் அவர்கள் தனதுரையில், 'சந்திரிகா அரசு குடாநாடு மீது மேற்கொள்ளவுள்ள இராணுவ நடவடிக்கையை முறியடிக்க தமிழீழ தளத்திலே தேசிய பாதுகாப்பு நிதி சேகரிக்கப்படுகின்ற இன்றைய காலகட்டத்திலே இங்கு இடம் பெயர்ந்து சாதகமான சூழ்நிலையிலே வாழுகின்ற தமிழீழ மக்களும் தமது முழுமையான பங்களிப்பை செலுத்தி விடுதலைப் புலிகளின் கரங்களை பலப்படுத்துவதன் மூலம், தமிழீழ தேசியத் தலைவரின் வழிகாட்டலில் சந்திரிகா அரசின் இனஅழிப்பு நடவடிக்கையை முறியடிக்க முடியும்' என்றார்.

கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாசல் 'சங்கமம்' இசைக் குழுவினர் 20ற்கும் மேற்பட்ட தமிழீழ எழுச்சிப் பாடல்களை பாடியதுடன், இம் மேடையிலேயே நான்கு புரட்சிப் பாடகர்களையும் அறிமுகப் படுத்தினார்கள். இசையமைப்பு, பாடகர்கள் மிகவும் திறமையான முறையில் இசை நிகழ்ச்சியை அமைத்திருந்தார்கள். தேசியக் கொடி இறக்கல் வைபவத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.

## சங்கடப்படலை

### துள்ளியெழு தம்பி துணிந்து

சண்டையெனச்சொல்லித்
தமிழ் நிலத்தைத் தீயிலிடக்
கொண்டுவந்து படையைக் குவிக்கின்றான்.
குண்டெறிந்து
கொல்லவரும் பகையைக்
கொல்வோம்; என நிமிர்ந்து
துள்ளியெழு தம்பி துணிந்து.

*

வீடெரிக்க; குண்டுகளால்
விளைந்திருக்கும் வயலெரிக்க
நாடெரிக்கப் பகைவன் நகருகிறான்.
கூடெரித்துப்
போக விடேனென்று புலியாகு;
தமிழ் வீரம்
சாகவில்லை; போயாடு சமர்.

கோணாசலத் தேசிகர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**சந்திரிகா என்றால் சமத்துவத்தின் மறுவடிவம்" என்று, தமிழர்களைச் சுற்றியிருந்த மாயை, கடந்த ஆடி 9 ஆம் திகதியுடன் முற்றாகக் கலைந்து விட்டது.**

**தமிழினத்தின் சுபீட்சத்திற்கான போராட்டத்தோடு முழுமையாக இணைந்து, எங்களது நிம்மதியையும்:மகிழ்ச்சியையும் பெற்றெடுத்து, சுதந்திரத்தை வென்றெடுக்கப் போகின்றோமா? அல்லது, பீரங்கிக் குண்டுகளின் ஈவு இரக்கமற்ற சிதறல்களுக்குள் சிக்கி, குடும்பம் குடும்பமாகச் செத்தொழியப் போகின்றோமா?**

# பிணந்தின்னிக் கழுகாக "சமாதானப் புறா"!

"சமாதானப் புறா" என்று தமிழினம் நம்பியிருந்த அந்தப் பெருந் தலைவி, ஒரு போர் வெறிபிடித்த, இரத்த தாகம் கொண்ட பிணந்தின்னும் கழுகு என்பதை, கடைசித் தடவையாக அன்றைய நாள் நிரூபித்துவிட்டது.

"சமரசம்! சமத்துவம்!! சமநீதி!!!" என்று சர்வதேசமெங்கும் குரலெழுப்பிய அதே சம நேரத்திலேயே, தமிழனின் கழுத்தறுக்கக் கொலைவாள் தீட்டிக்கொண்ட போர் வெறியர் கூட்டம்தான் சந்திரிகாவும் மந்திரிகளும் என்பது, அன்றைய நாளில் முற்றுமுழுதாகவே வெளிப்படையாகி விட்டது.

போர் ஆரம்பித்தபோது, "புலிகளை மீளவும் அரசியல் பேச்சுவார்த்தைக்குக் கொண்டு வருவதற்கான இராணுவ அனுகுமுறை" என்றவர்கள் — யாழ்ப்பாணப் படையெடுப்பை ஆரம்பித்துவிட்டு, "இனிமேல் புலிகளோடு பேசுவதற்கு எம்மிடம் எதுவுமே இல்லை" என்று கூறிவிட்டார்கள்.

"ஒப்பரேசன் லீப் போவேட்" — "சமாதானத்திற்கான போர்".

பீரங்கிக்குண்டுகளும் விமானக் குண்டுகளும் எங்கள் மேனிகளின் மீது நர்த்தனமாடின. எங்கள் ஊர்மனைகளை உருக்குலைத்தன. நூற்றுக்கணக்கில் நாங்கள் படுகொலை செய்யப்பட்டோம். கை கால்களை இழந்து ஊனமாக்கப்பட்டோம். உடுத்த உடைகளுடன், கையில் எடுத்த பொருட்களுடன், இலட்சக்கணக்கில் நாங்கள் வீடு வாசல்களை விட்டு விரட்டியடிக்கப்பட்டோம். மிகப் பெரிய ஒரு போரபாயம் எங்கள் மீது ஏவிவிடப்பட்டது. இப்போதும், எங்களை இலக்கு வைத்துள்ள ஒரு பேராபத்தால் நாங்கள் சூழப்பட்டுத்தான் உள்ளோம்.

கல்விக்குப் பெருமதிப்புக் கொடுக்கும் பண்பைக் கொண்டது எங்கள் இனம். தமிழ்ச் சமூகத்தின் சிறப்பியல்புகளில் அதுவும் ஒன்று. சிங்களப் பேரினவாத அடிவேரில் முளைவிட்ட ஒரு புத்திஜீவிப் பேரினவாதி என்ற யதார்த்தத்தை மறந்து, சந்திரிகாவின் கல்வியறிவில் அது மயங்கியது. மேற்குலகப் படிப்பு அவரை மேன்மை நிலையில் செயற்பட வைக்கும் என எண்ணியது. அவரது வாய்மொழிகளிற்கு வசப் பட்டு, வித்தியாசமான சிந்தனைப் போக்குடைய ஒரு மாறுபட்ட சிங்களத் தலைவர் என, அப்பாவித்தனமாக நம்பியது. பேரினவாதப் பூர்வீகமாக இருப்பினும், முற்போக்கான எண்ணங்களுடன் சமரசத்தை உலாவச் செய்யப்போகின்ற ஒரு மாமேதை என, அவாவோடு காத்திருந்தது. இவற்றோடு — துப்பாக்கிக் குண்டுக்குத் துணைவனைப் பறிகொடுத்த அவரது வாழ்க்கைப் பின்னணிக்காக இரக்கப்பட்டது. அவர் ஒரு பெண்ணாகவும் இருந்தது இரக்கத்தை இரட்டிப்பாக்கியது. தமக்காகவும் அவர் இரக்கப்படுவார் என நம்பியது.

ஆனால், தமிழ்ச் சமூகத்தின் இந்தக் கற்பனை ஆசைகளுக்குத் தலைகீழாக அந்த அறிவுப் பேரழகி, எம் இனத்தை அடக்கி — அடிமை கொண்டு — அழித்தொழிப்பதற்கான வியூகங்களைத்தான் வகுத்துக் கொண்டிருந்தார் என்பதை எங்கள் சமூகம் விளங்கிக்கொள்ள, காலம் சற்றுப் பிந்தியபோது......

இனவெறி பிடித்த, சிங்களப் பேரினவாத உள்ளக்கிடக்கைகளை, வரலாற்றில் இன்னொரு தடவை வெட்ட வெளிச்சமாக்கிய "முன்னோக்கிப் பாய்தல்", "யாழ்ப்பாண மக்களைப் புலிப்பயங்கரவாதிகளின் கோரப்பிடியிலிருந்து மீட்டெடுப்பதற்காக" சந்திரிகாவின் முப்படைகளும் அரங்கேற்றிய மாபெரும் தமிழினப் படுகொலை.

வெட்டிச் சரித்த விறகு கட்டைகளின் குவியல்களாக, பிய்த்தெறியப்பட்ட பிணங்களினால், யாழ். வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவையே நிறையச்செய்த அட்டூழியம்.....! அக்கிரமம்.....! அராஜகம்......! யாழ்ப்பாணத்து வழிதெருவெங்கும் வழிந்தோடியது குருதி......! திரும்பிய பக்கமெல்லாம் அழிவு.......! வீசிய காற்றெல்லாம் பிணவாடை......!

எதுவெல்லாம் இனிமேல் நடந்துவிடாது என்று தமிழ்ச் சமூகம் ஐயமற நம்பியதோ — இரத்தத் தாலும், கண்ணீராலும் எழுதப்பட்ட வரலாற்றின் இன்னுமொரு அத்தியாயமாக அவையெல்லாம் திரும்பவும் நடந்துவிட்டன.

சிங்களத் தலைவர்களது அரசியல் வாழ்வின் உயிர்நாடியாகி, காலமொரு ஆட்சியும், பொழுதொரு தலைமையுமாக பூதாகரமாக உருவெடுத்துவரும் பௌத்த பேரினவாதத்தின் இன்றைய முகமே தான் என்பதை, அந்த "சமத்துவத் தலைவி" ஐயம்திரிபற நிரூபித்துவிட்டார்.

பல பத்தாண்டு காலமாக — தமிழினத்தைத் தனக்குக் கீழ்ப்பட்ட ஒரு இனமாக அடக்கி, அடிமை கொண்டு, அழித்தொழிக்க முனையும் சிங்கள தேசமானது, இனி எக்காலத்திலுமே — தமிழனை அழித்தொழிக்கும் தனது நோக்கத்தினைக் கைவிட்டு — எம்மோடு சமரசத்திற்கு வந்து நீதி வழங்கப்போவதில்லை என்பது, சந்திரிகா அம்மையாரின் வாயிலாகவும் எமக்கு உணர்த்தப்பட்டு விட்டது.

இப்போது, தமிழ்ச் சமூகத்தின் முன்னால் இருக்கின்ற கேள்வி ஒன்றே ஒன்றுதான் —

தமிழினத்தின் சுபீட்சத்திற்கான போராட்டத்தோடு முழுமையாக இணைந்து, எங்களது நிம்மதியையும் — மகிழ்ச்சியையும் பெற்றெடுத்து, சுதந்திரத்தை வென்றெடுக்கப் போகின்றோமா? அல்லது, பீரங்கிக் குண்டுகளின் ஈவு இரக்கமற்ற சிதறல்களுக்குள் சிக்கி, குடும்பம் குடும்பமாகச் செத்தொழியப் போகின்றோமா?

வயது வேறுபாட்டுக்கு அப்பால், பால் வேறுபாட்டிற்கு அப்பால், வர்க்க வேறுபாட்டிற்கு அப்பால், கல்வி நிலை வேறுபாட்டுக்கு அப்பால், கருத்து வேறுபாடுகளுக்கும் அப்பால் — தமிழினத்தின் ஒவ்வொரு தனிமனித மனச்சாட்சியின் அறிவுரீதியான சிந்திப்பை நோக்கியும், இந்த ஒரு கேள்வியே சுட்டுவிரலை நீட்டியபடி உள்ளது.

மேற்குலகப் படிப்பு அவரை மேன்மை நிலையில் செயற்பட வைக்கும் என எண்ணியது. அவரது வாய்மொழிகளிற்கு வசப்பட்டு, வித்தியாசமான சிந்தனைப் போக்குடைய ஒரு மாறுபட்ட சிங்களத் தலைவர் என, அப்பாவித்தனமாக, 'சமாதானப் புறா" என்று தமிழினம் நம்பியிருந்த அந்தப் பெருந் தலைவி, ஒரு போர் வெறிபிடித்த, இரத்த தாகம் கொண்ட பிணந்தின்னும் கழுகு என்பதை, கடைசித் தடவையாக அன்றைய நாள் நிரூபித்துவிட்டது.

**"சமரசம்! சமத்துவம்!! சமநீதி!!!" என்று சர்வதேசமெங்கும் குரலெழுப்பிய அதே சம நேரத்திலேயே, தமிழனின் கழுத்தறுக்கக் கொலைவாள் தீட்டிக்கொண்ட போர் வெறியர் கூட்டம்தான் சந்திரிகாவும் மந்திரிகளும் என்பது, அன்றைய நாளில் முற்றுமுழுதாகவே வெளிப்படையாகி விட்டது. பீரங்கிக்குண்டுகளும் விமானக் குண்டுகளும் எங்கள் மேனிகளின் மீது நர்த்தனமாடின. எங்கள் ஊர்மனைகளை உருக்குலைத்தன. நூற்றுக்கணக்கில் நாங்கள் படுகொலை செய்யப்பட்டோம்.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்னும் புரியவில்லை

யாழ் குடாநாட்டின் மீது பாரிய படையெடுப்பொன்றை நடாத்தி விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீது ராணுவரீதியில் வெற்றிகொள்வதோடு, தமிழரின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை ஆயுத ரீதியாக அடக்கவேண்டும் என்பதிற் சந்திரிகா அரசு குறியாகவே உள்ளது. இந்நிலைப்பாடு தற்போது சந்திரிக்கா அரசின் தன்மானப் பிரச்சனையாக மாறியுள்ளது. சந்திரிகா அரசாங்கத்தால் ஆரம்பத்திற் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றி என்பது புதினமான விடயமில்லை என்றே கருதப்பட்டது. கடந்த காலத்தில் ஐக்கிய தேசியக்கட்சி முனைப்பாக போரை நடத்தாமலும், ராணுவத்திற்கு தேவையான அரசியற் தலைமையைக் கொடுக்கத்தவறியமையுமே ராணுவ ரீதியில் புலிகளை வெற்றிகொள்ள முடியாமற் போனமைக்கு காரணமானவை எனவும் அவர்களின் சிந்தனை இருந்தது. இந்நிலையில் தம்மால் அத்தலைமையை ராணுவத்திற்கு வழங்கமுடியுமென சந்திரிக்கா அரசு நம்பியது. அதற்கு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை பொருத்தமானவர் எனவும் பூரண நம்பிக்கை கொண்டு இருந்தது. கேணலின் ராணுவ சேவைக்கால அனுபவம் அதற்கு உதவும் என்பது அவர்களின் கணிப்பீடாக இருந்தது. இதை உறுதிப்படுத்துமாப்போன்று கேணல் அனுருத்த ரத்வத்தையும் போரை வெற்றிப்பாதையில் நடத்துவதில் முனைப்புடன் இறங்கினார். விடுதலைப்புலிகள் தொடர்பாக ராணுவத்தரப்பிலிருந்து எச்சரிக்கப்பட்டதை அவர் கருத்தில் எடுத்துக்கொள்ளவில்லை. எச்சரித்தவர்களை கையாலாகாதவர்கள் என்று கூறினார். இதன் வெளிப்பாடாகவே ஆரம்பத்தில் 6000 துருப்புக்களைக்கொண்டு யாழ்நகரைப் பிடித்துவிடமுடியும் என்று அரசின் திட்டம் இருந்தது. இது சாத்தியமாகமாட்டாது என ராணுவத்தரப்பிலிருந்து வந்த எச்சரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டது. எச்சரித்த அதிகாரிகளும் இடமாற்றப்பட்டார்கள். எச்சரிக்கையின் பின் 6000 படையினருடன் மேற்கொள்ளப்பட்ட இந்நடவடிக்கையானது 12000 படையினருடன் Operation leap forward என்ற பெயரில் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் படையெடுப்பு வெற்றியைத்தரத் தவறியது. இது அரசுக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்தாயினும் அமைச்சர் ரத்வத்தையோ அன்றி சந்திரிகா அரசாங்கமோ தமது நிலைப்பாட்டை மாற்றிக்கொள்ளவில்லை. அவ்வாறு இல்லாதுவிடின் வடபகுதி ராணுவ முகாம்களுக்கான கடல்வழி விநியோகம் கேள்விக்குறிக்குள்ளாகியுள்ள நிலையிலும் மாரிகாலத்தில் ஒரு பெரும் படையெடுப்பை நடத்த அரசு ஆலோசிக்கமாட்டாது. ஆனால் இராணுவவெற்றி இலகுவானது அல்ல என்பதை ராணுவத்தரப்பில் சிலர் செய்த எச்சரிக்கைகள் பொருத்தமானவை எனவும் அரசுதரப்பு எண்ணத் தலைப்பட்டுள்ளது. இதன் வெளிப்பாடாகவே யாழ்குடாநாட்டின் மீதான படையெடுப்பிற்கு மேலும் பல்லாயிரக்கணக்கானத் துருப்புக்களை அரசாங்கம் தயார்ப்படுத்திவருகின்றது. அதேசமயம் முன்னர் அரசை எச்சரிக்கை செய்தவர்கள் குறித்தும் தனது கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளது. கடந்த காலத்தில் யாழ்குடாநாட்டின் மீது மேற்கொள்ளபட்ட படை நடவடிக்கைகள் குறித்தும் மீள்பரிசீலனை செய்வதிலும் பாதுகாப்பு அமைச்சு அக்கறை கொண்டுள்ளது. இதன் ஒரு அம்சமாகவே மறைந்த இராணுவ அதிகாரி லெப். ஜெனரல் டென்சில் கொப்பேக்கடுவாவின் ராணுவத்திட்டங்களைப் பரிசீலனை செய்வதிலும் தற்போது அரசாங்கம் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகின்றது. ஆனாலும் சந்திக்கா அரசாங்கத்தினால் இன்னமும் இனப்பிரச்சனைக்கு ராணுவத்தீர்வு சாத்தியமாகமாட்டாது என்பதையோ அன்றி, ஐக்கிய தேசியக்கட்சி யுத்தத்தில் வெற்றியடைய முடியாது போனமை இயலாமையின் காரணமாகவே என்பதையும் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. பெருந்தொகை ராணுவத்தை ஈடுபடுத்துவதன் மூலமும் நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவதன் மூலமும் ராணுவ வெற்றி கிட்டிவிடலாம் எனவும் நம்பிக்கை கொண்டுள்ளது. ஆகையினால் இன்னமும் போர்க்காலங்களையும், விடுதலைப்புலிகளின் தாக்குதல்களையும், எதிர்த் தாக்குதல்களையும் சந்திக்கும் போதுதான் இனப்பிரச்சனைக்கு ராணுவத்தீர்வு என்பது எவ்வளவு கடினமானது, சாத்தியப்பாடற்றது என்பதை அரசாங்கம் புரிந்து கொள்ளும். அதே போன்று ஐக்கிய தேசியக் கட்சியும் ஏன் போரில் வெல்லமுடியாமல் போனது என்பதை உணர்ந்துகொள்ளும். ஆனால் சந்திரிகா அரசு உணரும் போது யுத்தமும், ஏன் சமாதானமும் கூட அவரது கையை விட்டு நழுவியதாகவே இருக்கும். அப்பொழுது ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியை சந்திகாவிடம் ஒப்படைத்தபோது இருந்ததைவிட நிலமை நிச்சயம் மோசமானதாக, அதாவது சிறீலங்கா அரசின் கைகளை மீறியதாக இருக்கும் என துணிந்து கூறலாம்.

# உலகத் தமிழ்த் தலைமை புலிகளிடமே

உலகமெங்கும் உள்ள தமிழர்கள் தமது உரிமைகளைப் பேணுவதற்கான அமைப்பாக விடுதலைப் புலிகள் இயக்கத்தையே கருதுகின்றனர். ஐரோப்பிய நாடுகளிலும், கனடா போன்ற நாடுகளிலிலும் உள்ளவர்கள் மட்டுமன்றி மொரிசியஸ், பிஜி, மலேசியா, கொங்கொங், சிங்கப்பூர், இந்தியா போன்ற நாடுகளில் உள்ள தமிழர்களும் விடுதலைப்புலிகளைத் தமது பாதுகாவலர்களாகக் கருதுகின்றனர். இவ்வாறு கூறுவது விடுதலைப் புலிகள் இயக்கமோ அல்லது அவர்கள் ஆதரவாளர்களோ அல்ல. விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் என்றும், தமிழரின் தேசிய சுதந்திரப்போராட்டத்தைப் பயங்கரவாத நடவடிக்கை என்றும் கூறும் செய்தித்தாளாகும். இதை எழுதியவரும் அதே செய்தித்தாளைச் சேர்ந்த இராணுவ ஆய்வாளர் ஆகும். இவ்விடயத்தை அவர்கள் ஏன் எழுதினார்களே, எதற்காக எழுதினார்களோ, எதுவாக இருப்பினும் இன்றைய யதார்த்தத்தை புறக்கணிக்கமுடியாது. ஏனெனில் இன்று உலகெங்கும் உள்ள தமிழரின் போராடும் சக்தியாக விடுதலைப் புலிகள் இயக்கம் மட்டுமே உள்ளது. தமிழினமானது உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் ஒரு சிறுபான்மை இனமாகும். கிழக்கில் தென் பசுபிக்கில் உள்ள பிஜி தீவிலிருந்து, மேற்கே அமெரிக்காக் கண்டம் வரை இவர்கள் பரந்து வாழ்கின்றார்கள். இதில் சில நாடுகளில் அரசியலை ஓரளவு தீர்மானிக்கும் சக்தியாகவும் உள்ளனர். இதே வேளை பலநாடுகளில் தமிழர் என்ற தனித்துவத்தை இழந்து விடும் நிலையிலும் உள்ளனர். உதாரணமாக உலகின் பலபாகங்களிலும் பரந்து வாழும் இந்த இனத்துக்கென ஒரு தனியரசோ, ஆட்சியோ இல்லை. முன்னாள் சிறீலங்கா சனாதிபதி ஜெயவர்த்தனா கூறியிருந்தது போல், தமிழர் உலகில் உள்ள சிறுபான்மையினருக்குள் பலம் பொருந்திய இனம் என்பது உண்மையாக இருப்பினும் கூட அதற்குத் தன் இனத்தை பாதுகாக்கவோ, பேணி வளர்க்கவோ சுதந்திரமான அரசு ஒன்று இல்லை. ஆனால் உலகில் ஒரு மூலையில் வசித்துவரும் அதே வேளை, எண்ணிக்கையில் தமிழினத்தை விட மிகக்குறைந்தஅளவில் உள்ள எத்தனையோ சிறிய இனங்கள் தனியரசுகளைக் கொண்டுள்ளனர். இதன் மூலம் தமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்வதோடு அதன் வளர்ச்சிக்கும் உதவி வருகின்றன. தமது இனத்தின் பாதுகாப்பிற்காக அவற்றால் உலகிற்கு அழுத்தம் போடவும் முடிகின்றது. இந்த நிலையில் உலகில் பரந்துபட்டு வாழும் தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பேணுவதற்கும், பாதுகாப்பதற்கும் ஓர் அமைப்பு தலைமையுடன் எப்போது உருவாகும் என, நீண்ட காலமாகவே எதிர்பார்த்துள்ளனர். இதனை அவர்கள் உலகில் தமிழர்கள் செறிவாக வாழும் தமிழகத்தில் இருந்து கிடைக்கும் என்றே பெரும்பாலும் கருதினர். இவர்களின் சிந்தனைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்யுமாப்போன்று தமிழகத்தில் தோன்றிய திராவிட இயக்கங்கள் ஆரம்பத்தில் இருந்தன. இவைகளை தமிழக மக்கள் மட்டுமல்லாமல் உலகமெங்கும் உள்ள தமிழர்கள், தலைமையாக எண்ணியது உண்மைதான். ஆனால் காலப்போக்கில் திராவிட இயக்கங்கள் தமிழரின் உரிமைப் போருக்குப் பதில், அதிகாரப் போட்டியில் இறங்கின. தமிழரின் உலகத் தலைமைப் பொறுப்பு தம்மிடமே உள்ளது எனக்கூற விளைந்தனரே தவிர அதற்குரிய தகமை அவர்களிடம் இருக்கவில்லை. மாறாக ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக இனத்தையே காட்டிக் கொடுக்கும் அளவிற்குச் சென்றன. இதன்மூலம் உலகத் தமிழ் மக்களுக்கு பலமான ஏமாற்றத்தை அளித்தன. இந்த நிலையில் தான் தமது விடுதலைக்காக இலங்கையில் தமது உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருந்த விடுதலைப் புலிகள் இயக்கம் மீதும் அதன் தலைமைப்பீடம் மீதும் உலகத் தமிழ் மக்களின் கவனம் திரும்பியுள்ளது. கடந்த காலத் தமிழ்த் தலைமைகள் போல் அல்லாமல் தனித்துவமானதாக இத்தலைமை தெரிந்தது. அவ்வாறு தெரிந்தமைக்குக் காரணம் இல்லாமலும் இல்லை. கடந்த காலத் தமிழ்த் தலைமைகள் போல் இல்லாமல், தமிழ் மக்களின் உரிமைகள், பேரம் பேசுவதற்கு அப்பாற்பட்டது என்பதை விடுதலைப் புலிகள் தலைமை தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. இது உலகத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஊட்டியது. அத்தோடு அச்சுறுத்தலுக்குப் பயந்து போய் விடமாட்டோம் எனவும் அத்தலைமைத்துவம் உறுதி செய்து இருந்தது. இதனை கேள்விக்கு இடமின்றி, உயர்ந்த அர்ப்பணிப்புகளுடன் புலிகள் நடத்திய போராட்டம் உலகத் தமிழினம் மட்டும் அல்லாமல் உலகில் உள்ள அனைவருமே வியக்கத்தகுமளவிற்கு அதன் செயல்பாடுகள் இருந்தன. இந்த நிலையில் உலகத் தமிழினம் தமது பாதுகாவலர்களாக, தமது உரிமைகளைப் பேணக்கூடிய அமைப்பாக விடுதலைப் புலிகளையும் அதன் தலைமைப்பீடத்தையும் கண்டு கொண்டதில் வியப்பேதும் இல்லை. தவறும் இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சக வாழ்வு சாத்தியமா?

'அன்ரனோவ்' விமானம் ஏன் வீழ்ந்தது என்பதற்கான காரணம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை. எதிர்காலத்திலும் அது உறுதிப்படுத்தப்படுமென்பது சந்தேகமே. இதே சமயம் விமானம் ஏன் விழுந்தது என்பது தொடர்பாக அரச தரப்பு, காலநிலை, இயந்திரக் கோளாறு என விளக்கம் அளிக்க முற்படுகையில் அரசின் கூற்றுக்களை ஏற்காதவர்கள் இது குண்டு வெடிப்புக்களோ அல்லது நாசகார வேலைகளோ ஆக இருக்கலாம் என சந்தேகிக்கின்றார்கள். இவ்வாறு சந்தேகப்படுபவர்களின் குறி விடுதலைப் புலிகள் மீதும் தமிழர்களின் மீதும் உள்ளது அதிலும் குறிப்பாக விமானத்தில் பயணம் செய்த உதவி காவல் பணிமனை அதிகாரி தவராசா மீதும், விமான ஓட்டியான பாக்கியநாதன் மீதுமே உள்ளது. இவர்கள் மீது கவனம் திரும்பியதற்கான காரணம் இவர்கள் தமிழினத்துடன் தொடர்புடையவர்களாக இருந்ததுமே.

தொடக்கம் முதலே காலநிலை, இயந்திரக் கோளாறு என அரசு கூறிவந்த போதிலும் அரசதரப்பின் நோக்கில் நாசகாரர் மீதான சந்தேகமும், தமிழர்கள் மீதான சந்தேகமும் இல்லாமல் இல்லை என்றே கூறலாம். இதனைத் தொடக்கம் முதலே அரச நடவடிக்கைகள் உணர்த்தி வந்தன. பாதுகாப்பு அமைச்சின் அறிவித்தலின்படி விபத்துக்குள்ளான விமானத்தில் பயணம் செய்தவர்கள் 71 பேர் ஆகும். இதில் இருவர் காவல்துறையினர். அதில் ஒருவர் தமிழராகும். அவர்கள் கொண்டு சென்றதே விமானத்தில் இருந்த 'சிகரெட்' பொதிகளாகும். இந்தவகையில் விமானம் வீழ்ந்ததும், இராணுவ வட்டாரங்களின் கண்ணில் பட்டது, 'சிகரெட்' பொதிகளும் அதைக் கொண்டு சென்ற காவல்துறை அதிகாரிகளுமேயாகும். இதேவேளை இப்பொதிகளை சோதனையிட்டதாக இரு தமிழ் காவல்துறையினர் மீது சந்தேகம் எழுந்தது. இதன் விளைவாக 'சிகரெட்' பொதி பற்றி சர்ச்சை எழுந்தது. காவல் துறைத் திணைக்களத்திடம் தவராசாவின் பின்னணி பற்றிய விபரத்தை அறியக் கோரியது. இதேபோன்றே விமான ஓட்டிகள் உட்பட அதன் பணியாளர்கள் ஐந்து பேர் இருந்தும் அதில் இருந்த தலைமை விமானியான பாக்கியநாதன் மீது, சிங்களவரின் கவனம் திரும்பியது. தொடக்கத்திலேயே சிங்களப் பேரினவாதிகள் பாக்கியநாதன் மீது தமது சந்தேகத்தைக் கிளப்பி இருப்பினும் பாதுகாப்பு அமைச்சு அமைதியாக இருந்தது. ஆயினும் தற்போது அதன் போக்கும் பேரினவாதத்தினரின் குற்றச்சாட்டுக்கு இசைவாகவே செல்லத் தொடங்கியுள்ளதாகத் தெரிகிறது. பாதுகாப்பு அமைச்சு அண்மையில் விமான விபத்துக் குறித்து வெளியிட்ட அறிக்கை இதனை வெளிக்காட்டுவதாகவே இருந்தது. இதில் காலநிலை சீர்கெட்டதாக இருந்ததால் இருமுறை விமானிக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்ட போதும் அவர் விமானத்தை ஓட்டிச் சென்றார் என்ற தொனியிலும், சீரற்ற காலநிலைப் பகுதியில் விமானம் பறந்த போதிலும் அதைத் திருப்பிச் செல்ல அவர் அக்கறை காட்டவில்லை என்றும் அறிக்கை இருந்தது. ஆனால் இத்தனைக்கும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு விமானங்கள் உள்ளாகிய போது சிங்கள விமானிகள் எவரும் வடக்கே பறக்க மறுத்தபோது முதன் முதலில் பலாலிக்கு மீண்டும் விமானத்தை பாக்கியநாதனே ஓட்டி வந்ததாகத் தெரிகின்றது. மேலும் 'ஒப்பரேசன் லிபரேசன்' தொடக்கம், 'ஒப்பரேசன் லீப்போவேட்' வரை தமிழர் மீதான பாரிய படையெடுப்புக்களில் பாக்கியநாதன் சிறீலங்கா விமானப் படையில் சிறப்பாகப் பணியாற்றி பாராட்டும் பதக்கமும் பெற்றுள்ளார். அதாவது தமிழர் இனஅழிப்புக்கு விமானி பாக்கியநாதனின் பங்கு கணிசமாகவே இருந்துள்ளது. இத்தனைக்கும் மேலாக பாக்கியநாதன் உண்மையில் தமிழனோ அன்றி தமிழ்ப் பண்பாடுகள் கொண்டவரோ அல்ல. பாக்கியநாதனின் தாய் சிங்களப் பெண், மனைவியும் சிங்களப் பெண். இந்த நிலையில் பாக்கியநாதனை முழுத்தமிழன் என்பது தவறானது ஆகும். ஆனால் தமிழர்கள் தமது வேர்களை மறந்தாலும் சிங்களவர்கள் விட்டுவிடுவதாக இல்லை. பாக்கியநாதன் சிங்கள மயமாக ஆகியும் சிங்களவர்கள் அதனை ஏற்கவில்லை. இந்த நிலையானது தற்போது பாக்கியநாதன் குடும்பத்தினருக்குக் கவலை அளிக்கலாம். இதற்கு இன அழிப்புக்குப் பெருந்துணை போனபோது பாக்கியநாதனை பேரினவாதிகள் நம்பி இருந்தது காரணமாக இருக்கலாம். ஆனால் இது, இனப்பிரச்சினைக்கு சிங்கள பேரினவாதிகளுடன் இணைந்து செயற்படுவர்கள் வெளியிடும் கருத்துக்களின் அடிப்படையில் ஒரு சமாதான ரீதியான அரசியல்த் தீர்வைக் காணலாம் என எண்ணுபவர்களுக்கும், இலங்கையிலும் வெளிநாட்டிலும் இதனை வலியுறுத்துபவர்களுக்குமே சமர்ப்பணம் ஆகக் கூடியதாகும்.

# சிதைவுறும் அரசு

அரசால் தனது அதிகாரத்தை நாட்டின் எல்லாப் பகுதியிலும் பிரயோகிக்க முடியாது உள்ளது. எனவே தற்போதைய அரசை பலவீனமான அரசு என்றே அழைக்கலாம் எனப் பிரதிக் கல்வி அமைச்சர் பேராசிரியர் வர்மபால தெரிவித்தமை சரியானதொன்றே ஆகும். ஒரே தேசமென்று கூறிக் கொள்ளும் பிரதேசத்தில் ஒரு பகுதியில் அரசு ஆதிக்கம் செலுத்த முடியாது போனமை அரசின் பிரதேச ஒருமைப்பாடு, ஐக்கியம் என்பனவற்றையே சிதைத்ததினால் ஒரு தேசம் என்ற கோட்பாடே அர்த்தமற்றதாகியுள்ளது எனலாம். இதனால் அத்தேசம் பலவீனமானதாக இருப்பதாகக் கூறுவதில் தவறில்லை. ஆனால் சிறீலங்கா அரசு பலவீனப்பட்டுப் போனதானது தற்பொழுது ஏற்பட்ட ஒரு விடயமல்ல. சுமார் ஒரு தசாப்தத்திற்கு முன்னரே அது நிகழ்ந்துவிட்டது. சிறீலங்கா அரசு எப்போது தனது அதிகாரத்தைப் பூரணமாக செலுத்த முடியாமல் போனதோ அப்பொழுது இருந்தே சிறீலங்கா அரசு பலவீனப்பட்டுப் போய்விட்டது என்பதே உண்மையாகும். சிறீலங்காவின் அரசியல் வரலாற்றில் 1977 ஆம் ஆண்டிற்கும் 1994 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட ஐ.தேகட்சியின் ஆட்சிக்காலமே பலமானதொரு ஆட்சிக்காலமென தெரிவிக்கப்படுவதுண்டு. ஏனெனில் ஐ.தேக அரசியல் ரீதியில் எதையும் சாதிக்கும் வல்லமை வாய்ந்ததாக இருந்த காரணமாகும். பாராளுமன்றில் 6 இல் 5 என்ற ரீதியில் அது பெரும்பான்மை பெற்று இருந்தது. அதன்மூலம் அரசியல் யாப்பையே மாற்றி அமைத்து. ஐ.தேக அரசினால் அதன் எதிரிகள் யாவும் ஓரம் கட்டப்பட்டனர். முன்னாள் பிரதமரும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தலைவியுமான சிறிமாவோவின் குடிசன உரிமையைப் பறிக்கும் அளவிற்கு அதன் அதிகாரம் சென்றது. அத்தோடு ஐ.தேக உருவாக்கிய புதிய அரசியல் யாப்பில் கொண்டு வரப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி ஆட்சிமுறையினால் சனாதிபதிகள் சர்வ வல்லமை கொண்ட சர்வாதிகாரிகள் ஆகினர். தமது விருப்பத்திற்கு ஏற்ப ஆட்சியை நடாத்தக் கூடியவர்களாக இருந்தனர். நடாத்தியும் வந்தனர். இதே சமயம் ஆட்சிக்கு எதிராக எழுந்த கிளர்ச்சியை மிருகத்தனமாக ஒடுக்கினர். சட்டபூர்வமான, சட்டபூர்வமற்ற ஆயுதக் குழுக்கள் ஆட்சியாளரின் பணிப்பிற்கும் கண்ணசைவிற்கும் ஏற்ற விதத்தில் படுகொலைகளைச் செய்து குவித்தனர். இவையாவும் அரசைப் பலப்படுத்தவும் ஆட்சி அதிகாரத்தை உறுதிப்படுத்தவும் என்ற ரீதியிலே இடம்பெற்றது. ஆனால் இவையாவும் ஐ.தேக அரசைப் பலப்படுத்த உதவினவே தவிர சிறீலங்கா அரசைப் பலப்படுத்த எந்த விதத்திலும் உதவவில்லை. சிறீலங்கா அரசைப் பலப்படுத்தவென ஐ.தேக மேற்கொண்ட நடவடிக்கைகள் யாவும் அதனைப் பலவீனப்படுத்துவதாகவே இருந்தது. வடக்கு-கிழக்கில் இருந்து பாராளுமன்றத்திற்கு தெரிவாகியவர்களை ஓரங்கட்ட முற்பட்டமையே அரசியல் ரீதியில் சிறீலங்காவை முதலில் பலவீனப்படுத்தியது. ஆயுத ரீதியாக தமிழ் மக்களின் கோரிக்கையை அடக்க முற்பட்டமை சிறீலங்கா அரசின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் ஒற்றையாட்சி முறையையுமே கேள்விக்குறியாக்கியது. சிறீலங்கா அரசு இலங்கையில் ஒரு பகுதியில் தனது பரிபாலனத்தை இழக்க வேண்டி வந்தது. அதாவது ஐ.தேக அரசு எந்தளவு பலவீனமானதாக இருந்த போதிலும், சிறீலங்கா அரசியல் யாப்பு எந்த அளவிற்கு நிவர்த்தி அற்றதாகவும் ஆட்சியாளருக்கு ஏகபோக நிறைவேற்று அதிகாரங்கள் வழங்கிய போதும் சிறீலங்கா அரசு பலமாக இருக்கவில்லை என்பதே யதார்த்தமாக இருந்தது. ஆட்சிக்குட்பட்டிருந்த பிரதேசத்தின் ஒருபகுதியை இழந்து இருந்தது. இந்த நிலையானது 17 ஆண்டுகளுக்கு பின்னர், ஐ.தேக வில் இருந்து பொதுசன ஐக்கிய முன்னணி இடம் ஆட்சி மாறியபோதும் தொடர்கின்றது. இதனை ஐ.தேகட்சியை விட பலவீனமான நிலையில் ஆட்சிக்கு வந்துள்ள பொ.ஐ.முன்னணியால் ஒருபோதும் மாற்றிவிட முடியாது. ஏனெனில் சிறீலங்கா அரசு பலமடைய வேண்டுமானால் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காணப்படுவது முக்கியமானது ஆகும். இராணுவத் தீர்வு ஒன்றினால் சிலவேளைகளில் சில பகுதிகளை அரசினால் கைப்பற்ற முடிந்தாலும் கூட அது சிறீலங்கா அரசைப் பலப்படுத்துமோ ஐக்கியப்படுத்துமோ என்று சொல்ல முடியாது. அத்தோடு அப்பிரதேசங்கள் சிறீலங்கா அரசின் பரிபாலனத்திற்கு உதவும் என்றும் கூறமுடியாது.

# தமிழ் குழுக்களுக்கு அரசியல் தீர்வு, புலிகளுக்கு இராணுவத்தீர்வு.

புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால், தமிழினத்தின் தனித்துவத்தையும் உரிமைகளையும் நிலைநிறுத்துவதில் அவர்கள் கண்ணாய் இருப்பர் என்பதால் -

புலிகளை 'இராணுவத் தீர்வு'க்கு உரியவர்கள் என ஒதுக்கி விட்டு, 'தமிழர்களின் பிரதிநிதிகள்' என்ற பெயரில் - தமிழர்களுக்குத் துரோகமிழைத்த குழுக்களை அழைத்துப் பேச்சுவார்த்தைகளை நடாத்துவதன் மூலம் -

'அரசியல் தீர்வு' என்ற போர்வையில், தமிழரின் போராட்டத்தை ஒடுக்க சந்திரிகா அரசு சதி செய்கிறது.

சந்திரிகா அம்மையார் ஆட்சிபீடமேறி ஒரு வருடம் முடிவடைந்துவிட்டது. சமாதான வழிமுறையில் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்த்துவைப்பார் என்ற தமிழ் மக்களின் நம்பிக்கையும் காலவதி ஆகிவிட்டது. 'சமாதான விரும்பி', 'முற்போக்காளர்', 'மனிதாபிமானி' என்ற உயர் தகுதிகளைக் கொண்ட ஒரு பெண் ஆட்சியாளர் என்ற பார்வை மாறி, இப்போது, போர் வெறிகொண்ட ஒரு சதிகாரப் பேரினவாதி என்ற மகுடமே சந்திரிகா அம்மையாருக்கு நிரந்தரமாகப்போகின்றது.

'புலிகளுடனான சமாதானப் பேச்சுக் காலத்திலேயே தனது அரசு போர்த் தயாரிப்புக்களில் ஈடுபட்டிருந்தது' என்று சந்திரிகா அம்மையார் அண்மையில் வெளியிட்ட அறிவிப்பு, அவரை ஒரு சதிகாரப் பேரினவாதி என அழைக்கப் போதுமானது. அதேவேளை, தமிழர் நிலத்தின் அரசியல் யதார்த்தம்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம் பார்க்க

www.tamilarangam.net





# இரத்தக் கறை படிந்த நாட்கள்



'சமாதானம்! சமாதானமே என் மூச்சு! நான் ஏற்படுத்தப் போவது சமாதானத்தையன்றி வேறொன்றையல்ல!' - ஓராண்டுக்கு முன்னர் இந்துமா சமுத்திரத்தின் இரைச்சலோடு சங்கமித்து, தீவின் செவிகளில் தேனெனப் பாய்ந்தது அந்த அசரீரி! மண்ணில் வந்து இறங்கிவிட்ட விண்ணின் தேவதையோ அவள்?!

இனங்கள் சிலிர்த்தன! உலகம் வியந்தது! வரலாற்றில் நம்பிக்கையின் ஒளி மின்னியது. கனவில் கூடக் காணாதது கண்ணெதிரில் நிகழப்போவதாகப் புளங்காகிதமடைந்தது தமிழினம்.

'இலங்கையில் இனப்பிரச்சினை தான் உண்டு! தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு!' - திருவாய் மலர்ந்தருளினாள் அன்னை. 'ஆனால் - அதற்கு இராணுவ வழிமுறைகளில் தீர்வுகாணவே முடியாது'

'ஓகோ! அப்படியா—! நீங்களல்லவோ



தலைவி— சரி, அப்படியானால் எந்த வழியில்—'

'அமைதி வழியில்: பேச்சுவார்த்தைகள் மூலமாக மட்டுமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும்.'

அடியடா புறப்படலையில! அதுதானே பார்த்தம்: நீங்களென்ன—! நீங்கள் படிச்ச படிப்பென்ன—! நீங்கள் படிச்ச இடங்களென்ன—!உங்கட சிந்தனைப் போக்கென்ன—! உங்களுக்கு விளங்காதது என்ன—! சரிதாயே— பேச்சுக்களை யாருடன் ஆரம்பிக்கப் போகின்றீர்கள்—!

'தமிழர்களின் முக்கிய பிரதிநிதிகளாகப் புலிகள் உள்ளனர் அதனால் அவர்களுடன் பேசியே தீர்வு தேட வேண்டும்.'

ஆகா! அற்புதம்! சரியாகச் சொன்னீர்களம்மா. இதுவரை ஒரு பேரினவாதத் தலைவரும் சொல்லாத வார்த்தைகளையல்லவா நீங்கள் சொல்லுகிறீர்கள்! உங்களுக்குத்தான் நிலைமையின் யதார்த்தமே புரிந்திருக்கின்றது— நல்லது பெருமாட்டி: ஆனாலும் ஒரு சந்தேகம் உறுத்துகிறது— சில சமயம் பேச்சுவார்த்தை முறிந்து போகுமானால் திரும்பவும்—

சடாரென வருகிறது பதில் -

'மீண்டும் பேச்சுவார்தையே!'

அருமை!

ஆமாம் அப்படித்தான் சொன்னாள்: எப்படியெல்லாம் எண்ணிக்கொண்டிருந்தோம்! இப்போது பாருங்கள்: இப்படியாக அல்லவா மாறி விட்டாள். நாங்கள் நினைக்கவேயில்லை.

நம்பிக் கிடந்த நெஞ்சங்களின் மீது அந்த அன்னை நாசம் விழுத்தினாள். போரற்ற சமாதானமே கொள்கை என்றவள் போர் மூலமாகச் சமாதானமே கொள்கை என்றாள்.

அவளுடைய புதிய கோட்பாட்டின் தார்ப்பரியத்தை தமிழர்களும் தமிழீழமும் மட்டுமல்ல, அனைத்துலகமுமே விளங்கிக்கொண்ட அந்த நாட்கள் கொடூரமானவை.

1995 ஆம் ஆண்டின் யூலைத் திங்கள் 9 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகள். தான் அரங்கேற்றிய 'சமாதானத்திற்கான போரின்' விறுவிறுப்பான அத்தியாயத்தை சந்திரிகா காட்சிப்படுத்தினார். அதுதான் 'முன்னோக்கிப் பாய்தல்' 'பேச்சுவார்த்தை முறிந்தால் மீண்டும் பேச்சுவார்த்தை' என்று சொன்ன வார்த்தை மாறாமல் - பீரங்கிகளின் குழல் வாய்களால் பேசத்தொடங்கினார்.

'புலிப்பயங்கரவாதிகளின் கோரப் பிடிக்குள்ளிருந்து யாழ்ப்பாண மக்களை மீட்டெடுத்து, சந்திரிகாவின் படைகள் குடும்பம் குடும்பமாக மேல் உலகத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்தன.

'மக்களின் முக்கிய பிரதிநிதிகள்' என்றவர்களை 'மக்களிலிருந்து பிரிக்கும் மூலோபாயத்திற்காக', கருப்பையில் இருக்கும் சிசுவிலிருந்து வாழ்வை முடிக்கும் வயோதிபர்கள் வரை கொல்லப்பட்டார்கள்.

குடாநாட்டுக் குடியிருப்புக்களைக் குண்டுகள் குதறிக் கொண்டிருந்த வேளை - கொழும்பில் - ஒய்யாரமாக வீற்றிருந்து மென்பானம் அருந்தியபடி, அந்த 'சமாதானப் பேரரசி', 'யாழ்ப்பாணத்தில் 'செல்'கள் விழுகின்றனவா?' என்று 'நக்கலாகக்' கேட்டாள்.

தனது எதிர்காலம் பற்றிய கேள்வியொன்றுக்கு, 'என்னைப்பற்றியல்ல: என் பிள்ளைகளைப் பற்றியே கவலைப்படுகிறேன்' என்றவர், தமிழர்களின் பிள்ளைகள் நிர்க்கதியாவதைப் பற்றி நினைத்ததாகத் தெரியவில்லை.

அழியமாட்டாத ஆழ வடுக்களைத் தேசத்தின் ஆன்மாவில் கிழித்துவிட்டார் சந்திரிகா.

அந்தக் கொடிய நிகழ்ச்சிகளின் கரிய - கருகிய நினைவுகளில் சில இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இவைவெறுமனே தகவல்களுக்காகத் தரப்பட்டவையல்ல:

எமக்கு இது ஒரு பாடம்

இதுவரை நாம் செய்திருந்தது என்ன! இனி மேல் நாங்கள் செய்யவேண்டியது என்ன!

தமிழரெனப் பிறந்த ஒவ்வொருவருமே இது பற்றிச் சிந்திக்க வேண்டியவர்களாக உள்ளோம்!

தனது எதிர்காலம் பற்றிய கேள்வியொன்றுக்கு, 'என்னைப்பற்றியல்ல: என் பிள்ளைகளைப் பற்றியே கவலைப்படுகிறேன்" என்றவர், தமிழர்களின் பிள்ளைகள் நிர்க்கதியாவதைப் பற்றி நினைத்ததாகத் தெரியவில்லை.

அழியமாட்டாத ஆழ வடுக்களைத் தேசத்தின் ஆன்மாவில் கிழித்துவிட்டார் சந்திரிகா.

அந்தக் கொடிய நிகழ்ச்சிகளின் கரிய - கருகிய நினைவுகளில் சில இங்கே பதிவுசெய்யப்பட்டுள்ளன.

## குளிப்பு

குண்டு மழை, பீரங்கிகளின் ஓய்வற்ற முழக்கம்! கதிகலங்கி ஓடிய சுழிபுரம், நவாலித் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்தது.

சரவணபவானுக்கு 34 வயது, ஒரு கடற் தொழிலாளி. பராசக்திக்கு 26 வயது.

தம்பதிக்கு 4 குழந்தைகள் - சர்வானந்தன், திருக்குமரன், ரோகினி, கடைசிக்குழந்தை புனிதாவுக்கு மூன்றே வயது.

புனிதாவைத் தோளில் தூங்க வைத்திருந்த போது -

அந்த இரைச்சலின் உறுமலைத் தாய் கேட்டாள்!

நிலத்தைக் குறிவைத்து வெறித்தனமாகக் குத்திப் பதிந்தது 'புக்காரா!'

நொடிப்பொழுதுகளின் இடைவெளி.

மற்றைய பிள்ளைகளை வெளியில் கலைத்துவிட்டு, கையிலிருந்த குழந்தையோடு முற்றத்திற்கு ஓடிவந்து -

மரத்தோடு விழுந்து, உடலிடுக்குகளால் குழந்தையைச் சூழ்ந்தபடி பதுங்கவும் -

குண்டுகள் இலக்குகளைத் தொடவும் சரியாக இருந்தது.

புழுதியும் புகையும் கலைய -

குழந்தையைத் தைக்காமல் குண்டுச் சிதறல்களைத் தன்னில் தாங்கி, உருக்குலைந்து கிடந்தாள் அம்மா!

இரும்புத் துண்டு நாரியைத் துளைத்து நெஞ்சைச் சிதைத்திருக்க -

பால் சொரிந்த மார்பிலிருந்து குருதி சொரிந்து குளிப்பாட்ட, குழந்தை மயங்கிக் கிடந்தது.

## முடிவு

ஊர் இணுவில் தெற்கு. 'துரை வீதி'யில் அவர்கள் குடியிருந்த வீடு. சுப்பையா தேவநாயகம் என்பது அவருடைய பெயர்.

மனைவி தவஞானசரஸ்வதி

மூன்று பிள்ளைகள் -

மூத்தவள் சலஜாவுக்கு 12 வயது, அடுத்தவன் லாவண்யனுக்கு 10 வயது, கடைக்குட்டி மனோதிகா 8 வயதுச்சிறுமி.

இணுவில் இந்துக் கல்லூரியில் அவர்கள் மாணவர்கள்.

பச்சைக் குழந்தைகள், தேசத்தின் நாளைய தூண்கள்

வசதியான குடும்பம் அல்ல,

சின்னதாக மிதிவண்டித் திருத்தகம் ஒன்று அந்த குடும்பத்திற்குச் சொந்தம்.

வாழ்க்கை ஓட்டத்திற்கும் வருமானத்திற்கும் சமநிலை நிலவியது.

'முன்னோக்கிப் பாய்தலின்' முதலாம் நாள் -

காலை எட்டு மணியிருக்கும்.

வெடியோசைகளால் அதிர்ந்த குடும்பம், வீட்டின் முன்கூடத்தில் கூடியிருந்தது.

பக்கத்து வீட்டு அய்யாக்கிளி மாஸ்ரரும் வந்து இருந்தார்.

பேயிரைச்சலோடு நெருங்கிய 'புக்காரா' - சொல்லி வைத்ததைப் போல குண்டைப் போட்டது.

இலக்குத் தவறாத அடி.

வீட்டின் முன் கூடம் புழுதியாய்த் தெறித்தது.

அந்த இளம் குடும்பத்தில் -

எஞ்சியவர்கள் எவருமே இல்லை.

அய்யாக்கிளி மாஸ்ரருங்கூட!

## அடையாளம்

சுழிபுரம் மேற்கைச் சேர்ந்த குடும்பம் அது. தந்தைக்கு 40 வயது. ஆறுமுகம் குணரட்ணம் என்பது பெயர்.

காங்கேசன்துறைச் சீமெந்துத் தொழிற்சாலை இயங்கிய காலத்தில் அவர் அதன் பணியாள்.

தாய் ரோகினிக்கு 35 வயது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மூன்று பிள்ளைகள் -

தர்சினிக்கு 13 வயது, பிரணவனுக்கு 6 வயது, விதுஈசனுக்கு இன்னும் முழுமையாக ஒரு வயதுகூட ஆகவில்லை.

'முன்னேறிப் பாய்ந்தவர்களின்' மூர்க்கத்தனம், அவர்களை ஊரைவிட்டு ஓட வைத்தது.

சமாதானப் பேரரசி இறைவனின் சந்நிதானங்களில் மக்களுக்குத் தீங்கிழைக்க மாட்டாள் என நம்பிய எல்லாச் சனங்களையும் போல—

அன்று அவர்களும் நவாலித்தேவாலயத்தில் தஞ்சம் புகுந்தார்கள். அன்று குருதி தோய்ந்த கோரம் நிறைந்த மூன்றாம் நாள்.

யாழ்ப்பாண மருத்துவனையின் பிரேத அறையில்—

குணரத்தினத்தின் தந்தை சின்னவி ஆறுமுகம், பிணக்குவியலின் நடுவில் அந்த ஐந்து சடலங்களையும் அடையாளம் காட்டினார்.

## சமாதானப் போர்

ஊர் சுழிபுரம் மேற்கு. ஐயனார் கோவிலடிக்குப் பக்கத்தில் அவர்களது குடியிருப்பு. பீரங்கிக் குண்டுமழை ஊரைக்குடியெழுப்பியது.

'பாதுகாப்பு'த்தேடி அந்தத் தேவாலயத்தில் அடைக்கலமாகியிருந்த மக்களோடு, அவர்களும் கலந்தார்கள்.

மாலை 5.00 மணி.

அந்த அரக்கத்தனமான செயலைப் புரிந்து விட்டு, 'புக்காரா' எழுந்து பறந்து போய்விட்டது.

அவருடைய பெயர் நடேச சித்திரபாலு, வயது 52. அவரது மனைவி நாகேஸ்வரி, 44 வயது அவர்களது பிள்ளைகள் ஜயமதி (27), பிரபாகரன் (22) தனேஸ்வரி (17),ஜெயபாலினி (15)-

அவர்களது இன்னொரு மகன் மகேந்திரன் (29) மகனின் மனைவி வசந்தகுமாரி (23)

அவர்களது இன்னொரு மகள் மதிவதனா (24) மகளின் கணவன் நாகேச கோபாலகிருஷ்ணன் (26) இவர்களது பிள்ளைகள் கோ. பிரதீபா (3) கோ. ருஜந்தன் (2) -

அவர்களது இன்னொரு மகளான சிவமதியின் பிள்ளை சயந்தன் (11) -

திருமதி சித்திரபாலு நாகேஸ்வரியின் சகோதரி லீலாவதி (52), அவரது கணவர் க. நல்லையா (52) -

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இந்தப் பதினைந்து பேர்களோடு! -

அவர்களுடைய வீட்டிலேயே ஒரு குழந்தையென வளர்ந்த சிங்கராஜா ரஞ்சனி என்ற 11 வயதுச் சிறுமியும்—

கோபாலகிருஷ்ணன், பக்கத்து வீட்டு நண்பர் முருகானந்தனுடன் கதைத்துக் கொண்டிருக்கும் போது -

போர் விமானம் தம்மை நோக்கிக் குத்திப் பதிவதைக் கண்டார்! கண்டவர் -

தன் மனைவி பிள்ளைகள் இருந்த இடத்தைநோக்கி எழுந்து ஓடத்தொடங்க- பேரோசையோடு சிதறின குண்டுகள்!

ஓடிக் கொண்டிருந்து கோபாலகிருட்ணனின் தலை,வாழ் வெட்டியதைப் போலக் கழுத்தோடு தெறித்து விழ

ஓடிய வேகத்தில் இன்னும் இரண்டு அடிகள் எடுத்துவைத்துச் சரிந்து வீழ்ந்தது வெறும் உடம்பு

முதுகு கிழிந்த நிலையில் பிரபாகரனும் தலைவெடித்த நிலையில் சயந்தனும்



சடலங்களாக்க கண்டெடுக்கப்பட்டார்கள். இந்த மூவரையும் தவிர்ந்த மற்றவர்களில் சிலர் பிணங்களாக மீட்கப்பட்டார்கள். சிலர் அந் நிலையில் கூட மீட்கப்படவில்லை.

## கடன்

சுழிபுரம் மேற்கு- சின்னத்துரை ஐயாவுக்கும், அன்னப்பிள்ளை அம்மாவுக்கும் வட்டுக்குள் போய்விட்ட வயது.

மற்றெல்லாப் பிள்ளைகளும் மணமாகிப் போய்விட, கடைசி மைந்தன் மட்டும் பெற்றோருடனேயே இருந்தான்.

நோயொன்றுக்குக் கால் ஒன்றைப் பறிகொடுத்திருந்த அப்பாவுக்கும், சுகயீனங்களால் இயலாமல் போயிருந்த அம்மாவுக்கும் -

அவன் தான் பல்லக்கு, காவல், வாழ்வு.

சண்முகநாதனுக்கு 24 வயது.

தங்களுக்காகத் தன்னை வருத்தியவனுக்காகப் பெற்றோர்கள் வருந்தினார்கள்! அவனையும் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தினார்கள்.

அவளுக்குப் பெயர் காசிவதி. வயது 21.

சந்திரிகா அம்மையார் சமாதானம் பேசிக் கொண்டிருந்த காலத்தில் ஒரு நாள், அவர்களது மணநாளானது.

சந்திரிகா போர் தொடுத்த பின்பு ஒரு நாள் அவரது படைகள் முன்னேறிப் பாய்ந்தன.

நவாலித் தேவாலயத்தின் அயலில் அவர்களும் தஞ்சம் புகுந்திருந்தார்கள்.

'புக்காரா' நிகழ்த்திய கோரம்!

ஆறு மாதங்களின் முன் மணக்கோலத்தில் நின்ற மகன் -

படுகாயப்பட்டு வீழ்ந்த அப்பாவுக்கும், அம்மாவுக்கும் எதிரில் -

பிணக்கோலமாய் வீழ்ந்தான்!

கதறித் துடிக்கின்ற அவனது இளம் மனைவியின் கருவில் வளர்ந்து கொண்டிருக்கும் அவனது வாரிசு அப்பாவைக் கொன்றோரின் கணக்கை நாளை முடிக்கும்!

## ஆனால்...

நிச்சாமம் காளி கோவிலடி - சங்கானை. சிவகுமாரனுக்கும் தெய்வநாயகிக்கும் ஒரே பிள்ளை. பெயர் ஜெனித்தா, ஆறே வயதுச் சிறுமி.

உக்கிர 'செல்' வீச்சுக்குத் தப்ப, அவர்கள் ஊர்விட்டு ஓடிக்கொண்டிருந்தார்கள்.

வழியில் -

சிவகுமாரனின் சகோதரரான உதயகுமாரன் -

தனது இரண்டு பிள்ளைகள் சதீஸ்குமார் (13) உஷாநந்தினி (12) ஆகியோரோடு, தாயார் பொன்னர் நாகமுத்துவையும் (75) ஏற்றிக் கொண்டு, மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார்.

அன்னை கட்டிலை நெருங்கினாள், ஆரத்தழுவும் ஆனந்தத்தோடு அன்னை கட்டிலை நெருங்கினாள்.
அங்கே பிள்ளையைக் கண்டாள்....!....!
ஆனால் -
பிள்ளையாக அல்ல.......பிணமாக!

அவருடன் - தமது பிள்ளை ஜெனித்தாவையும் ஏற்றி அனுப்பிவிட்டார்கள் பெற்றோர்கள். மனதுக்கு நிம்மதி.

"கடவுளே! பிள்ளையாவது தப்பட்டும்."

ஆனால் -

மோட்டார் சைக்கிள் நவாலித் தேவாலயத்தை அடைவதற்கும், 'புக்காரா'க் குண்டுகள் நிலத்தை மோதி வெடிப்பதற்கும் அதிக நேர இடைவெளி இருக்கவில்லை.

மோட்டார் சைக்கிள் 'சுக்கல் சுக்கலாய்ச்' சிதறிப் போனது.

அதில் வந்த ஐவரும்—!

பிய்ந்து சிதறிய உடற்கூறுகளைச் சேர்த்தெடுத்ததில், ஏனைய பேரும் தான் தேறினார்கள். பிள்ளை இல்லை.

இடம்பெயர்ந்திருந்த வீடொன்றில் மரணக் கிரியைகளும், எட்டுச் செலவும் செய்து முடித்து இரண்டாம் நாள் -

கடைத்தெருவுக்குப் போயிருந்த சிவகுமாரனின் கண்களில் தட்டுப்பட்டது அந்தப் பத்திரிகைச் செய்தி.

மருத்துவமனை அழைப்பு விடுத்திருந்தது.

"ஜெனித்தா என்ற சிறுமி காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளார்! உறவினர்கள் உடன் வரவும்."

மகிழ்ச்சி, இன்ப அதிர்ச்சி!

அந்த இடத்திலிருந்து நேராகவே மருத்துவமனைக்கு ஓடினார். கட்டில் கட்டிலாய்த் தேடினார்.

புண்பட்ட மேனியெங்கும் மருந்திட்டுத் துணி சுற்றிச் சோர்ந்திருந்து -

குழந்தை சிரித்தது. தந்தையைக் கண்ட உளப்பூரிப்பில், உடல் நோக்களை மறந்து குழந்தை சிரித்தது.

கட்டியணைத்து -

தந்தை அழுதார். இல்லையென்றான பிள்ளையை உயிரோடு கண்ட மெய்சிலிர்ப்பில் தந்தை அழுதார்.

உண்ணவும் குடிக்கவும் தேவையான எல்லாம் வாங்கி, அவசர அவசரமாக அருகில் அடுக்கினார். குழந்தைக்கு முத்தமிட்டார்.

"நான் ஓடிப்போய் அம்மாவுக்குச் சொல்லி கூட்டிவாறன் மகள்—படுத்திருங்கோ."

மனைவிக்கு உடல் விறைத்தது.

ஆனாலும் ஒரு மகிழ்ச்சி—

இருவருமாய் மருத்துவமனைக்கு ஓடி வந்தார்கள். உள்ளத்தில் வேகத் துடிப்பு ஒரே ஒரு பிள்ளையைக் காண அந்தரப்படும், பெற்ற மனத்தின் உணர்வுக் கொந்தளிப்பு.

அன்னை கட்டிலை நெருங்கினாள், ஆரத்தழுவும் ஆனந்தத்தோடு அன்னை கட்டிலை நெருங்கினாள்.

அங்கே பிள்ளையைக் கண்டாள்—!!

ஆனால் -

பிள்ளையாக அல்ல—பிணமாக!

## நினைவு

அப்பாவுக்குப் பெயர் கனகசபை வாமதேவன், அம்மா தர்மமணி, மூன்று குழந்தைகள்.

மூத்தவன் றஜீகரன்.

ஐந்து மாதங்களுக்கு முன்னர்தான், அச்சுவேலிச் சண்டையொன்றில் வேங்கை வீரனாய்க் களப்பலியாகினான்.

அவன் - 2ஆம் லெப். குமரன்.

போராட்டத்திற்குப் பிள்ளையைக் கொடுத்த ஓர் உன்னத குடும்பம்.

அடுத்தவன் கஜீகரன், 13 வயது. தாவடி தமிழக் கலவன் பாடசாலையின் ஆறாம் ஆண்டில் - வாழ்வுக்கு அத்திவாரத்தை இட்டுக்கொண்டிருந்தான்.

அடுத்தவள் சிந்துஜா. உலகத்தைப் புரிந்து கொள்ளக்கூடிய வயதுச் சிறுமி.

அகோர 'செல்'லடி அது 'முன்னோக்கிப் பாய்தலின்' இரண்டாம் நாள். அக்கம் பக்கமெல்லாம் அதிர்ந்தது.

வீட்டை விட்டு ஓடித் தூரப் போவதைத் தவிர, உயிர்க்காப்புக்கு வேறு வழியில்லை.

அகப்பட்டவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறி, படலை கடந்து வீதிக்கு வர—

"அம்மா—அண்ணான்ர படத்தை எடுக்கேல்ல.."

மறந்துபோன தவறு பெற்றோரின் நெஞ்சில் 'நறுக்'கென்று தைத்தது.

"நான் ஓடிப்போய் எடுத்துவாறன்" - கஜீகரன் வீட்டுக்குள் ஓடினான்.

அவன் ஓடி வீட்டுக்குள் நுழைய -

பீரங்கிக் குண்டுகள் அவர்களைச் சூழ விழத் துவங்கின. வீட்டுக்கு உள்ளே— வெளியே, முற்றத்தில், வீதியில்—

சன்னங்களின் சிதறல் அம்மாவையும் சிறிதாகக் காயப்படுத்திவிட்டது. இனியும் நிற்க

தொடர்ச்சி 13 ஆம் பக்கம்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தேசியத் தலைவருடன் புல்மோட்டைக்கடலில் டோறாவை அழித்த கடற்கரும்புலி மேஜர் கண்ணாளன்


ஒரு வார காலப் பகுதிக்குள் கடற்புலிகள், இசுரேல் தயாரிப்பான மூன்று அதிவேக 'டோறா" பீரங்கிப் படகுகளை தாக்கி அழித்தமை, சிறீலங்காக் கடற்படைக்கும், அரசுக்கும் பேரதிர்ச்சியைக் கொடுத்துள்ளது. இதனால் வடபிராந்திய கடற்பரப்பில் கடற்படையின் நடவடிக்கைகள் பெரிதும் முடக்கப்பட்டுள்ளன. படை முகாம்களுக்கான கடல்வழி விநியோகமும் பாதிக்கப்பட்டுள்ளது. இவற்றால் மழை காலத்திற்கு முன்பாக யாழ். குடாநாடு மீது நடாத்தத் திட்டமிட்டிருந்த பாரிய இராணுவ நடவடிக்கையும் பின்னடைவைக் கண்டுள்ளது.




# தகர்ப்புகளும்

## 'டோறா" படகுகள் மீதான தாக்குதலும் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களும்

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய பின், ஒருவார காலத்திற்குள் சிறீலங்கா கடற்படைக்குச் சொந்தமான மூன்று 'டோறா' படகுகள் தாக்கப்பட்டு, மூழ்கடிக்கப்பட்டு, அழிக்கப்பட்டுள்ளன. 29-08-1995 இல் முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்புலிகளால் கைப்பற்றப்பட்ட 'ஐரிஸ் மோனா' கப்பலைத் தேடிவந்த 'சுப்பர் டோறா' பீரங்கிப் படகே முதலில் தாக்கப்பட்டு மூழ்கடிக்கப்பட்டது. இப்படகுக்கு என்ன நடந்தது என்பதை அறியச் சென்ற சாதாரண 'டோறா' படகு அதே நாளில் சில மணி நேர இடைவெளியில் தாக்கி அழிக்கப்பட்டது. பீரங்கிளும் நவீன 'ராடார்' கருவிகளும் பொருத்தப்பட்ட இசுரேல் தயாரிப்பான இவ்விரு படகுகளின் பெறுமதி 20 கோடி ரூபாக்களாகும். நான்கு அதிகாரிகள் உட்பட இப்படகுகளில் சென்ற 24



முல்லைக்கடலில் தாக்கப்பட்டு எரியும் டோறா இழுத்து வரப்படுதல்

கடற்படையினரும் கொல்லப்பட்டனர். ஆனால், கடற்புலிகளின் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படகுகள் தாக்குதலில் கடற்புலிகள் மகளிர் படையணி பெரும் பங்கெடுத்துக் கொண்டதோடு, 'ஐரிஸ் மோனா' கப்பல் கடத்தலை மகளிர் படையணியே எதுவித இழப்புமின்றி, வெற்றிகரமாகக் கைப்பற்றி கரையோரப் பகுதிக்கு இழுத்து வந்ததாகவும் அறியப்படுகின்றது. இச்சம்பவங்கள், விடுதலைப் புலிகளின் கடலாதிக்கத்தினைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்திய நடவடிக்கையாகவும் மதிப்பிடப்படுகின்றது. இரு 'டோறா' படகுகளிலிருந்தும்,

20 எம். எம் பீரங்கிகள் -04

பெருமளவு 20 எம். எம். பீரங்கி

-எறிகணைகள்

50 கலிபர் துப்பாக்கிகள் -04

ஏ.கே எல். எம். ஜி -01


303 எல். எம். ஜி -01

ஏ.கே ரகத் துப்பாக்கிகள் -10

ஆகிய, ஆயுதங்களும் நவீன ராடார் சாதனங்களும் கைப்பற்றப் பட்டன. தாக்குதலுக்கான 'சுப்பர் டேறா' படகு எரிந்தநிலையில் கடற்புலிகளால் நீருந்து விசைப்படகு மூலம் கடற்கரைப் பகுதிக்கு இழுத்து வரப்பட்டு, மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுமுள்ளது. எம்மினத்தையும் சொத்துக்களையும் அழித்து. நாசவேலைகளில் ஈடுபட்டுவந்த 'சுப்பர் டோறா'வை தமிழீழ மக்கள் மகிழ்ச்சிப் பெருமிதத்துடன் பார்வையிட்டிருப்பார்கள் என்பதில் சந்தேகம் இருக்காது. இப்படகுகளின் இழப்பில் இருந்து கடற்படையினர் மீள்வதற்கிடையில் கிழக்குக் கடற்பரப்பில் புல்மோட்டைக்கருகே 03-09-1995 அன்று கடற்கரும்புலிகள் மேற்கொண்ட கரும்புலித் தாக்குதலில் இசரேல் தயாரிப்பான மூன்றாவது பீரங்கிப்படகையும் சிறீலங்காக் கடற்படை இழந்தது. இத்தாக்குதலில் ஒரு அதிகாரி உட்பட, அதில் சென்ற 10க்கும் மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டனர். ஒரு வாரத்திற்குள் 30 கோடிரூபா பெறுமதியுடைய மூன்று 'டோறா' பீரங்கிப் படகுகளையும், 30க்கு மேற்பட்ட கடற்படையினரையும், பலநவீன ஆயுதங்களையும் சிறீலங்கா இழந்தமை சாதாரண விடயமல்ல. 20-09-95 இல் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள காங்கேசன்துறை துறைமுகக் கடலில் இன்னொரு டோறாப்படகையும் கரும்புலித்தாக்குதலில் சிறீலங்கா இழந்துள்ளமை பிந்திய செய்தியாகும். இதுவும் ஒரு இஸ்ரவேல் நாட்டினுடைய நாசகாரத் தயாரிப்பாகும். இது கடற்புலிகளுக்கும் சிறீலங்கா கடற்படையினருக்கும் இடையே நடைபெற்ற பலத்த மோதல்களுக்கிடையே வெற்றிகரமாக மூழ்கடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நிலைநிறுத்தப்படும் கடற்புலிகளின் கடல் ஆதிக்கம்

புலிப்பாய்ச்சலின் போது காங்கேசன்துறை துறைமுகக் கடலில், நவீன ராடார் பூட்டப்பட்ட எடித்தாரா என்ற கட்டளைக் கப்பல், தரையிறக்கும் கப்பல், பல டோறா பீரங்கிப் படகுகள் ஆகியவற்றை வைத்திருந்த கடற்படையினருடன், நேருக்கு நேர் நின்று கடற்சண்டையில் ஈடுபட்டு 'எடித்தாரா' கப்பலை மூழ்கடித்த கடற்புலிகள், இன்று டோறா படகுகளைச் சண்டைக்கு வரவழைத்து எதுவித இழப்புமின்றி, இருபடகுகளை ஒரே நாளில் தாக்கி அழித்து, அதிலிருந்த கடற்படையினர் அனைவரையும் கொன்று முல்லைத்தீவு கடற்பரப்பில் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டியுள்ளனர். அதே வாரத்தில் கடற் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள கிழக்குப் பிராந்தியக் கடற் பரப்பில் (புல் மோட்டைக் கருகே) கரும்புலித் தாக்குதலை நடாத்தி மூன்றாவது டோறா படகையும் அழித்து, அதிலிருந்த அனைத்துக் கடற் படையினரையும் கொன்று, கிழக்குப் பிராந்தியத்திலும் கடற்படையினருக்குச் சவாலாக எழுந்துள்ளனர்.



எரியும் டோறாவைப் பார்வையிடத் திரண்ட மக்கள்

இப்படகுகளை அழித்த போது அல்லது ஐரிஷ் மோனா கப்பலைக் கைப்பற்றிய போது சிறீலங்காவின் விமானப் படையோ, கடற்படையோ, இராணுவமோ உதவிக்கு வரமுடியாதமுறையில் தமது இராணுவ தந்திரோபாயத்தையும் கடல்புலிகள் கடைப்பிடித்துள்ளனர்.

'சிறு படகுகள் மூலம் தமது தாக்குதல்களைத் தொடங்கிய கடற்புலிகள் இன்று ஏவுகணைகள் மூலம் தாக்குவது

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வரை வளர்ந்து விட்டனர்' எனக் கடற்படையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் 'திவயின' பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார்.

'புலிகள் நடத்தியுள்ள கப்பல் கடத்தல் சம்பவம் மூலம் கடற்பரப்பிலும் புலிகள் போராடக் கூடியவர்கள் என்பது உணர்த்தப்பட்டிருக்கின்றது' என பி. பி. சியின் கொழும்பு முகவர் ஜோர்ஜ் ஆர்னி பி. பி. சிக்கு வழங்கிய ஆய்வுரையொன்றில் தெரிவித்துள்ளார். மேலும்,



முல்லைக்கடலில் தீப்பற்றி எரியும் டோறாக்களில் ஒன்று

இச்சம்பவத்தினால் யாழ்பாணத்தின் மீது அரசு மேற்கொள்ளத்திட்டமிட்டிருந்த தாக்குதல் குறித்த கவனம் திசை திருப்பப்பட்டிருக்கின்றது எனவும் கூறியுள்ளார்

## சிறீலங்கா கடற் படையின் செயற்பாடுகள் முடக்கம்.

சிறீலங்கா கடற்படையின் முதுகெலும்பாகவுள்ள டோறா படகுகள் மூன்று, அடுத்தடுத்து தாக்கி அழிக்கப்பட்டமை, கடற்படை வட்டாரங்களில் பெரும் அதிர்ச்சியையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது. டோறா படகுகள் கரையோர ரோந்துப்படகுகளாக இருப்பினும் கடற்படையினரைப் பொறுத்து அவர்களின் ரோந்துப் பணிகளில் அவற்றின் பங்கே பெரிதாகவுள்ளது. டோறா படகுகளின் வேகமான நகர்வே இதற்குப் பிரதான காரணமாகும். அத்துடன் பீரங்கிகள், ராடார் போன்ற சாதனங்களைப் பூட்டக்கூடிய வசதிகளையும் இவை கொண்டுள்ளன. அதனால் கடற்படையினரின் பாதுகாப்பான ரோந்துக்கும், தமிழ் மக்கள் மீதான இனஅழிப்புக்கும் டோறா படகுகள் பெரிதும் உதவியாகவுள்ளன.

சீனாவிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கடற் படையின் பாரிய போர்க்கப்பலான 'ஜயசாகர' போன்றனவும் ரோந்துப்பணியிலேயே பெரிதும் ஈடுபட்டுள்ளன. ஆனால் இக்கப்பல்கள் மிகவும் மெதுவான நகர்திறனையே கொண்டுள்ளன. ஆனால் அழிக்கப்பட்ட சுப்பர் டோறா படகு 40 கடல்மைல் வேகத்திலும், மற்றைய சாதாரண டோறா படகுகள் 30 கடல்மைல் வேகத்திலும் செல்லக்கூடியன. அதனால் கடற்புலிகளிடமுள்ள சாதாரண நீருந்து விசைப்படகுகளை, டோறா படகுகளைப் பயன்படுத்தி இலகுவில் தாக்கி அழித்துவிடலாம். கடற்புலிகளின் நடமாட்டத்தை விரைவாகக் கட்டுப்படுத்தலாம் என்ற அதீத நம்பிக்கை சிறீலங்காக் கடற்படைக்கிருந்துள்ளது.

ஆனால், **'அடுத்தடுத்து மூன்று டோறாக்களும் அழிக்கப்பட்டு, அதில் இருந்த கடற்படையினர் யாவரும் கொல்லப்பட்டமையால் கடற்படையினரிடம் அதுவரை இருந்த நம்பிக்கை, டோறா படகுகளைப் போல் வேகமாக அழிந்து விட்டது.'**

அது மட்டுமல்ல, டோறா படகுகள் எவ்வாறு தாக்கியழிக்கப்பட்டன என்பதைச் சிறீலங்கா கடற்படையினரோ, இராணுவ ஆய்வாளர்களோ சரிவரக் கண்டு பிடிக்கவில்லை. தரையிலிருந்து தரையை நோக்கி ஏவப்படும் ஏவுகணைகளினால் அல்லது சிறியரக நீர்மூழ்கிக் கப்பலினால் தாக்கியே இப்படகுகள் மூழ்கடிக்கப்பட்டிருக்கலாம் என்ற ஊகங்கள் மட்டுமே இராணுவ ஆய்வாளர்களினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஊகங்களும் கடற்படையினரின் மனோ வலிமையைப் பெரிதும் பாதித்துள்ளன. படகுகள் எவ்வாறு தாக்கப்பட்டன என்பதை அறிந்து, அதற்கெதிரான பலத்தைப் பெறும் வரை, முன்பு போல் வடபிரதேசக் கடலில் ரோந்து சென்று மீண்டுமொரு முறை கடற்புலிகளின் மரணப்பொறிக்குள் அகப்பட கடற்படையினர் தயாராக வில்லை. ரோந்துப் படகுகள் மட்டுமல்ல, திருமலைக் கடற் படைத்தளம், எந்நேரமும் தாக்கப்படலாம் என்ற அச்சமும் கடற்படையினர் மத்தியில் எழுந்துள்ளது.

அதாவது, **'கடற்படையினருக்கும் விநியோகக் கப்பல்களுக்கும் பாதுகாப்பளித்து வந்த டோறா படகுகளுக்கே பாதுகாப்பளிக்க வேண்டிய நிலையையும் டோறா படகுகள் மீதான தாக்குதல்கள் ஏற்படுத்தியுள்ளன.'**




தேசியத் தலைவருடன் புல்மோட்டைக்கடலில் டோறாவையழித்த கடற் கரும்புலி மேஜர் நகுலன்

# தாக்கங்களும்

## வடபகுதி படை முகாம்களுக்கான விநியோகத்தில் பெரும் பாதிப்பு

சிறீலங்கா அரசு, வடபகுதி படை முகாம்களுக்கான விநியோகத்திற்குக் கடல் வழியினையே பெரிதும் நம்பியுள்ளது. குடாநாட்டு முகாம்களுக்கான கடல்வழி விநியோகம் திருமலைத் துறைமுகத்திலிருந்தே நடைபெறுகிறது. டோறா படகுகளே கடல்வழி விநியோகத்தைப் பாதுகாக்கும் கவசமாகவுமுள்ளன. நவீன ஆயுதங்கள் பூட்டப்பட்ட டோறா படகுகள் நாலாபுறமும் பாதுகாப்பு அளித்து அணிவகுத்து வர, எடித்தாரா போன்ற பாரிய கப்பல்கள் மூலமே வடபகுதிப் படைமுகாங்களுக்குத் தேவையான உணவுகள், ஆயுத-தளபாடங்கள் என்பன எடுத்துச்செல்லப் படுவது வழக்கமாகும். ஆனால் டோறாப் படகுகளின் அழிப்பினால் படைமுகாங்களுக்கான விநியோகமும் கேள்விக்குறியாகி விட்டது. பெரும்பாலும் கடல்வழி விநியோக வழிகளனைத்தும் அடைக்கப்பட்டதாகவே கருதப்படுகின்றது.

கடல்வழி விநியோகத்துக்குப் பதிலாக வான்வழி விநியோகத்தின் மூலம் பெரியளவு படையணிகளைக் கொண்ட வடபகுதி முகாங்களுக்குத் தொடர்ந்து விநியோகத்தைச் செய்யமுடியாது. பெருமளவிலும் செய்ய முடியாது. வான்வழி விநியோகம் செலவும் கூடியது. வான்வழி விநியோகத்திற்காகப் பெரிதும் நம்பியிருந்த 'அவ்ரோ' விமானங்கள் இரண்டு சுட்டுவீழ்த்தப்பட்ட பின், ஏவுகணை எதிர்ப்புக் கருவிகள் பூட்டப்பட்ட 'அன்டனோவ்-32" விமானங்களே இச்சேவையைச் செய்தன. ஆனால் காரணத்தையே அறியமுடியாத முறையில்



29.08.95இல் முல்லைக்கடலில் அழிக்கப்பட்ட சுப்பர்டோறாவின் முன்னைய தோற்றம்

'அன்டனோவ்- 32" விமானமொன்று கடலில் வீழ்ந்து மறைந்துள்ளமை, வான்வழி விநியோகத்தையும் கேள்விக்குறியாக்கியுள்ளது. ஆனால் இவ்விமானத்தில் ஒரேமுறையில் 7 மெட்ரிக் தொன் எடையுள்ள பொருட்களையே எடுத்துச் செல்ல முடியும். ஆனால் எடித்தாரா கப்பலில் ஒரேமுறையில் 1200 மெட்ரிக்

ப. நவயுகன்

தொன் எடையுள்ள பொருட்களைக் கொண்டு செல்ல முடியும். முன்னோக்கிப்பாய்தல் இராணுவ நடவடிக்கையின் போது யாழ் குடா முகாம்களுக்குத் தேவையான உணவு, ஆயுத -தளபாடங்கள் மட்டுமல்ல, படையினரையும் எடித்தாரா கப்பலே எடுத்துச் சென்றது. ஆனால் டோறா படகுகளின் பாதுகாப்புத் துணையின்றி கடற்படையினருக்குச் சொந்தமான கப்பல்களும் வடபிரதேசக் கடலில் நடமாடமுடியாது. இதனாலேயே கடல் வழி விநியோகத்திலும் டோறாப்படகுகளின் அழிப்பு பாரிய முடக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

## கேள்விக்குறியாகியுள்ள பயணிகள் கப்பல் சேவை

டோறா படகுகளின் அழிப்புடன் தொடர்புடைய ஐரிஷ் மோனா கப்பல் கைப்பற்றப்பட்டு, மாலுமிகள் அழைத்துச் செல்லப்பட்டதைத் தொடர்ந்து திருமலை- காரைநகர்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்



புலிகளால் கைப்பற்றப்பட்ட **ஐரிஸ் மோனா** கப்பல்

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தவறான கணிப்பு

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இனப்பிரச்சினை தொடர்பாக ஒன்றன் பின் ஒன்றாக பல தவறான தீர்மானங்களை எடுத்துச் செல்கின்றார். இந்த வகையில் அவர் இறுதியாக எடுத்துள்ள தீர்மானம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உணவு நெருக்கடிப் பஞ்சம் ஒன்றை உருவாக்குவதன் மூலம் அப்பிரதேச மக்களை பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கி, பணியச் செய்து விடலாம் என்பது போல் தெரிகின்றது.

சனாதிபதி சந்திரிகாவின் இந்நடவடிக்கையானது பொருளாதாரத்தடையின் ஒரு தொடர்ச்சியாக விரிவடைகின்றது என்றே கொள்ளமுடியும். மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான பின்னர் பொருளாதாரத்தடையில் தீவிர கவனம் செலுத்தும் அரசாங்கம் தற்பொழுது, உணவுத் தட்டுப்பாட்டை தோற்றுவிக்கும் வகையிலான இறுதி முயற்சிவரை சென்றுள்ளது.

அரசின் இந்நடவடிக்கையானது, மிகவும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஈழப்போர் ஆரம்பமான காலத்தில் இருந்து தமிழ் மக்களின் அத்தியாவசியத் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்படாது விட்டாலும், சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்கியகாலத்தில் ஓரளவேனும் சீராகவே அவை கிடைக்கப்பெற்றன. ஆனால் தற்பொழுது செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பை அரச திட்டமிட்டு தடுத்து விட்டுள்ளது. அத்தோடு வடக்கே அனுமதிக்கும் லொறிக்களின் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்தியுள்ளது. இதன் காரணமாக விநியோகம் தடைப்பட்டு பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

இதேசமயம், யாழ் செயலகம் அரசாங்கத்திற்கு குடாநாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடிப் பற்றாக்குறை பற்றிப் பலகடிதங்களை எழுதியுள்ளது. இதற்கும் மேலும், கொழும்பு சென்றுள்ள அரச அதிபர் இதுதொடர்பாக சனாதிபதி சந்திரிகாவை சந்திப்பதற்கு எடுத்த முயற்சிகளும் தோல்வியே கண்டுள்ளன. யாழ், அரச அதிபர் திட்டமிட்டு புறக்கணிக்கப்பட்டு வருகின்றார் என்பதே உண்மையாகும்.

ஆனால் சனாதிபதி சந்திரிகாவின் இவ் அணுகுமுறை, அதாவது பட்டினி போடுதல் மூலம் பணிய வைத்தல், அல்லது பட்டினிபோடுவதோடு இராணுவநடவடிக்கைகளை மேற்கொண்டு இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வொன்றை எட்டுதல் என்பது நடைமுறையில் சாத்தியமாகப் போகும் ஒன்றல்ல

இனப்பிரச்சினை, ஆயுதப் போராட்டமாக அரும்பியபோது இதற்கு இராணுவத்தீர்வு காணலாம் என அரச எண்ணியது. கோரமான படுகொலைகள், சித்திரவதைகள், அழிப்பு நடவடிக்கை மூலம் மக்கள் அச்சம் கொண்டு, பீதியடைந்து ஆயுதப் போராட்டத்தை கைவிடுவார்கள், அல்லது ஆயுதம் தாங்கியோரை காட்டிக் கொடுப்பார்கள் என்று அது கருதியது.

ஆனால் விளைவுகளோ எதிர்மறையாக இருந்தன இராணுவ அடக்குமுறை மேலும், மேலும் அரசிற்கு எதிராகப்போராடவே மக்களைத் தூண்டியது. அடக்குமுறைகளைக் கண்டுமக்களுக்கு அச்சம் ஏற்படவில்லை ஆத்திரமே ஏற்பட்டது. இதனால் போராட்டமே வளர்ச்சி கண்டது.

## நாகர் கோயில் பாடசாலையில்...

தொங்கிக் கிடந்தன. சந்திரிகாவின் காட்டுமிராண்டித்தனமான செயலில் படுகாயமடைந்த சில மாணவர்கள் இரு கைகளையும் சிலர் இரு கால்களையும் இழந்து நிரந்தரமாகவே முடமாக்கப் பட்டுள்ளனர். இதுவரை 12 மாணவர்களின் கால்கள் அகற்றப்பட்டதாக யாழ் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாடசாலை குண்டு வீச்சின் போது, அயலிலுள்ள பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளனர். அதேவேளை, அன்றைய தினம் வடமராட்சியில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டு வீச்சு, நீண்ட தூர எறிகணை வீச்சு ஆகியவற்றால் பலர் கொல்லப்பட, பல பொதுமக்கள் படுகாயமடைந்தனர். மணற்காடு, கற்கோளம் ஆகிய பகுதிகளிலேயே இத்தாக்குதல் கூடுதலாக இருந்துள்ளது. எறிகணைத்தாக்குதல் ஒன்றில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள். அதில் 4 பேர் சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

22-09-95 இல் நாகர்கோயில் பாடசாலை, அதன் அயற்பகுதிகள், மற்றும் வடமராட்சிப் பகுதிகளில் வீசப்பட்ட குண்டுகள், ஏறிகணைத் தாக்குதலில் 100 க்கு மேற்பட்ட பொதுமக்கள் (மாணவர்கள் உட்பட) கொல்லப்பட, 150 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர். மாணவர்கள், பாடசாலைகள், கோயில்கள், தேவாலயங்கள், பொதுமக்கள் மீதான குண்டு வீச்சுக்களை மிகவும் வன்மையாகக் கண்டித்து, 29-09-95 இல் யாழ் நகரில் நடைபெற்ற யாழ் வெகுசன ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டப் பேரணியில் மாணவர்கள், மதகுருமார்கள், பொதுமக்கள், ஊழியர்கள் உட்பட 1 லட்சம் பேர் கலந்து கொண்டதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## வடமராட்சியில் ...

வீசின. மாலை 5.20 மணியளவில் திரும்பவும் அப்பகுதியில் புக்காரா தாக்குதல் இடம்பெற்றது. மொத்தம் 20 குண்டுகள் அப்பகுதியில் அன்றைய தினம் 6 மணித்தியாலங்களுக்குள் வீசப்பட்டன. பெரும்பாலும் குண்டுகள் கரையோரப் பகுதியில் விழுந்ததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. சைக்கிளில் சென்று கொண்டிருந்த தியாகராசா அருந்தவராசா வயது 30 என்பவர் காயமுற்றார். அவர் அம்பன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடற்கரையோரத்தில் விழுந்த குண்டுகளினால் பல குழிகள் தோன்றின. இரவு 7.30 மணியளவில் வடமராட்சி இலந்தைக்காடு நாவலடிப் பகுதியில் புக்காரா விமானம் நடத்திய றொக்கட் தாக்குதலில் உடுப்பிட்டிச் சந்தி வீதியைச் சேர்ந்த செல்லையா இராசையா- வயது 75 அந்த இடத்திலேயே பலியானார். மாலை 6.15 இல் இருந்து நள்ளிரவு வரை பலாலி முகாமில் இருந்து உடுப்பிட்டி, கெருடாவில், தொண்டமனாறு, நாவலடி, இலந்தைக்காடு, வினையானன், மைலியதனை ஆகிய இடங்களை உள்ளடக்கிய பகுதிகளில் பலத்த ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல் நடாத்தப்பட்டது. இதனால் நாவலடியைச் சேர்ந்த இளையகுட்டி தங்கராசா- வயது 55 என்ற வயோதிப மாது அந்த இடத்திலேயே பலியானார். இரவு நடத்தப்பட்ட விமான, எறிகணைத் தாக்குதலினால் படுகாயமடைந்த 16 பேர் பருத்தித்துறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இராணுவத்தினரின் எறிகணை வீச்சுக்கு அஞ்சி 20-09-95 அன்று இரவு அச்சுவேலி புனித திரேசா கன்னியர் மடத்தில் தங்கி இருந்த மூவர், அங்குள்ள மைதானத்தில் விழுந்து வெடித்த எறிகணையால் காயமடைந்துள்ளனர். கன்னியர் மடக் கூரையும் சேதப்பட்டது. இம்மானுவேல் சிராணி வயது 22 அச்சுவேலி, இம்மானுவேல் டயானா மற்றும் ஒருவர் காயமடைந்துள்ளனர்.

வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதியில் உள்ள திக்கம், பாரம்புளம், கற்கோட்டை ஆகிய இடங்களில் 21-09-95 மாலை 5.45 மணியளவில் இரு புக்காரா விமானங்கள் நடத்திய கண்மூடித்தனமான குண்டு வீச்சினில் 9 வயது சிறுவன் ஒருவன் பலியாகினான். 14 பேர் படுகாயமடைந்தனர். பல வீடுகள் சேதமடைந்தன.

## தமிழகக் குழுக்களுக்கு..

பற்றித் தெளிவாகத் தெரிந்திருந்தும், புலிகள் இயக்கத்தை ஒதுக்கிவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது என்பது, உண்மையில் ஒரு சூழ்ச்சிகரத் திட்டம் என்பதில் ஐயமில்லை. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தினால், அவர்கள் தமிழினத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்துவதில் கண்ணாக இருப்பார்கள் என்பது அரசிற்குத் தெரியும். ஆனால் ஒரு தனித்துவமான தேசிய இனம் என்ற அந்தஸ்த்தைப் பெற முயல்வதை, சிங்களப் பேரினவாதிகள் விரும்பவில்லை. எனவேதான், தமிழ் இனத்திற்குத் துரோகமிழைத்துவிட்டு கொழும்பில் தஞ்சமடைந்திருக்கும் தமிழ்க்குழுக்களை அழைத்து - அரசியல் தீர்வு என்ற போர்வையில் - வளர்ந்து வரும் தமிழ்த் தேசியத்தைச் சிதைக்கச் சந்திரிகா அரச விரும்புகிறது.

இதேவேளை, இந்த சூழ்ச்சிகரத் திட்டத்திற்கு சர்வதேச ஆதரவைப் பெற்றுவிடுவதற்காக, சந்திரிகா அரச படாதபாடு படுகின்றது. 'தென்னாசியாவிற்கே முன்னுதாரணமாக இருக்கக்கூடிய ஒரு சிறந்த தீர்வுத்திட்டம் இது' எனப் புகழாரம் சூட்டுவதன் மூலம் இந்திய ஆளும் வர்க்கத்தின் அடிவருடிகளான பத்திரிகைகளும் சந்திரிகா அரசின் சர்வதேசப் பிரச்சாரத்திற்கு முண்டுகொடுத்து வருகின்றன.

இவை ஒருபுறமிருக்க, 'தமிழர்களுக்கு அரசியல் தீர்வுத்திட்டம், புலிகளுக்கு இராணுவத்தீர்வு' என்று கூறிக்கொண்டு, தமிழர் நிலம் மீது - குறிப்பாக வடபுலம் மீது - பாரிய படையெடுப்பு ஒன்றை மேற்கொள்ளவும், சந்திரிகா அரச முயன்றுவருகின்றது. மாரிமழை தொடங்க முன்னர் அந்தப் படையெடுப்பு ஆரம்பித்துவிடும் என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. அதேவேளை, கிழக்கு மாகாணத்தில் இருந்தும் தென்பகுதியில் இருந்தும் படையினர் வடக்கு நோக்கி அனுப்பப்படுகின்றனர்.

இவ்விதம் வெளிப்படையான படையெடுப்பு ஒன்றிற்கு அரசுப் படைகள் ஆயத்தமாகும் அதேவேளை, தமிழர் நிலத்தில் நாசவேலைகள் புரிந்தும் - சதிமுயற்சிகளை மேற்கொண்டும் புலிகளின் தலைமையை அழித்துப் போராட்டத்தை நசுக்கும் எண்ணத்துடன், ஒரு புலனாய்வுப்போரையும் எதிரிகள் நடாத்த முனைகின்றனர்.

இவ்விதம், இராணுவரீதியாக - அரசியல்ரீதியாக - சர்வதேச மட்டத்திலான புலிகள் எதிர்ப்பு பிரச்சாரரீதியாக - புலனாய்வுரீதியாக என்று, நான்குமுனைத் தாக்குதலை எமது விடுதலைப் போராட்டத்தின்மீது தொடுத்து போராட்டத்தைச் சிதைக்க, சந்திரிகா அரச முயன்று வருகின்றது.

எனினும், சர்வதேச புலிஎதிர்ப்புப் பிரச்சாரங்களும் உள்ளூர் மட்டத்திலான அரசியல் சூழ்ச்சிகளும், ஏறக்குறையத் தோல்விகண்டுவிட்டன. வெளிநாட்டில் வாழும் தமிழ் மக்களின் எதிர்ப்புப் பிரச்சாரத்தாலும், எமது மக்களின் அரசியல் விழிப்புணர்வாலும் இந்தத் தோல்வி அரசிற்கு ஏற்பட்டுள்ளது

ஆயினும், இராணுவப் படையெடுப்பையும், புலனாய்வுப் போரையும் எதிர்கொண்டு முறியடிக்கவேண்டிய தேவை உள்ளது. மக்களின் இடைவிடா எச்சரிக்கை உணர்வாலும், இளம் சமூகம் புலிகள் இயக்கத்துடன் இணைந்து கொள்வதன் மூலமும், எதிரியின் சவாலை முறியடித்து வெற்றிபெற முடியும்.

## யாழ் நகரில் ...

சி. அலுவலகங்களில் நின்ற பேரணி அங்குள்ள யாழ் வதிவிடப் பிரதிநிதிகளிடம் மகஜர்களைக் கையளித்தனர். இதன் பின்னர் இறுதியிற் பேரணி கச்சேரியிற் கூடியது. இங்கு அமைக்கப்பட்ட மேடையின் மூன்று பக்கங்களிலும் இறந்த மாணவர்களின் உருவப்படங்கள் வைக்கப்பட்டிருந்தன.

நாகர் கோயில் மகா வித்தியாலயம் அதிபர் குண்டு வீச்சு நடந்த அந்தச் சம்பவத்தை ஏங்கி அழுதவாறு மக்கள் முன்னிலையிற் கூறினார். வந்திருந்த மக்கள் அனைவரது மனங்களையும் அது உலுக்கிய நிகழ்வாகும். கூட்டத்தின் முடிவில் வெகுசன அமைப்புக்களின் மகஜர் அரச அதிபர் ஊடாகச் சனாதிபதிக்கும், மாணவர்களின் மகஜர் கல்வி பரிபாலன அதிபர் ஊடாகச் சனாதிபதிக்கும் கையளிக்கப்பட்டது. பின்னர் பல்கலைக்கழகத் துணை வேந்தர், மாணவர் பிரதிநிதிகள், பொது அமைப்பின் பிரதிநிதி, மத குருமார்கள் ஆகியோர் உரையாற்றினர்.

## நிஜம் வடிவில் நிழல்...

ஒரு பிள்ளையின்ர உணர்வை மதிக்காம வெளியில எடுக்கிறது நியாயம் இல்லை அண்ண, அப்பிடிச் செய்யவும் என்னால் முடியாது.

குறை நினைக்காதையிங்கோ. உங்களுக்கு இன்னும் ஒரு பிள்ள இருக்கு. அத நினைச்ச நீங்கள் சந்தோசப்படோணும். ஏனெண்டா, எத்தனையோ பெற்றோருக்கு அந்தப் பாக்கியம் கூட இல்லை. ஆனா அதுகளும் சந்தோசமாத்தான் இருக்குதுகள். நீங்கள் இப்பிடி அழுது குளறித் திரிஞ்சு, உங்கட பிள்ளையின்ர உண்மையான உணர்வுகளை கொச்சைப்படுத்திப் போடாதையுங்கோ! அத்தத்தான் நான் சொல்ல விரும்புறன். நீங்கள் சந்தோசமா வெளிநாடு போங்கோ. ஆனா நீங்கள் நெடுக வெளிநாட்டில் வாழேலாது. அண்ண! என்றோ ஒரு நாளைக்கு நீங்கள் இங்க திரும்பி வரத்தான் வேணும். அப்பிடி நீங்கள் வரும் போது நாங்கள் இருக்கிறமோ இல்லையோ! உங்கட பிள்ள இருக்குதோ இல்லையோ! கட்டாயம் உங்களுக்கெண்டொரு நாடு இருக்கும். அந்த நாட்ட மீட்டதில உங்கட பிள்ளைக்கும் பங்கிருக்கெண்டு நீங்களும் பெருமைப்படலாம் அண்ண! நீண்ட பிரசங்கமே செய்து முடித்த ராசன் எழுந்து கொண்டு விடை பெற்றான்.

வழி நெடுகிலும் கதையே இல்லை.

அண்ண! என்ன கடுமையா யோசிக்கிறியள்?' ராசனின் அமைதியைக் கலைக்க முற்பட்டான் கண்ணன்.

'இல்லையடா, அடுத்த நேரச் சாப்பாட்டிற்கு வழி இல்லாட்டிலும், தன்ர பிள்ள படிக்காட்டிலும் பரவாயில்லை- போராடோணும் என்று நினைக்கிற பெற்றோரையும், ஊர்ப்பிள்ளையெல்லாம் போராடினாலும் தன்ர பிள்ளை படிக்கோணும்- சொகுசா வாழ்ந்த பிள்ளை கஸ்ரத்தைத் தாங்கிக் கொள்ளாது என்று நினைக்கிற பெற்றோரையும் யோசிச்சுப் பார்த்தனான்' என்றான் ராசன். அது இல்லையண்ண! என்றபடி பெரிதாய்ச் சிரித்தான் கண்ணன். 'என்னடா! பெரிசா சிரிக்கிறாய்' என்றபடி கண்ணனை நோக்கினான் ராசன்.

'இல்லையண்ண! இருபது ஆண்டு உறவுக்காரரைச் சந்திக்க வந்தீங்கள். அத நினைச்சத்தான் சிரிக்கிறன்' என்றான் கண்ணன் நக்கலாக.

ராசன் அமைதியானான். அவனுக்கு மனிதர்களைப் புரிகின்றது. ஆனால் நிஜங்களாய்த் தோன்றும் நிழல்களைத்தான் அடையாளம் காண, அவன் இன்னமும் பக்குவப்படவில்லை. இப்பொழுது அவனது அமைதியில் சில மனிதர்களைப் புரிந்து கொண்ட திருப்தி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# போர் முரசம் ஒலிக்கட்டும்

- பிரபா தாசன்

தாய் நிலம் காக்கப் புறப்பட்டோம்
சாவினைக் கண்டா
பயப்பட்டோம்
பாசறைத்தோழரை உரமிட்டோம்
பைந்தமிழ் ஈழம்
வளர்த்திட்டோம்

போர் முரசெங்கும் ஒலிக்கட்டும்
புலிப்படை வியூகம் வகுக்கட்டும்

எதிரிகள் சிதறி ஓடட்டும் – தமிழ்
ஈழத்திற் புலிக்கொடி பறக்கட்டும்

விடியலைச் சேவல் கூவட்டும் – நம்
வெற்றியைத் தோழர் கூறட்டும்
மாவீரர் மனைச்சுடர் எரியட்டும்
மனதினில் அவர் புகழ் நிலைக்கட்டும்

கடற்புலி கடலதை ஆளட்டும் – எம்
கரும்புலி காவியம் படைக்கட்டும்
வான்புலி வானில் பறக்கட்டும் – வரும்
வேங்கைகள் எல்லையைக் காக்கட்டும்

கழனிகள் விளைந்து செழிக்கட்டும் – உயர்
கல்வியுந் தொழிலுஞ் சிறக்கட்டும்
காற்றினிற் கீதம் ஒலிக்கட்டும் – எம்
காவிய நாயகன் ஆளட்டும்



# சிந்தையிரங்குவீர்! சிந்தையிரங்குவீர்!!

இங்கு நாங்களும் ஈழ மண்ணினை
நீங்கியே வந்தவர் திக்கெலாம்
செறிந்தவர்
ஓங்கி மேற்கிலும் ஓமான் நாட்டிலும்
ஓதல் போதுமோ! தூங்கலாகுமோ!
அங்கு நம்மவர் சாதல் கண்டுமே
அசட்டையாக நீர் இருக்கலாகுமோ!
எங்கு போகுவார் எம்மைவிட்டவர்!
எண்ணிப் பாரடா எழுந்து கைகொடு

வெந்து மாள்கிறார் வேங்கையாயவர்
வெளியில் வந்த நீர்
வந்த மண்ணிலே சுகமாய் வாழ்கிறீர்
அந்த மண்ணிலே போர் நடக்குது இந்த
மண்ணிலே என்ன செய்குவாய்
வந்த விடுதலை இடை நடுவிலே
வெந்து போவதா சிந்தையிரங்கடா

.. துரை சிவபாலன்

முடியாது, ஆனால், உள்ளே போனவன் வரவில்லையே- தேடவும் எறிகணைகள் விடவில்லை.

'அவன் பின்பக்கத்தால ஓடி வந்திடுவான்,



நாங்கள் போவம்'

போகத்தீர்மானித்திருந்த உறவினர் வீட்டை அவர்கள் சென்றடைந்து, காயப்பட்ட அம்மாவுக்கு மருந்து கட்டி, அன்றைய நாள் இருண்டு அடுத்த நாளும் விடிந்துவிட்டது.

கஜீகரன் வந்து சேரவேயில்லை.

அம்மாவுக்கு அமைதி கெட்டது.

ஓய்வற்ற 'செல்'லடி மாலையில் ஓய சிந்துஜாவோடு தாயும் தந்தையும் வீட்டிற்குப் புறப்பட்டார்கள்.

வீடும் காணியும் கிடந்த கோலம். அலங்கோலம்!

செல்லுகள் 'தாளித்திருந்தன!'

அடிவளவுக்குள் -

கூடுதலாகக் கரைந்து பறந்து திரிந்தன காகங்கள். நெஞ்சு 'திக்'கென்றது.

அங்கே! -

வீழ்ந்து கிடந்த மரந்தடிகளின் முறிவுகளுக்குள் சதைத் துண்டங்கள்-

சிதறிய தலை, பிய்த்தெறியப்பட்ட கை, சிதைந்த கால், நீல நிறக் காற்சட்டை-

உடைந்துபோய் மூத்தவனின் படம்-

அப்பாவும் அம்மாவும் குலுங்கிக் குலுங்கி அழத்தொடங்கினார்கள்.

அழுத கண்களுடன்-

உடைந்து கிடந்த பெரியண்ணாவின் படத்தை எடுத்துக்கொண்டாள் சிந்துஜா!

## அர்த்தம்

குருசாமி ஐயா செத்துப்போன பிறகு, மகேஸ்வரி அம்மாவின் பொழுதுகள் பேரப்பிள்ளைகளோடு தான் கழிந்தன.

அவர்களுடைய சிரிப்பில், அம்மா ஆண்டவனைக் கண்டாள்.

அம்மாவுக்கு இரண்டு மகள்மார். மூத்தவள் அருஸ்தலாதேவி, அடுத்தவள் ஆனந்தசோதி.

மூத்தவளுக்கு மணமாகி மூன்று குழந்தைகள். பிள்ளைகளின் அப்பா நகுலேஸ்வரன்.

நகுலேஸ்வரன் அம்மாவில் - தன் மாமியில் - கொண்டிருந்த அன்பு அலாதியானது. அது ஒரு வித்தியாசமான - நெருக்கமான உறவு.

அந்த உக்கிர நாள் -

ஊர்ச் சனங்களெல்லாம் வீடு வாசல்களைவிட்டு வெளியேறிக்கொண்டிருந்தனர்.

"அரிசி வாங்கிச் சமைச்சுச் சாப்பிட்டிட்டு, நாங்களும் எங்கையாவது வெளிக்கிடுவம்" அம்மா தான் கடைக்குப் புறப்பட்டாள்.

அம்மா கடையடிக்குப் போய்ச் சேர்ந்த அதே நேரத்தில், கடையடியில் நின்ற சனக் கூட்டத்தைக் குறிவைத்து, ஏவுகுண்டுகளை வீசியது 'புக்காரா'.

காயப்பட்டு வீழ்ந்து கத்திக் குழறியவர்களையும், கத்திக் குழற முடியாமல் செத்து வீழ்ந்தவர்களையும், அகப்பட்ட வாகனங்களில் ஏற்றி அனுப்பி விட்டார்கள் தப்பியவர்கள்.

மறுநாள் -

யாழ். மருத்துவமனையின் பிரேத அறையிலிருந்து - கண்ணீரால் கையெழுத்திட்டு நகுலேஸ்வரன்தான் - அம்மாவைத் தூக்கினார்.

கிரியைகள் முடித்து அடக்கம் செய்யக்கூடிய நிலையில் அம்மாவின் உடலைக் குண்டுகள் விட்டுவைக்கவில்லை.

நேராக காரைக்கால் சுடலைக்கே கொண்டு வந்தார்.

செல்லடியில் வீழ்ந்த இன்னொரு சடலத்தை எரிக்க வந்து நின்றவர்களிடம் -

அம்மாவையும் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு -

வீட்டுக்குப் போய் மற்றவர்களைக் கூட்டிவந்து காட்டினார்.

அவர்கள் கதறி அழுதார்கள். ஆறுதல் சொல்ல யாருமே இல்லாத, சுடலை வெளி அது.

பிய்ந்துபோன பிரேதத்தைச் சுற்றி தனித்து நின்று அவர்கள் அழுதார்கள்.

அவர்களைத் திரும்பவும் வீட்டில் விட்டு விட்டு, விறகு வாங்கி வண்டிலில் கொண்டு வந்து, தனியனாய் நின்று அடுக்கி, அம்மாவை அதில் வளர்த்தி, சிதைக்குத் தீ மூட்டி வைத்தார் மருமகன்.

வெளிறிய முகத்தோடு தனது உள்ளக்கொதிப்பை நகுலேஸ்வரன் சொன்னார் -

"ஆடு மாடுகள் வெட்டிறதைப் பார்க்கிறதுக்கே நான் பயப்படுறனான் தம்பி—இப்ப எல்லாமே மரத்துப் போச்சது. சொத்து சுகம் சேர்த்து என்ன பிரயோசனம்! அடிவாங்கி அடிவாங்கி —இந்த வாழ்க்கையில் அர்த்தமே இல்லாமப் போச்சு. பிள்ளை குட்டியள் தனிச்சுப் போங்கள் எண்டு தான் யோசிக்கிறன் -

இல்லாட்டிக்கு இயக்கத்தில சேர்ந்திருப்பன்!"

## மனிதம்

பகலில் கூலி கிடைத்தால்த்தான் இரவிலாவது தீனி கிடைக்கும். இன்றைய உழைப்பில் மீதியில்லையென்றால், நாளைய காலையில் பாணுமில்லை! மாற்றியுடுக்கக்கூட உடையற்ற பெருந்துயருக்குள் குழந்தைகள் வாடினார்கள். "கொடிதிலும் கொடிது இளமையில் வறுமை."

சீவரத்தினம் - கௌரி தம்பதிக்கு குழந்தைகள் ஆறு அல்ல, 'ஏழு'தான் ஜிம்மியையும் அவர்கள்

தொடர்ச்சி 14 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிள்ளையாகத்தான் வளர்த்தார்கள்.

ஆனால்—

ஏழாலை மயிலங்காட்டில் -

மாட்டுத் தொழுவத்தைப்போல ஓர் உதிர்ந்த கொட்டில்தான் அவர்களுக்கு வீடு!

மகிழ்ச்சியோடு இல்லாவிட்டாலும் -

விழுந்துவிட்டது!

துயரத்தின் சுமையில் சிந்தனையைச் சிதறவிட்டிருந்த தந்தை அதனைக் கவனிக்கவில்லை.

ஆனால் 'ஜிம்மி' கண்டுவிட்டது!

'நாய்'களென்றால் தின்றிருக்கும். 'ஜிம்மி' கவ்வியது, தூக்கிக் கொண்டு பின்னாலேயே நடந்தது!



சீவியத்தைக் கவலையில்லாமல் ஓட்டவைத்த சீவல் தொழிலுக்கு -

அவரது நெஞ்சுவலி வந்து குறுக்கே விழுந்ததால் -

குடும்பத்தைக் கொண்டிழுக்க, பெற்றோர்கள் இருவருமே கூலி வேலைக்குச் செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தது.

அன்றிலிருந்து -

ஏழ்மையின் அடையாளங்களை அந்தக் குடும்பத்தின் ஒவ்வொரு அங்கமுமே சுமக்கத் துவங்கியது.

பாவம்.

கிடைக்கும் சொற்பத்தைப் பங்கிட்டு உண்ணும் போது, 'ஏழு' பிள்ளைகளுக்குமே அது அமிர்தம்.

தமக்கே உணவில்லாத கஸ்டத்திலும் தனக்கும் உணவளிக்கும் அவர்களின் பாசத்தில், 'ஜிம்மி'யின் கண் கசியும், அன்புணர்வோடு வாலை ஆட்டும்.

நன்றியுள்ள மிருகம்.

இந்த நாள் -

மதியச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு, முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த பிள்ளைகளுக்குப் பக்கத்தில் - விழுந்து முழங்கியது பீரங்கிக் குண்டு!

வயிறு பிரிந்து தூக்கியெறியப்பட்டான் செந்தூரன்.

கை, கால்கள் சிதறி, குடல் வெளியேறி வீழ்ந்தாள் கஸ்தூரி.

வேதனை குடியிருந்த வீட்டின் மடியில் விழுந்தது கொடுமை.

நிலத்தில் விழுந்து புரண்டு குமுறிய அந்த அன்னையின் அலறல் -

நெஞ்சை உலுக்கச் செய்யும் கதறல்.

உடல்கள் உடல்களாகவும் இல்லை, அவற்றைப் பொறுக்கிச் சேர்க்க ஊரில் ஆட்களும் இல்லை.

இரண்டு கைகளாலும் வாரி மகளை அள்ளி எடுத்தார் தந்தை. செந்தூரனைத் தூக்கி எடுத்தார் பக்கத்து வீட்டு உறவினர்.

சுடலை நோக்கி நடக்கத் தொடங்கினர்.

'ஜிம்மி'யும் பின்னாலேயே போனது. தனது சகோதரர்களை இழந்த பெருந்துன்பம் அதற்கு. விழிகளில் அழுகை.

நடந்து கொண்டிருந்தார்கள் -

வழியில் -

தந்தை சுமந்து சென்ற கஸ்தூரியின் சிதைந்த வயிற்றுப் பாகத்திலிருந்து, தசைத் துண்டொன்று தவறிக் கீழே

சுடு காட்டில் -

தந்தை இறக்கி வைத்த கஸ்தூரியின் உடலின் மீது -

அந்தத் தசைத் துண்டைப் பக்குவமாக வைத்துவிட்டு -

இரண்டு கால்களிலும் மண்டியிட்டது 'ஜிம்மி' -

அதன் கண்களில் இருந்து நீர்வடிந்தது.

நாய் அழுமா? 'ஜிம்மி' அழுதது!

இனிமேல் - எவரும் எவரையும், 'நாயிலும் கீழவர்' என்று திட்டாதீர்கள்.

திருத்திக்கொள்ளுங்கள் -

'சந்திரிகாவிலும் கீழவர்' என்று!

## தீர்மானம்

அராலி.

சின்னத்துரை ஐயாவுக்கு 65 வயது.

அம்மா அருமருந்தம்மை.

உமாசக்தி தான் கடைசிப் பிள்ளை - கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பு மாணவி.

அப்பாவில் பிள்ளைக்குப் பாசம் அதிகம்.

காலையில், மாடுகள் இரண்டையும் வயலுக்குள் மேயக் கட்டி விட்டு வந்திருந்தார் ஐயா.

மதிய உச்சி வெயில்.

மாடுகளுக்குத் தொண்டை வறண்டிருக்கும் - பாவம்.

'தண்ணி வைக்க' ஐயா வயலடிக்குப் போனார்.

இரண்டு மணியிருக்கும்

'புக்காரா' இரண்டு குண்டுகளை வயலில் விதைத்தது.

பிடரி சிதறி, கால்கள் சிதைந்து—ஐயா சுருண்டு விழுந்தார். ஐயாவின் மாடுகளும்தான்.

எல்லாம் முடிந்து ஒரு மாதமாகிவிட்டது.

ஒரு மாலை -

வெளியில் போன மகள் திரும்பி வரவில்லை.

துடித்துப் பதைத்து அம்மா விசாரித்தாள்.

மகளின் நண்பி ஒருத்தி சொன்னாள் -

"அப்பா செத்தது அவளுக்குப் பெரிய கவலை. இதுகளுக்கெல்லாம் ஒரு முடிவு கட்ட வேணுமெண்டு—ரெண்டொரு தரம் சொன்னவள்—"

## ஏக்கம்

அராலி மேற்கில், நொச்சியம்பதி அவர்களுடைய ஊர். செல்லம்மா அம்மாவின் மகள் தெய்வானை.

திருமணமாகி மூன்று குழந்தைகள்.

மூத்தவன் கிருஸ்ணகுமார்.

அடுத்தவள் கிருஸ்ணவேணி, பன்னிரண்டு வயது. அராலி வள்ளியம்மை வித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருந்தாள்.

கடைசிப் பிள்ளை ஜமுனாராணிக்கு 9 வயது.

குழந்தைகளின் தந்தை கதிரமலை.

நான்கு ஆண்டுகளுக்கு முன்னர், புற்றுநோய் அப்பாவைப் பிரித்தது!

நான்கு மாதங்களுக்கு முன்னர் - "சமாதானத்துக்கான போர்" சந்திரிகாவால் ஆரம்பிக்கப்பட்ட போது, அண்ணன் இயக்கத்திற்குப் போய்விட்டான்.

'முன்னோக்கிப் பாய்ந்தவர்கள்' மூச்சுவிடாமல் வீசிய பீரங்கிக் குண்டுகளுள் ஒன்று, நடுவீட்டுக்குள் சிதறியபோது -

அம்மம்மாவுக்கு வயிறு பிரிந்தது!

அம்மாவுக்கு நெஞ்சு பிளந்தது!

அக்காவுக்குத் தலை சிதறியது!

இப்போது ஜமுனாராணி தனித்துப்போய்விட்டாள் -

பரிதாபம்.

அவளுக்கு இனி யாருமே இல்லை.

அதோ அவளுடைய விழிகளைப் பாருங்கள்— ஏக்கம்—சோகம்—!

## பயன்

குமாரசுவாமி கேமவதனுக்கு 15 வயது. அராலி மகாவித்தியாலயத்தில் 10 ஆம் ஆண்டு மாணவன்.

பாக்கியலட்சுமி அம்மா பெற்ற மூன்று குழந்தைகளில் - கேமலதாவுக்கும், கேசவனுக்கும் அவன் அண்ணன்.

பக்கத்து நாராயணசிங்கம் வீட்டு வாசலில்.

அவரது முழுக்குடும்பத்தையும் படுகாயத்தில் வீழ்த்திய 'புக்காராக்' குண்டு.

தந்தை மட்டுமே தனியாகத் தவித்தார்.

பொழுது மங்கி இருண்டுகொண்டே வந்தது.

முறிந்து விழுந்த 'மரந்தடிகளைப்' பொறுக்கி எடுத்து, வீட்டுக்குப் பின்னிருந்த காணிக்குள் அடுக்கி, மகளைத் தூக்கிவந்து கிடத்தி, தீப்பெட்டி தட்டிப் பற்ற வைத்து, நெருப்பு மெல்ல மெல்ல எரியத் துவங்க -

பெய்யத் தொடங்கியது. 'செல் மழை.'

ஓடிப் பதுங்கி ஒளிந்து, 'மழை' ஓய்ந்த பின்னர் வெளியே வந்து பார்க்க—

அரை குறையாய் எரிந்து சடலம், அணைந்து போய்க் கிடந்தது, மிகக் கொடிய வேதனை.

அழுது அழுது, கும்மிருட்டில், தனியொருவனாய்த் தந்தை மறுபடியும் எரிக்க முயல -

மீண்டும் பொழிந்தது 'செல் மழை.'

திரும்பவும் ஓடி ஒளிந்து, இரவு முழுவதும் பதுங்கியே கிடந்து -

எரியாமல் கிடந்த மீதி உடலை, தந்தை மறுநாள்தான் எரித்து முடித்தார்!

ஒரு மாதத்தின் பின் இப்போது -

அழுது சிவந்த கண்களோடு, அம்மா பாக்கியலட்சுமி விம்முகிறாள் -

"என்ர மகன் அநியாயமாகச் செத்துப் போனான் எண்டிறதை நினைக்கத்தான், பெரிய கவலையாய்க் கிடக்கு. அவன் நாட்டுக்காகச் செத்திருந்தால் மனம் ஆறியிருப்பன்—ஐயோ! நான் இனி என்ன செய்ய—"

## இனி

அவர் ஒரு கடற்தொழிலாளி. செல்லையா ராஜதுரை என்பது பெயர், வயது 36. துணைவி மகேஸ்வரிக்கு 35 வயது.

அவர்கள் மூன்று குழந்தைகளுக்குப் பெற்றோர்கள்சந்திரகாந்துக்கு 13 வயது, கடைக்குட்டி சுதாவுக்கு 9 வயது. இருவருக்கும் நடுவில் சமதி 11 வயது.

நவாலி தேவாலயத்திற்குப் பக்கத்தில், முருகமூர்த்தி கோவில் வீதியில் வீடு.

தேவாலயத்தில் அவர், இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.



கேமவதனைச் சாவிற்குள் அமிழ்த்தியது

அகோர செல்லடி, அயலிலோ ஆட்களே இல்லை. ஏற்கனவே வீட்டில் ஏனையோரும் இடம்பெயர்ந்துவிட்டார்கள். உரிய முறையில் கிரியைகள் செய்து, சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்று உடலைத் தகனம் செய்ய முடியாத அவலம்.

சமையலுக்கு விறகு பற்றாக்குறை ஏற்படவே, வீட்டுக்குப் போய் விறகு எடுத்துக் கொண்டு வீதிக்கு வர-

அவ்விடத்தில் - வீட்டு வாசலில் -

இடம்பெயர்ந்து வரும் மக்கள் கூட்டத்திற்குள், தொல்புரம் மாமாவும் வருவார் என எதிர்பார்த்து, மனைவியும் பிள்ளைகளும் காத்திருக்க—

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'புக்காரா - ஒரே தாக்குதற் பதிதலில் வீசிய எட்டுக் குண்டுகளும் நிலத்தில் முழங்கின.

போர் விமானம் பேயென நெருங்குவதைக் கண்டு -

கத்தியபடி வீட்டுக்குள் ஓடிய சமதியைத் தவிர -

அந்தக் குடும்பத்தில் எஞ்சியவர்கள் எவருமேயில்லை!

பாவம் -

சமதி தனித்துப்போனாள்! இனி அவளது எதிர்காலம்...

## கவலை......?

மனிதன், வாழ்க்கைக்குத் தயாராகும் பருவத்து வயது அவர்களுக்கு, கௌசலாவுக்கு 12. சமதிலாவுக்கு 10.

விக்ரோறியாக் கல்லூரியில் மாணவிகள்.

தொல்புரம் காண்டாமையில் வீடு.

அப்பா சின்னர் பூதப்பிள்ளை, அம்மா புஸ்பராணி.

'முன்னோக்கிப் பாய்ந்த' மூன்றாம் நாள் - காலை -

இடம்பெயர்ந்து ஓடிவிட்டு வீடுபார்க்க



வந்திருந்தார்கள்.

அது ஒரு கொடிய நிகழ்வு.

சவாமி கும்பிட அப்பா பூக்கொய்து கொண்டிருந்தார், அம்மா தேநீர் தயாரித்துக் கொண்டிருந்தார், பிள்ளைகள் வீடு கூட்டிக் கொண்டிருந்தார்கள்.

'புக்காரா'வின் இரைச்சலில் தெரிந்த உக்கிரம், அதன் நோக்கத்தைத் தெளிவுபடுத்தியது.

அடுத்து வரும் எந்த நிமிடத்திலும் அது நிகழலாம்.

துரதிஸ்டம் - பதுங்குகுழி பக்கத்து வீட்டில் தான் இருந்தது.

'பிள்ளையள்! மாமா வீட்டை ஓடுங்கோ' அம்மாவின் அவசரச் செய்தி.

'நீங்களும் ஓடி வாங்கோம்மா...' பிள்ளைகளின் பாச அழைப்பு.

'நீங்கள் ஓடுங்கோ, நாங்கள் பின்னால வாறம்!' - அப்பா கட்டளை இட்டார்.

ஆனால், 'புக்காராக் குண்டு' எதையும் அசட்டை செய்யவில்லை.

முறிந்து விழுந்த தென்னை மர வட்டுக்குள் இருந்து எடுத்தது அப்பாதான் என்பதை இனம் காண முடிந்தது!

சிதறிக் கிடந்த தசைத்துண்டங்களைச் சேர்த்தெடுத்தபோது - அம்மாதான் என்பதை அடையாளம் காண முடியவில்லை!

நல்ல காலம் -

குழந்தைகள் படுகாயங்களோடு உயிர் தப்பிவிட்டார்கள்.

ஆனால்-

**இனி அவர்களுக்கு ஆதாரம் யார்? வளர்ப்பதும் வழிப்படுத்துவதும் யார்? பெற்றோரின் பாசம் எங்கிருந்து இனிக் கிடைக்கும்...!**

**ஆறு மாதங்களுக்கு முன் -**

**செய்தியாளரின் கேள்விக்கு சந்திரிகா பதிலளித்தார்.**

**'நான் என்னைப் பற்றி யோசிக்கவில்லை. ஆனால், எனது இரண்டு பிள்ளைகளும் அப்பாவும் இல்லாமல், அம்மாவும் இல்லாமல் என்ன செய்யப்போகின்றார்கள் என்பதை நினைக்கும் போதுதான் பெரும் கவலையாக உள்ளது!'**

## பிரசவம்

ஊர் தொல்புரம். சிவபாலன் ஒரு மேசன் தொழிலாளி. மனைவி மகேஸ்வரிக்கு 28 வயது. அந்த இளங்குடும்பத்தில் இரண்டு பிள்ளைகள் -

கஜகோபன் - மிகச் சிறுவன், கஜானன் கைக்குழந்தை

'முன்னேறிப் பாய்ந்தவர்களால்'

துரத்தியடிக்கப்பட்டு, அவர்கள் நவாலித் தேவாலயத்தில் தஞ்சமடைந்திருந்தபோது தான் -

அங்கு அந்த அநர்த்தம் நிகழ்ந்தது.

வானத்து அரக்கன் கொலை வெறியோடு குத்திப் பதிவதை, அந்தத் தாய் கண்டாள்.

குழந்தையைப் பாதுகாப்பாக வயிறோடு அணைத்தபடி, வெளியிலோடி வந்து விழுந்து படுக்க -

தாயின் இடுப்பு வழியாக வயிறையும் முதுகு வழியாக நெஞ்சையும் கிழித்தன இரும்புத் துண்டங்கள்.

'என்ர பிள்ளை... என்ர பிள்ளை... என்ர பிள்ளையைக் காப்பாத்துங்கோ...என்ர பிள்...ளையைக்...காப்...'

ஈனமாய் குரல் அடங்கி அன்னை உயிரிழந்து சாக -

மயிரிழையில் உயிர் தப்பி -

தன் கருவில் உதித்த உயிருக்கு, கவசமாகி உயிர்நீத்த அன்னையின் குருதியில் தோய்ந்திருந்தது குழந்தை.

இது இரண்டாவது பிரசவமோ!!

இப்போது -

அவன் எதையுமே உணர முடியாத பச்சைப் பாலகன்.

ஆனால் நாளை -

அம்மாவின் நினைவுகள் அவனது ஆன்மாவைக் குடையும்!

## பற்று

சிதம்பரம் பாட்டிக்கு 72 வயது. நவாலியூரின் மூத்த குடிமக்களுள் பாட்டியும் ஒருவர். பாட்டியின் 7 புதல்வர்களுள் ஒருவர் சிவராசா.

சிவராசாவின் மகன் தயாபரன்.

பாட்டிக்குப் பேரப்பிள்ளை.

பாட்டி அவனில் கொண்டிருந்த பாசம்... அப்படி ஒரு பாசம்! அவன் பாட்டியில் கொண்டிருந்த அன்பும் அப்படித்தான்.

அது நெருக்கமான உறவு, பாட்டி - பேரன் பிணைப்பு.

எல்லாரும் இடம்பெயர்ந்து நடந்து கொண்டிருக்கும் போது -

தள்ளாடியபடி நடந்த பாட்டி, நவாலித் தேவாலயத்தில் தண்ணீர் வாங்கிக் குடித்தாள். அந்த நேரத்தில் தான் -

பேரிரைச்சலோடு 'புக்காரா' அந்த அக்கிரமத்தை நிகழ்த்தியது!

தலை சிதறி, கை பிய்ந்து, பிணமாகி வீழ்ந்தாள் பாட்டி.

அதன் பிறகு,

அடிக்கடி பாட்டியைப் பற்றியே பேசிக் கொண்டிருந்த பேரன், சில நாட்களில் காணாமல் போய்விட்டான்.

தயாபரன் இப்போது, உற்சாகமாகப் பயிற்சி எடுத்துக் கொண்டிருக்கிறானாம்!

## காயம்

அவருடைய பெயர் வேலுப்பிள்ளை வன்னியசிங்கம், 57 வயது. துணைவி சிவபாக்கியலட்சுமிதேவி, 46 வயது. ஒரே பையன் பிரணவன் - 9 வயதுப் பையன்.

அவர்களது வேர், மாவிட்டபுரம் கொல்லன் கலட்டியில் இருந்தது.

அவர் ஒரு கிராமசேவகர்.

ஐந்தாண்டுகளுக்கு முன்னர் - பகைவன் அங்கு படையெடுத்தபோது இடம்பெயர்ந்து -

சண்டிலிப்பாயில் 'சண்முகவாசா' என்ற இல்லத்தில் குடியேறியிருந்தார்கள்.

இப்போது - பகைவன் இங்கும் படையெடுக்க, அவர்கள் புகலிடம் தேடிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

வழியில் - நடு வீதியில் -

சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் அலுவலக வாசலில் சற்றுத் தரித்து நின்றபோது -

பீரங்கிக் குண்டு அவர்களின் காலடியில் வெடித்தது!

அவர் அந்த இடத்திலேயே நெஞ்சு வெடித்துச் சருண்டார்.

வயிறும் கையும் சிதைந்து, ஐந்து நாட்களாக மருத்துவமனையில் போராடிய பிறகு - அம்மாவும் செத்துப் போனாள்.

அதிஸ்டவசமாக -

எட்டத்தில் நின்றதால் சிறுவன் தப்பித்துக் கொண்டான்.

அவனுக்கு உடலில் காயமில்லை, ஆனால், உள்ளத்தில் படுகாயமேற்பட்டுவிட்டது.

அது ஆறப்போவதில்லை

## உயிர்

நித்தியானந்தலக்சுமி என்பது, அவரது துணைவியின் பெயர். சங்கானையில் - 'நித்தியசித்திரா ஸ்ரூடியோ' அவருடையது.

மனைவியில் கொண்ட அன்பின் அடையாளமாக இடப்பட்ட பெயர்.

உயர்ந்த தோற்றம், வெள்ளையான நிறம், 'செந்தமிழ்ப்பான' உருவம் - அவருடைய பெயர் நாராயணசிங்கம்

இரண்டு செல்வங்கள். மூத்தவன் பரணீதரன், அடுத்தவன் தரணீகரன்.

அராலி தெற்கு அவர்களுடைய ஊர்.

உக்கிரமான செல்லடி -

வீட்டுக்கு உள்ளே நின்றால்தான் சிக்கல் என்று வீதிக்கு ஓடிவர-

விழுந்து வெடித்தது பீரங்கிக் குண்டு!

பரணீதரனுக்கு இடதுகால் விரல்கள் பிய்ந்தன!

அப்பாவுக்கு தோள் எலும்பு உடைந்து, கை தோலில் தொங்கியது, இடுப்புக் கிழிந்து இழுபட்டது!

அம்மாவுக்கு தலையில் வெடிப்பு!

தம்பிக்கு முதுகு கிழிந்தது!

பக்கத்து வீட்டுக் கேமவதனோ பிணமாகிக் கிடந்தான்.

படையெடுப்புக்குத் தப்ப சுழிபுரத்திலிருந்து வந்து நின்ற சித்தப்பாவின் மகன் ராஜ்மோகனைக் காணவேயில்லை.

எல்லாருக்கும் காயம். சுற்றிவர வீடுகளில் ஆட்களுமில்லை. யார் யாரைத் தூக்குவது? எப்படிக் கொண்டுபோவது? வீதியில் வாகனங்களே இல்லை. கைவசமிருந்தது ஒரேயொரு வழிதான்.

காயப்பட்ட காலை இழுத்து இழுத்து பரணீதரன் வீட்டுக்குள் ஓடினான்.

மண்ணெய் மோட்டார் சைக்கிளோடு மாரடித்து, இயக்கினான். வெளியில் கொண்டு வந்தான். துடித்துக் கொண்டு கிடந்த அப்பாவையும் அம்மாவையும் தம்பியையும், ஒவ்வொருத்தராய்த் தூக்கி ஏற்றினான்.

மோட்டார் சைக்கிள் புறப்பட்டது. வழியெங்கும் இரத்தம் வழிந்து கொண்டேயிருந்தது.

வீதி...வீதியா அது! மக்கள் வெள்ளம்.

மிதிவண்டியைக் கூடச் செலுத்த முடியாத அளவுக்கு வீதி 'நெருக்குப்பாடாய்' இருந்தது.

அந்த இடர்பாட்டுக்குள்ளும், பிய்ந்துபோன காலின் வேதனையோடும், தனது இரத்த உறவில் ஒருவரைக்கூடச் சாக விட்டுவிடக் கூடாது என்ற உத்வேகத்தோடு, சிரமப்பட்டு சிரமப்பட்டு, அவன் யாழ்ப்பாண மருத்துவ மனையை அடைய-

மற்றெல்லாரையும் சிகிச்சை அறைக்குக் கொண்டு போனார்கள் -

அப்பாவை பிரேத அறைக்குக் கொண்டு போனார்கள்!

## நாளை

நவாலியில் - கிருஸ்ணரூபனும், ஜெயந்தியும் மூன்று ஆண்டாகக் காதலித்து, மூன்றாண்டுகளுக்கு முன்னர் திருமணம் செய்துகொண்டனர்.

முதல் குழந்தை பிரவீனா. அந்தக் கொடிய நாளில் ஜெயந்தி நிறைமாதக் கர்ப்பிணி.

இடம்பெயர்ந்து வந்த மக்களுக்குத் தேவாலயத்தில் உதவி செய்து கொண்டிருந்த போதுதான், அந்த அக்கிரமம் நிகழ்ந்தது.

அடையாளம் காணக்கூடியவாறு எதுவுமே இருக்கவில்லை - போட்டிருந்த உடைகளைத் தவிர.

இப்போது -

தாய் ஒரு ஆண்மகனைப் பெற்றெடுத்திருக்கின்றாள்.

கண்களை வெட்டி வெட்டி அவன் அப்பாவைத் தேடுகின்றான்.

சோகத்தை அவனுக்குப் பரிசாக அளித்தவர்களுக்கு, நாளை - அவன் அதைத் திருப்பிக் கொடுப்பான்!

தொடர்ச்சி 16 ஆம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பொறுப்பு

அவருடைய பெயர் ஜெயசிங்கம், ஒரு திட்டமிடல் அதிகாரி. ஊர் நவாலி, சென் பீற்றர்ஸ் தேவாலயத்தின் அயலில் தான் வீடு.

அன்று காலையே அவர்கள் இடம்பெயர்ந்து, யாழ்நகருக்கு வந்துவிட்டிருந்தார்கள்.

அன்றிரவு - அந்த ஆலயத்தின் மடியில், மாலை நிகழ்ந்த அட்டூழியத்தில் -

தனது சகோதரி கமலாதேவியும், சகோதரரின் மனைவி திருமதி கமலநாதனும் கொல்லப்பட்டுவிட்டார்கள் என்ற செய்தி -

ஜெயசிங்கம் ஐயாவின் காதுகளைக் குடைந்து நுழைந்தது!

மறுநாள் காலை - உயிரிழந்த உறவுகளின் நினைவுகளால், உள்ளம் துடிக்க, அந்திம காரியங்களின் அலுவல்கள் பார்க்கவென, அவர் வீட்டுக்குச் சென்றார்.

காலையில் போன தந்தை, மாலை மங்கியும் திரும்பி வரவில்லை, மனைவியும் பிள்ளைகளும் தவித்தார்கள்.

அடுத்தநாள் - மூன்றாம் நாள் - விடிந்திற்று.

மகன் அரவிந்தன் தந்தையைத் தேடிப் புறப்பட்டான்.

பிளந்த கூரை, நொருங்கிய ஓடுகள், உடைந்த சுவர்கள், முறிந்த மரங்கள், எரிந்த புத்தகங்கள், சிதறிய எள்ளு மூடைகள்-பீரங்கிக் குண்டு துவைத்தெடுத்திருந்தது.

'அப்பா!—அப்பா!—'

வீட்டுக்குள் புகுந்து தேடி ஏமாந்து, பின்பக்கம் வந்தான்.

அப்பாவின் மிதிவண்டியல்லவா அது! - இரும்புக் குவியலாய்!

அதற்கு அப்பால் - அடிவளவிற்குள் - அது என்ன! நெஞ்சு 'திக்'கென்றது!

காகங்கள் தத்தித் தத்தி கத்திக் கத்தி எதையோ கொத்திக் கொண்டிருந்தன!

'அப்படியாக இருக்கவே கூடாது'

தயங்கித் தயங்கி அருகில் போனான் -

அங்கே—! கைகள் இல்லை! கால்கள் சிதைந்துகிடந்தன! அது அப்பாவேதான்!

கூடவந்த பக்கத்து வீட்டுக் குடும்ப நண்பர், விக்கி விக்கி அழத் தொடங்கினார்.

'அப்பாவுக்குச் செய்ய வேண்டியதுகளைச் செய்துவிட்டு பிறகு போய் அம்மாவுக்குச் சொல்லுவம்' - மகன் சிந்தித்தான்.

பொறிந்து கொட்டுண்டு கிடந்த வீட்டுக் கூரையின் மரங்களே விறகாகின.

அப்பாவைப் பொறுக்கி எடுத்துக் குவித்த மைந்தன்-தந்தையின் சிதைக்குத் தீ மூட்டினான்!

## தவிப்பு

நவாலியில்- அந்தத் தேவாலயத்திற்குப் பக்கத்தில் தான் வீடு. ஜெயசீலன்-லூர்துமேரி தம்பதிக்கு நான்கு குழந்தைகள்.

கலிஸ்ரன் மூன்றாவது பிள்ளை. 17 வயது.

கல்விப் பொதுத் தராதர உயர் வகுப்பு மாணவன்.

தேவாலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்த மக்களுக்கு உதவிக்கொண்டிருந்த அந்தக் கிராமத்தவருடன்-

ஒத்தாசையாக அவனும் பணிசெய்திருந்தபோதுதான் -

'புக்காரா' அந்த அக்கிரமத்தைச் செய்தது.

சிதறிப் பிய்ந்து சீரழியாமல், உடல் உடலாகவே கிடந்து வீட்டுக்குத் தூக்கி வந்தார்கள்.

உருத் தந்தவள் குமுறினாள். உடன் பிறந்தவர்கள் கதறினார்கள்.

துயரம் தீர அழுது, கண்ணீரோடு கவலையையும் கரைக்க முடியாமல், வெடித்து விரட்டின பீரங்கிக் குண்டுகள். அக்கம்பக்கமெல்லாம் அதிர்ந்தன.

பெற்ற மகன் பிரேதமாய்க் கிடக்கையில், அவனை அநாதரவாய்க் கிடத்தி விட்டு, ஊர் விட்டே ஓடவேண்டிய நிர்ப்பந்தம் வந்து கொடுமைப்படுத்தியது.

தூர ஓடி-உறவினர் வீடொன்றில் தஞ்சம் புகுந்தார்கள்.

தூக்கமற்ற இரவு, துயர் தோய்ந்த இரவு, தனித்து விட்டு வந்த பிள்ளையின் உடலின் பனித்த நினைவோடு, நெஞ்சு துடித்த இரவு.

மறுநாள் காலை, தந்தை தனயனின் உடலைத் தேடிப் புறப்பட்டார் -

அங்கிருந்து அவனைத் தூக்கிவர, முடியாமல் போகுமானால் -

அங்கேயே - வீட்டுக்குப் பின் காணிக்குள் விறகுக் குவியலில் அவனைக் கிடத்திக் கொள்ளி வைக்க.

பரிதாபம்-பீரங்கிக்குண்டுகள் அவர் முதலாவதைச் செய்ய இடம் தரவில்லை, துயரம்-

தாய் இங்கே தவித்திருக்க, தனயனை அங்கே தணலாக்கினார் தந்தை.

## காப்பு

நவாலி தெற்கு என்பது முகவரி. அப்பா அன்ரனிகுரூஸ் ஒரு தச்சத் தொழிலாளி, அம்மா மேரிரெஜினா.

தம்பதியின் இரண்டு குழந்தைகளுள் மூத்தவள் குமுதினி,

வயது 18, மானிப்பாய் மகளிர் கல்லூரியில் வர்த்தகப் பிரிவு மாணவி.

கல்வியியல் எதிர்காலத்தில், பெற்றோர்கள் கொண்டிருக்கும் அதீத நம்பிக்கையை காப்பாற்றக்கூடிய தகமை உடையவள் என, ஊருக்குள் பேசிக்கொள்கின்றார்கள்.

நவாலித் தேவாலயத்தில் இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவிகள் செய்து கொண்டிருந்தபோது - இயந்திரப் பறவையின் உக்கிர இரைச்சலை அவள் கேட்டாள்!

குண்டுகளைக் கக்கித்தள்ளவென 'புக்காரா' குத்திப் பதிவதைக் கண்டவர்கள் சிதறி ஓடினார்கள். குமுதினி-பக்கத்திலிருந்த தன் சித்தி வீட்டுக்கு ஓடினாள்!

ஒரே தாக்குதற் பதிவில் வீசிய எட்டுக்குண்டுகள் தேவாலயத்தின் சுற்றயலைத் துவம்சம் செய்தபோது! சித்தியின் வீடும் நொருங்கி விழுந்தது!

குமுதினி வீட்டுக்குள் நுழைந்தது அவர்களுக்குத் தெரியாது, அவர்கள், வீட்டுக்குள்ளிருந்த தங்கள் 5 மாதக் குழந்தைக்காகக் கதறினார்கள்! தேடினார்கள்.


இடிபாடுகளை அகற்றி அகற்றி ஒன்றரை மணி நேரமாகத் தேடிய பின் அவர்கள் கண்டார்கள்!- தலை பிளந்த நிலையில்-

குப்புற அணைத்து உயிரிழந்து கிடந்த குமுதினியின் கீழ், பத்திரமாய் அணைந்து நினைவிழந்து கிடந்தது குழந்தை.

விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த வள்ளுவன், எல்லாளன்- குகராஜ், பணியாளர் ராஜன் ஆகியோரின் தகவல் துணையுடன் எழுத்துரு தி. இனியவன்: படங்கள் - விடுதலைப் புலிகளின் புகைப்படப் பிரிவு.

# டோரா தகர்ப்புகளும் தாக்கங்களும்.......

கப்பல் சேவை மட்டுமல்ல, மன்னார்- கற்பிட்டி கப்பல் சேவையும் பாதிக்கப்பட்டுள்ளது. கடத்தப்பட்ட ஐரிஷ் மோனா கப்பல் மாலுமிகளைப் பாதுகாப்பாக விடுவிக்கும் வரை, மன்னார் கற்பிட்டி கப்பல் சேவைகளை நடாத்தமுடியாது என 'நரோமா' கப்பல் மாலுமிகள் தெரிவித்துள்ளனர். ஆனால் அரசு கப்பலை விடுவிக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இதுவரை எடுக்கவில்லை. இதனால் இராணுவ கட்டுப்பாட்டில் உள்ள தீவுப்



29.08.95 இல் முல்லைக்கடலில் அழிக்கப்பட்ட டோறாவின் முன்னைய தோற்றம்

பகுதிகளுக்கான போக்குவரத்து மட்டுமல்ல, விநியோகமும் கேள்விக்குறியாகியுள்ளது. ஐரிஷ் மோனா, நரோமா போன்ற பயணிகள் கப்பல்கள் மூலமே தீவுப்பகுதிகளுக்குத் தேவையான விநியோகமும் மேற்கொள்ளப்படுவது வழக்கம். இவ்விநியோகம் தடுக்கப்பட்ட நிலையில், இப்பகுதிகளைத் தொடர்ந்தும் தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க முடியுமா? என்ற அச்சமும் அரசமட்டத்தில் எழுந்துள்ளது. அதுமட்டுமல்ல, ஐரிஷ் மோனா கப்பலின் வாடகைக்காலம் முடிவடைந்தமையும் அரசுக்குப் பெரும் தலையிடியைக் கொடுத்துள்ளது.

# யாழ் குடாநாட்டின் மீதான இராணுவ நடவடிக்கையில் பின்னடைவு

கடற்படையினரின் செயற்பாட்டில் ஏற்பட்டுள்ள முடக்கம், கடல்வழி விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பு என்பனவற்றால் குடாநாட்டில் முப்படைகளும் இணைந்து மேற்கொண்டு வந்த இராணுவ முன்னெடுப்புக்களில் பெரும் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன. இதனை, சிறீலங்கா இராணுவ ஆய்வாளர்களே ஒப்புக் கொண்டுள்ளனர்.

முன்நோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை, புலிப்பாய்ச்சலால் தோல்வி கண்டாலும், யாழ்குடா நாட்டைக் கைப்பற்றி இன அழிப்புச் செய்யும் திட்டத்தைச் சிறீலங்கா கை விடவில்லை. எதிர்வரும் மாரிகாலத்திற்கு முன்பாக, 35,000க்கும் மேற்பட்ட படையினரை யாழ்குடாநாட்டைச் சூழவுள்ள சகல முகாம்களிலிருந்தும் ஒரே நேரத்தில் நகர்த்தி, யாழ்குடாநாட்டைக் கைப்பற்றுவதே அரசின் தற்போதைய திட்டமாகும். கடந்த மாதம் 15 ஆம் நாளுக்கிடையில் அல்லது மாத முடிவிற்குள் இத்திட்டத்தைச் செயற்படுத்துவதே நோக்கமாகவிருந்தது. இதற்காகப் புலிப்பாய்ச்சலில் இழந்த புக்காரா விமானம், எடித்தாரா கப்பல் ஆகியவற்றுக்குப் பதிலாக, பல நவீன ஆயுத- தளபாடங்களை ரஷ்யா, இஸ்ரேல், சீனா ஆகிய நாடுகளிடமிருந்து சிறீலங்கா அரசு கொள்வனவும் செய்தது. கிழக்கிலிருந்த பெருந் தொகையான படையினரும் யாழ் குடாநாட்டு முகாம்களுக்கு நகர்த்தப்பட்டனர்.

பலாலி, மாதகல், மண்டைதீவு ஆகிய இராணுவ முகாம்களில் இருந்து சரமாரியான எறிகணைகள் வீசப்பட்டு 'கை குலுக்கல்' போன்ற குறியீட்டுப்பெயருடன் மட்டுப் படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைளும் இடையிடையே மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்தும் இவ்வாறான மட்டுப்படுத்தப்பட்ட இராணுவநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம். அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகள், பாரியதொரு படையெடுப்புக்கான ஒத்திகையே என அவதானிகள் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

முப்படைகளும் இன்றோ, நாளையோ மூர்க்கத்தனமான தாக்குதலில் ஈடுபடலாம் என்ற எதிர்பார்ப்புடன் குடாநாட்டு மக்கள் ஏங்கியிருந்த வேளையிலேயே ஐரிஷ் மோனா கப்பல் கடத்தப்பட்டு, டோறா படகுகளும் அழிக்கப்பட்டன. இதனால், மாரிகாலத்திற்கு முன்னர் யாழ்குடாநாட்டில் மேற்கொள்ளவிருந்த பாரிய இராணுவ நடவடிக்கை குறித்து பலமான கேள்விகள் எழுந்துள்ளன.

சமாதான முயற்சி, அரசியல் தீர்வு முயற்சிகளைக் கைவிட்டு இராணுவத்தீர்வில் மட்டும் நாட்டம் கொண்டுள்ள அரசுக்கு, கடற்படையினரின் முடக்கமும், இராணுவ விநியோகத்தில் ஏற்பட்ட பாதிப்பும் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்துள்ளன. பயங்கரவாதத்தை முற்றாக ஒழித்த பின்பே அரசியல் தீர்வு காணப்படவேண்டுமென்ற சிங்களப் பேரினவாதிகளின் உரத்த கூச்சலுக்கு முக்கியத்துவம் கொடுத்த அரசு, இன்று இரண்டும் கெட்டான் நிலையில் உள்ளது. டோறா படகுகள் தாக்கப்பட்டதை அடுத்து, கூட்டப்பட்ட பாதுகாப்பு அமைச்சின் அவசரக் கூட்டத்திலும் யாழ் குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கைபற்றி இருவேறுபட்டகருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இதனால் அரசு, இராணுவ மட்டத்தில் உள்ள கருத்து வேறுபாடு மேலும் அதிகரித்துள்ளது.

சுருங்கக் கூறின், **'கடந்த ஆடிமாதத்தில் மேற்கொள்ளப்பட்ட முன்நோக்கிப்பாய்தல் இராணுவ நடவடிக்கை, புலிப்பாய்ச்சலால் பின்நோக்கிப் பாய குடாநாடு சந்திக்கவிருந்த பேரழிவு தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது. கடந்த ஆவணிமாதத்தில் ஏற்பட்ட டோறா படகுகளின் அழிப்பினால் குடாநாடு மீது தொடுக்கப்படவிருந்த பாரிய படையெடுப்பே பின்னடைந்து, பெரும் இன அழிப்பும் தற்காலிகமாகத் தடுக்கப்பட்டுள்ளதோடு, ஏற்கனவே திட்டமிட்ட படை நகர்த்தலின் இராணுவ தந்திரோபாயத்தை மீளாய்வு செய்யவேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளது'** எனலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிறுகதை

# நிஜம் வடிவில் நிழல்

கே : கபில்

அன்று கடமைகளை முடித்துக் கொண்டு முகாம் திரும்பிய ராசன், அப்பாடா என்று படுக்கையில் விழுந்தான். 'அண்ண!' என்று அவசரமாக விழுந்த குரல், மூட முயன்ற அவன் விழிகளைத் திறந்தது.
'அண்ண! உங்களுக்கொரு அவசரமான கடிதம் இருக்காம். உடன வந்து எடுக்கட்டாம். காந்தன் முகாமில இருந்து அரி அண்ண அறிவிக்கிறார்-என்ன சொல்ல'
கூறி முடித்துப் பதிலுக்காகக் காத்திருந்தான் கண்ணன். தனது மணிக்கூட்டைப் பார்த்தான் ராசன். நேரம் இரவு பதினொன்றைத் தாண்டிவிட்டது. கடிதம் எடுக்க நாற்பது கிலோமீற்றர் போக வேண்டும்.
'கண்ணன்! காலமைக்கு எடுக்கிறன் எண்டு சொல்லு'
ராசன் கூறிமுடிக்க முன்னரே அந்தப் பதிலுக்காகவே காத்திருந்தவன் போன்று 'சரி அண்ண' என்றபடி நகர்ந்தான் கண்ணன். யாரெனக்கு அவசரமாகக் கடிதம் போடுறது என்று எண்ணியபடியே ராசன் உறங்கப் போனான்.

மறுநாள் வேலைகளின் வேகத்தில் காலைப் பொழுது கழிந்தது. கடிதத்தைப் பற்றி அவன் நினைத்துப் பார்க்கவே இல்லை. அன்று மட்டுமல்ல, அப்படிப்பல சறுசறுப்பான காலைப் பொழுதுகள் கடந்து போய்விட்டன. உறங்கப் போகும் பொழுது கேட்டதாலோ என்னமோ ராசனுக்குக் கடிதம் பற்றிய எண்ணம் அறவே மறந்து போய்விட்டது.
அன்று காந்தன் முகாமிற்கு ஏதோ வேலையாகப் போயிருந்தான் ராசன்.
'ராசன்! அரி அண்ண வரட்டாம்' அவசரமாகக் கூறிவிட்டுச் சென்றான் நண்பன். என்னமோ ஏதோ என்று எண்ணியபடியே அரி அண்ணையின் முன்போய் நின்று தலையைச் சொறிந்தான். கடிதமொன்றை எடுத்து அவன் முகத்திற்கெதிரே நீட்டி, 'இத முதல் வாசி' என்று சற்றுக் கோபத்துடன் கூறிய அரி அண்ணையின் கைகளில் இருந்து கடிதத்தைப் பெற்று அவசரமாக வாசித்தான்.

'நீ என்ன பகிடியே விடுறாய் தம்பி. ஊரான் எல்லாற்ற பெடியும் இயக்கத்திற்குப் போகுது. நான் போய் என்ர பெடிய விடெண்டு கேக்கட்டே! அண்டைக்கும் போய் ஆளப் பாத்து ரெண்டு குடுவ குடுத்துப் போட்டுத்தான் வந்தனான். போனனி! பயிற்சி ஏலாது எண்டு திரும்பிக் கிரும்பி வந்திராத! பேந்து அவன் தம்பியின்ர மானத்த வாங்கிப் போடாத! ஒழுங்கா இரு எண்டு போட்டுத்தான் வந்தனான்" என்றார்.

மதிப்பிற்குரிய ராசன் அவர்கட்கு!
நான் மிக நீண்டகாலமாக உங்கள் ஊரில் உதவி அரச அதிபராக வேலை செய்தேன். தற்போது கனடாவில் வேலை செய்து வருகின்றேன். விடுமுறையில் இங்கு வந்துள்ளேன். இன்னும் ஒரு வாரத்தில் திரும்ப இருக்கின்றேன். என்னை நீங்கள் மறந்திருக்கமாட்டீர்கள் என நினைக்கிறேன். நான் 70 ஆம் ஆண்டிலிருந்து உங்கள் ஊரில் வேலை செய்தேன். போவதற்கிடையில் தங்களை ஒருமுறை சந்திக்கச் சந்தர்ப்பம் தரும்படி தயவாகக் கேட்டு கொள்கின்றேன்.
இப்படிக்கு,
உண்மையுள்ள
க.யோகராசா.
நாளைப் பார்த்தான் ராசன். ஆள் இப்போது போயிருப்பார்.
உனக்கு இவ்வளவுதான் அக்கறை. ஒரு பெரிய மனுசன் எவ்வளவு காலத்து நட்பை மறக்காமல் இவ்வளவு நாளைக்குப் பிறகு உன்னைச் சந்திக்கக் கேட்டது, அதை நான் இரவிரவாக உனக்கு அறிவிக்கிறன். உனக்கு அதைப் பற்றி அக்கறையே இல்லை.
அரி அண்ணை என்னைக் கதைக்க விடாமல் பேசிக் கொண்டேயிருந்தார்.- தனது மறதிக்காக ராசன் மனம் நொந்தான்.
'பெரிய மனிதர் எவ்வளவு தயவாக என்னைச் சந்திக்க ஒரு நேரம் கேட்டு—சீ! தான் சின்ன மனிதனாக நடந்து கொண்டமைக்காக அவன் வேதனைப்பட்டான்.



அன்று முகாம் வந்து சேரும் வரையிலும் அவன் மனது அதைப்பற்றியே அசைபோட்டுக் கொண்டிருந்தது. 'இவர் யாராக இருக்கும்! அப்பொழுது நான் பிறக்கவேயில்லையே! சிலவேளை வீட்டாருக்குத் தெரிந்தவராய் இருக்கும். என் இயக்கப் பெயரை எப்படி அறிந்தார். அவனால் விடைகாண முடியவில்லை. ஆனாலும் 'எவ்வளவு நல்ல மனிதர். இவ்வளவு பெரிய பதவியில் இருந்தும், நீண்டகாலம் வெளிநாட்டில் வாழ்ந்தும் எம்மை மறக்காமல் இருக்கின்றாரே! அவரைச் சந்திக்காமல் விட்டோமே!' அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான்.
'இன்னேரம் ஆள் போயிருக்கும். இருந்தாலும் ஒருமுறை முயற்சித்துப் பார்ப்போம்' முகாம் வந்த பின்னர் அதனை எண்ணிக் கொண்டவாறே கண்ணனைக் கூப்பிட்டான். 'கண்ணன்! நாளைக்கு விடிய, நீ நேரத்தோட வெளிக்கிட்டு இந்த முகவரிக்குப் போய்ப் பார். இவர் நிற்கிறாரோ என்று விசாரி. ஆள் நிண்டால் நான் ஒருக்கா சந்திக்க ஒழுங்குபடுத்து. அவருக்கு வசதியான நேரம் எதெண்டு கேள். பெரிய மனுசன், மரியாதையா நட ' என்று அவனுக்கு விளக்கம் கூறி அனுப்பிய பின்னர், மனதில் ஒருவகை நிம்மதி ஆள் நிக்கோணும் என்று எண்ணிக் கொண்டான் ராசன்.
மறுநாள் பொழுது மனம் வேலைகளில் மூழ்கிக் கொண்டாலும் ஏனோ அவன் கண்ணனின் பதிலை எதிர்பார்த்தான்.
'அண்ண! ஆள் நிற்கிறார்' என்றபடி மாலைதான் வந்து சேர்ந்தான் கண்ணன்.
'உண்மையாகவே இன்னும் போகேல்லையே! என்ன சொன்னார்' ஆவலோடு ராசன் கண்ணனை ஏறிட்டான்.
'இன்னும் ரெண்டு நாளில் போறாராம். நாளைக்கு முழுக்க உங்களுக்காகக் காத்திருப்பாராம்' கண்ணன் கூறி முடித்தான். 'நாளைக்கு முதல் வேலையா ஆளச் சந்திக்கோணும்' என்று எண்ணிக் கொண்டான் ராசன்.
ராசனுக்கு இப்பொழுது புதியதொரு பிரச்சினை. நாளைக்குப் போய் ஆளத் தெரியாமல் எப்படிக் கதைப்பது! மறந்து விட்டேன் என்றால் என்ன நினைப்பார்' என்றவாறு எண்ணிக் கொண்டவனுக்கு திடீரென்று ஒரு யோசனை வந்தது. அவனது முகாமில் இருந்து பத்துக் கிலோமீற்றர் தொலைவில் அவனது ஊரைச் சேர்ந்த ஒரு குடும்பம் இருந்தது. அங்க போயும் கனகாலம். போனா அறிஞ்சு வரலாம்' என்று எண்ணிய அவன் வேலைகளை முடித்துக் கொண்டு புறப்பட்டான். வீட்டை நெருங்கியதும் 'யார் அவியள் எண்டு தெரியுமே, எங்களோட நிண்டான் கப்ரன் ரஞ்சன், அவன்ர வீட்டுக்காரர்' என்று கண்ணனுக்குக் கூறியவாறே வீட்டு வாசலை நெருங்கினார்கள்.
'அட, தம்பி ராசன் வா! வா! வா. கண்டு எவ்வளவு காலம். இஞ்சாலப் பக்கம் வாறதே இல்ல, நீங்கள் எல்லாம் இப்ப பெரிய ஆக்கள். எங்களை எல்லாம் மறந்திற்றியள்' என்றபடியே வரவேற்றார், ரஞ்சனின் அப்பா முற்றத்து மாமரத்தின் கீழிருந்த வாங்கில் அமர்ந்தவாறே. 'இல்லை அண்ண, வேலைகள் தெரியுந்தானே! நேரமில்லை. இண்டைக்கு இஞ்சால ஒரு வேலையா வந்தனாங்கள். அதுதான் உங்களையும் ஒருக்கா பாத்திட்டுப் போவம் எண்டு வந்தம். அது சரி அண்ண! எப்படி, பாடுகள்! சுகமாய் இருக்கிறீங்களோ என்றவாறு அவரின் முகத்தை ஏறிட்டான் ராசன்.
'சுகத்திற்கு என்னடா தம்பி! ஊர நினைச்சாத்தான் கவலை. இனி நாங்கள் எப்ப அங்கால போறது..! அதத்தான் நெடுக நினைக்கிறது. உங்கட வீட்டுக்காரர் இப்பவும் வன்னியில தானோ! அவியளின்ர பாடும் பெரிய கடினமாத்தான் இருக்குமென்ன!' கேள்வியுடன் ராசனைப் பார்த்தார் அவர்!
'ஓமண்ண! அங்கதான் இருக்கினம். சரியான கடினம்தான். என்ன செய்யிறது, தாங்கத்தானே வேணும். அது சரி அண்ண, எங்க உங்கட மூத்தவன்..! படிப்பில நல்ல கெட்டிக்காரன் எண்டு ரஞ்சன் நெடுகச் சொல்லுவான்' என்றபடி அவரை நோக்கினான் ராசன்.
'உனக்குப் புதினம் தெரியாதே..! மூத்தவனுமல்லோ இயக்கத்திற்குப் போய்ற்றான். தம்பியார் செத்து, கொஞ்ச நாளில அவனும் போய்ற்றான்' சிரித்தபடியே கூறினார். ரஞ்சனின் அப்பா.
'உண்மையாகவே அண்ண! உங்களுக்கு உள்ளதே ரெண்டு பிள்ளையள். அதிலையும் ஒண்டு மாவீரன். இவன்தானே அண்ண படிச்சுக் கிடிச்சு உங்களைப் பாக்கோணும். நீங்கள் இயக்கத்திற்குக் கேட்டுப்பாருங்கோ சுந்தரமண்ண, கட்டாயம் விடுவினம்' ராசன் கூறி முடிக்கு முன்னரே கோபத்துடன் வந்தது சுந்தரத்தாரின் குரல்.
'நீ என்ன பகிடியே விடுறாய் தம்பி. ஊரான் எல்லாற்ற பெடியும் இயக்கத்திற்குப் போகுது. நான் போய் என்ர பெடிய விடெண்டு கேக்கட்டே! அண்டைக்கும் போய் ஆளப் பாத்து ரெண்டு குடுவ குடுத்துப் போட்டுத்தான் வந்தனான். .போனனி! பயிற்சி ஏலாது எண்டு திரும்பிக் கிரும்பி வந்திராத! பேந்து அவன் தம்பியின்ர மானத்த வாங்கிப் போடாத! ஒழுங்கா இரு எண்டு போட்டுத்தான் வந்தனான்' என்றார்.
'தேத்தண்ணியைக் குடியுங்கோடா தம்பி, இவற்ர கதை உனக்கு தெரியும் தானே' என்றபடி தேநீர் கோப்பையை நீட்டினார் அம்மா. தேநீர்க் கோப்பையைக் கையில் வாங்கியபடியே சுந்தரத்தாரை ஆழமாகப் பார்த்தான் ராசன்.
உண்மையில எங்களுக்குக் கடினம்தான் தம்பி. உனக்குத் தெரியும் தானே, உடுத்த உடுப்போட வந்தனாங்கள். ஏதோ இந்தத் தோட்டத்தில வேலை கிடைச்சதாலதான், ரெண்டு நேரம் எண்டாலும் சாப்பிடுறம்.

தொடர்ச்சி மறுபக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆனா உந்தப் பெடி, பெட்டையள் எல்லாம் சண்டை பிடிக்கிறதாலதானே நாங்கள் இஞ்சையாவது நிம்மதியாய் இருக்கிறம். அவன் இருந்தா எங்களப் பாப்பான் எண்டாய். நாடு இருந்தாத்தானே நாங்கள் இருக்கிறதுக்கு. அவன் இயக்கத்திற்குப் போனதைப்பற்றி எனக்குக் கொஞ்சமும் கவலை இல்லை. எனக்காவது ரெண்டு. உவன் கணேசக்கு மூன்று பிள்ளையல்லே! அதிலையும் ரெண்டு மாவீரர். அவனோட ஒப்பிடேக்குள்ள என்ர பாடு பிரச்சினையல்ல. என்னமோட தம்பி கெதியா நாட்டப் பிடியுங்கோ. நாங்கள் நிம்மதியா ஊருக்குப் போய்ச்சேரோணும்' நீண்ட விளக்கமே தந்து முடித்தார் சந்தரத்தார். அந்தப் பாமரத் தந்தையின் உள்ளத் தெளிவு ராசனைச் சில நிமிடம் அமை



தியாக்கியது. 'பயப்பிடாதையுங்கோ அண்ண! கெதியில வெல்லுவம்' என்றபடி விடயத்திற்கு வந்தான் அவன். 'அண்ண! உங்களுக்கு யோகராசாவைத் தெரியுமே - எங்கட ஊரிலே வேலை செய்தவராம்' என்றான்.
'ஓமோம் ஏயிஏ. யோகராசா அவரை உனக்குத் தெரியாதே! அப்ப நீ சின்னப் பிள்ளையாய் இருந்திருப்பாய். உன்ர கொப்பரோட மனுசன் நல்ல ஒட்டடா தம்பி. அது சரி அவர் இப்ப வெளிநாட்டிலையாக்கும்' என்றவரை நோக்கிய ராசன்,
'ஓமண்ண, அவர் எனக்கொரு கடிதம் போட்டவர். எனக்கு ஆளத்தெரியேல்ல. அதுதான் கேட்டனான்' என்றான். 'அந்தாள் போய்க் கனகாலம் - யாழ்ப்பாணத்தில தான் வீட்டுக்காரர் இருக்கினம். நல்ல வசதியான ஆக்கள்' சந்தரத்தார் கூறி முடித்தார். 'சரி அண்ண நேரம் போய்ற்று. நாங்கள் வரப்போறம்' என்றவாறு எழுந்து கொண்டான் ராசன். 'ஓமடா மோன - இடக்கிட வந்து போங்கடாப்பா! நீங்கள் வந்து போனா கொஞ்சமாவது நிம்மதியா இருக்கும்' என்று கூறியவரிடம் 'நேரம் கிடைக்கேக்குள்ள கட்டாயம் வருவம்' என்றுகூறி விடைபெற்றார்கள்.
வழியில் கண்ணன் கேட்டான், 'பாவம் அண்ண' என்று. 'கண்ணன்! இதமாதிரி எவ்வளவோ சனம் இருக்குது. ஆனா, எவ்வளவுதான் கஸ்ரமெண்டாலும் நாட்ட மறக்காமல் இருக்குதுகள் பாத்தியே! இதுகளின்ர காலத்திற்குள்ளேயே ஈழம் எடுக்கோணுமடா' என்று கூறிய ராசன், 'நாளைக்கு நீயும் வா! நேரத்தோட வெளிக்கிடோணும்' என்றபடி முகாம் நோக்கி விரைந்தான்.

மறுநாள் காலை எல்லா வேலைகளையும் ஒதுக்கி வைத்துவிட்டு கண்ணனுடன் புறப்பட்டான் ராசன். நீண்ட நேரம் இருவரும் எதுவுமே பேசிக் கொள்ளவில்லை. அவர்களது பிரதேசத்தை நெருங்கியதும் கண்ணனை நோக்கிய ராசன், 'நான் ஆளச் சந்திக்கப் போறதிலையும் ஒரு சுயநலம் இருக்கு. வெளிநாட்டில இருக்கிறார். நாட்டுக்கேதாவது உதவி கேட்டுப் பாக்கலாம். உனக்கு விளங்குதே' என்றான். மெல்லச் சிரித்த கண்ணனிடம் 'ஆள் நிக்குமோடா' என்று வினாவ, 'கட்டாயம் நிற்பார் அண்ண உதால திரும்புங்கோ! மூண்டாவது வீடா! ஆ! இதுதான் நிற்பாட்டுங்கோ' என்றவாறு இறங்கிக் கொண்டான் கண்ணன்.
மோட்டார் சைக்கிளை நிறுத்தியவாறு வீட்டினை நோட்டமிட்டான் ராசன். வசதியின் செழுமை வீட்டில் தெரிந்தது. அவர்கள் இவர்களையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் போன்று வாங்கோ! வாங்கோ! என்றபடி வரவேற்றனர். வாங்கோ, மேல போவம் என்றபடி மாடிக்கு அழைத்துச் சென்றார் யோகராசா. மாடியில் இருந்த வரவேற்பறையில் வசதியாக அமர்ந்து கொண்டனர். இவ்வளவு நேரத்திற்குள் ராசன் ஆளை நினைவிற்குக் கொண்டுவர முயற்சித்துத் தோற்றுப் போனான்.
'தம்பி நியாபகம் இருக்குதோ!' அவனது மனதை உணர்ந்தவர் போன்று கேட்டார் அவர். ராசன் பொய் சொல்ல விரும்பவில்லை. 'இல்லை அண்ண குறை நினைக்கக் கூடாது. கனகாலந்தானே. மறந்து போய்ற்ரன்' என்றான்.
'ஓமோம் பின்ன எத்தின ஆண்டாய் உம்மட வீட்டுக்காரரோட நாங்கள் நல்ல நெருக்கம். உம்மிட 'பாதருக்கு' நான் எண்டா உயிர்–
எப்படி அவையள் சுகமாக இருக்கினமோ' என்றார் அவர். 'ஓமண்ண, அகதியாத்தான் இருக்கினம். நான் அவியளைக் கண்டு கனகாலம்' என்றான் ராசன்.
'நீர் எத்தனையாம் வகுப்பு மட்டும் படிச்சனீர் -படிப்பில நல்ல கெட்டிக்காரனாய் இருந்தனீர். தன்ர மகன் 'டொக்ரர்' எண்டு 'பாதர்' அடிக்கடி சொல்லுவார்' சிரித்தபடியே கேட்டார் யோகராசா அண்ணை. 'எங்கண்ண படிக்கிறது. நாட்டு நிலமை உங்களுக்கு விளங்கும் தானே! நான் 'ஓஎல்.' ஒடேயே படிப்பை விட்டிட்டு வந்திட்டன்' என்றான் ராசன்.
அந்த நேரம் நீர் என்னட்ட 'மற்ஸ்' படிக்க வாறநேரம் எவ்வளவு அடி வேண்டுறநீர் தெரியுமே - நான் நேற்றும் 'வைப்'பிற்குச் சொல்லிச் சிரிச்சனான். தனக்கும் அவருக்கும் உள்ள பழைய உறவின் நெருக்கத்தை மீண்டும் புதுப்பிக்க முயற்சித்துக் கொண்டிருந்தார் அவர். ஆனாலும் ராசனுக்குக் குழப்பமாக இருந்தது. அவனுக்கு நினைவே இல்லை. 'சீ! நான் இவ்வளவு மறதிக்காரனா!' தன்னை நினைத்து வெட்கப்பட்டான். இருந்தாலும் ஏதோ நினைத்தவனாய், 'நீங்கள் எத்தனையாம் ஆண்டு மட்டுமண்ண அங்க இருந்தனீங்கள்' என்றபடி அவரை ஏறிட்டான். 'நான் 70 தொடக்கம் 78 வரை இருந்தனான். ஆனா உங்கட வீட்டுக்காரருடன் பேந்தும் நல்ல தொடர்பிருந்தது' என்றபடி நிமிர்ந்தார். ராசனுக்கு இப்பொழுதுதான் உண்மைநிலை விளங்கியது.
'அண்ண! நீங்கள் என்ர அண்ணாவைத்தான் சொல்லுறியள். நான் 71 இலதான் பிறந்தனான். அதுதான் உங்கள எனக்குத் தெரியேல்ல'
அவரின் முகம் சற்றுக் கறுத்ததை அவனால் உணர முடிந்தது. ஏனடா அப்படிச் சொன்னோம் என்றாகிவிட்டது அவனுக்கு. ஆனாலும் பொய் கூறி நடிக்கக்கூடாதே! பின்னர் அதனைப் பெரிதாக எடுக்காதவர் போன்று இயல்பாகக் கதைக்கத் தொடங்கினார். அடுத்த பல நிமிடங்கள் அவர் ராசனது குடும்பத்திற்கும் தனக்கும் உள்ள நெருக்கத்தினைப் பற்றியும் பழைய சம்பவங்கள் பற்றியும் வரிசை வரிசையாக நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்.
'எவ்வளவு நல்ல மனிதர். இவ்வளவு பதவி நிலையிலும் வசதிகளும் படைத்த ஒரு பெரிய மனிதர் இருபது ஆண்டுக்களுக்கு முன்னைய நட்பையெல்லாம் நினைவில் வைத்திருக்கின்றார். ஒன்றாகப் படுத்துறங்கிய நண்பனும், உற்றார் உறவினர் கூட ஏழ்மையைக் கண்டால் ஒதுங்கி விடுவார்கள். ராசன் அவரை நினைத்துப் பெருமைப்பட்டான். கதைகள், அவரது வெளிநாட்டு வாழ்க்கை பற்றியயெல்லாம் திரிந்து, இறுதியில் அவரது குடும்பக்கதைக்கு வந்து நின்றது.
'தம்பி! எனக்கு இரண்டு பெண் பிள்ளைகள்தான். மூத்தவள் 'மெடிசின்' செய்யிறாள். இளையவ 'ஏஎல்' படித்துக் கொண்டிருந்தவ திடீரென்று போனமாதம் இயக்கத்திற்குப் போய்ற்றா. அவரின் கண்கள் கலங்கத் தொடங்கின. இவ்வளவு நேரம் எங்கள் உரையாடலில் புகாதிருந்த தாயார், இப்பொழுது சத்தம் வைத்தே அழத்தொடங்கிவிட்டார். ராசனுக்கு ஒன்றுமே புரியவில்லை.
'தம்பி அவள் நல்ல கெட்டிக்காரி தம்பி. 'ஓஎல்' சிக்ஸ் 'டி' எடுத்தவள். அடுத்த ஆண்டு கட்டாயம் 'மெடிசின்' கிடைக்கும் எண்டு பாத்துக் கொண்டிருக்க, ஐந்தாம் மாதம் இயக்கத்திற்குப் போய்ற்றாள்' தாயார் அழுகையுடன் கூறிமுடித்தார்.
'தம்பி! இவ அறிவிச்ச உடன நான் வேலையெல்லாம் விட்டுப்போட்டு ஓடிவந்திட்டன். தம்பி நான் போராட்டத்திற்கு எதிரானவன் இல்ல. ஆனால் இந்தப் பிள்ளை கஸ்ரப்படாமல் வாழ்ந்த பிள்ளை, இயக்கத்துக் கஸ்ரங்களைத் தாங்கிக் கொள்ள என்ர பிள்ளையால ஏலாது. மற்றது, எவ்வளவு கெட்டிக்காரி தம்பி. நாளைக்கு 'டொக்ரரா'க வர வேண்டியவள். இப்படிப் படிப்பெல்லாம் கெடுத்துப் போட்டு போயிற்றாள்' ஏன்று விக்கி விக்கிக் கூறியபடி, யோகராசா அண்ணையும் அழுது கொண்டேயிருந்தார்.
ராசனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அமைதியாகவே இருந்தான். திடீரென எழுந்து கொண்ட தந்தையார் வீட்டுக்குள் சென்று கடிதமொன்றை எடுத்து வந்து, ராசனின் கையில் கொடுத்து வாசிக்கும்படி கூறினார். காரணம் புரியாமலேயே கடிதத்தில் பார்வையை ஓடவிட்டான் ராசன். அது அவரது இளைய மகள், தனக்குத் தாயார் 'சைக்கிள்' வாங்கித் தரவில்லை என்று, தந்தையாருக்கு முறைப்பாடு செய்து எழுதியிருந்த கடிதம். வாசித்து முடித்து என்ன என்பது போல் அவரை ஏறிட்டான்.
'தம்பி 'சைக்கிள்' வாங்கித் தரேல்ல என்ற கோபத்தில-தான் இவள் இயக்கத்திற்குப் போயிருக்கிறாள்' என்றார் தந்தையார்.
கடிதம் எழுதிய நாளைக் கவனித்த ராசன், 'அண்ண! இது 94 ஆம் ஆண்டு எழுதிய கடிதம்—என்று இழுத்தவாறு நிறுத்தினான்.
'ஓம் தம்பி. ஆனா இந்தச் சின்னச்சின்னக் கோபங்களையெல்லாம் மனசில வைச்சுத்தான் பிள்ள போயிருக்கிறாள். இப்பொழுது அழுகை சற்று ஓய்ந்திருந்தது. எனியும் அமைதியாய் இருக்கக் கூடாது என்று நினைத்த ராசன், 'அண்ண! இப்பத்த போர்ச் சூழ்நிலை உங்களுக்குத் தெரியும். தமிழன் எல்லாம் ஒன்று சேர்ந்தாத்தான் நாங்கள் வெல்லலாம். எங்கட நாட்டக் காப்பாற்றலாம். இப்பத்தப் பிள்ளையளுக்கு இதெல்லாம் நல்லா விளங்கும். அதனால்தான் அவர்கள் போராட்டத்தில் சேர்கிறார்கள். ஆனா இயக்கத்திற்கு யாரையும் கட்டாயப்படுத்திச் சேர்க்கிறதில்லை அண்ண. அப்பிடிச் சேர்க்கவும் முடியாது. கோபத்தில் இயக்கத்தில் சேர்ந்த அளவிற்கு உங்கட பிள்ள, சின்னப் பிள்ளை இல்லையண்ண. அப்பிடிக் கோபத்தில போயிருந்தா கட்டாயம் கொஞ்ச நாள்ள திரும்பிவரும். எதுக்கும் நீங்கள் பிள்ளை போன காம்பிற்குப் போய்க் கேட்டா கட்டாயம் காட்டுவினம். நீங்கள் பிள்ளையோட ஒருக்கா கதைச்சிற்று வந்தீங்களெண்டா நல்லம்' என்று கூறி முடித்து, இருவரையும் ஏறிட்டான் ராசன்.
அப்பொழுது தாயார் மெல்லத் தொடங்கினார்.
'இவர் வர முன்னர் நான் காம்புக்குப் போனனான் தம்பி. ஆனா—' என்றபடி இழுத்தார்.
'ஏன் அம்மா சந்திக்க விடேல்லையோ' கேள்வியோடு அவரையே நோக்கினான்.
'இல்லத் தம்பி சந்திச்சுக் கதைக்க விட்டவியள். ஆனா பிள்ளைதான், இயக்கத்திற்கு விரும்பித்தான் வந்தனான். நான் போராடப் போறன். என்னைக் கூப்பிடாதையிங்கோ. நான் வரமாட்டன் என்று சொல்லிப் போட்டாள் தம்பி!' கூறியபடி மீண்டும் அவர் அழத் தொடங்கிவிட்டார்.
பாத்தீங்களே அண்ண! உங்கட பிள்ளை நல்லா யோசிச்சுதான் போயிருக்கு. பிள்ளை காலத்தின்ர தேவை தெரிஞ்சு, தன்ர கடமை உணர்ந்து விரும்பித்தான் அண்ண போயிருக்கு. எல்லாருக்கும் நாட்டுக்கான கடமை இருக்குத்தானே அண்ண!' அவர் மீது வைத்த கண்களை அகற்றாமலே கூறினான் ராசன்.
'இல்லைத் தம்பி, நல்லாப் படிக்கக் கூடிய பிள்ளை. சொகுசா வாழ்ந்தவள். சும்மா ஆசையில போயிருக்கு. கஸ்ரத்தைத் தாங்கிக் கொள்ள முடியாத பிள்ளை தம்பி என்றபடியே ராசனை நோக்கினார் தந்தையார். ராசனுக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை. அவன் நேரடியாகவே விடயத்திற்கு வர விரும்பினான். 'நான் என்ன செய்யலாம் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்' என்றான் அவரைப் பார்த்து.
'தம்பி! எனக்கு ரெண்டே ரெண்டு பிள்ளைதான். அதுகளுக்காகத்தான் நான் உயிர் வாழுறன். வெளிநாட்டில கடுமையாக உழைக்கிறன். அதில ஒண்டயும் இழக்க எனக்கு ஏலாது. தம்பி நீங்கள் எப்பிடியும் என்ர பிள்ளைய எடுத்துத் தந்திடுங்கோ. தம்பி! உங்கட உதவியை நாங்க ஒருக்காலும் மறக்கமாட்டம். அவளை எடுத்துவிட்டுத்தான் நான் திரும்பிப் போகோணும். கெஞ்சாக் குறையாகக் கேட்டபடி ராசனின் கைகளை இறுகப் பற்றிக் கொண்டார் தந்தையார். 'அண்ண! இதில என்னால செய்யக் கூடியது ஒண்டும் இல்ல. நாளைக்கு என்ர தங்கச்சி இயக்கத்திற்கு வந்தா, ஒழுங்கா இருந்து போராடு என்றுதான் சொல்லுவேனே ஒழிய, வீட்ட போ எண்டு சொல்ல மாட்டன். எல்லா மக்களுக்கும் விடுதலைப் போராட்டத்தின்ர தேவையை தெளிவுபடுத்த வேண்டிய நாங்கள், தன்ர முழுமையான விருப்பத்தோடு -தன்ர கடமையைச் செய்யிறதற்காகப் போராட்டத்தில் தன்னை இணைச்சிருக்கிற

**தம்பி சந்திச்சுக் கதைக்க விட்டவியள். ஆனா பிள்ளைதான், இயக்கத்திற்கு விரும்பித்தான் வந்தனான். நான் போராடப் போறன். என்னைக் கூப்பிடாதையிங்கோ. நான் வரமாட்டன் என்று சொல்லிப் போட்டாள் தம்பி!" கூறியபடி மீண்டும் அவர் அழத் தொடங்கிவிட்டார்.**

தொடர்ச்சி 12 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோர்வேயில்
# மாவீரர் வெற்றிக்கிண்ணம்
## சுற்றுப்போட்டிகள்

**கரபந்தாட்டம்**
( Over Game / Set up Game )
**வலைப்பந்தாட்டம்**




காலம்: 18 - 11 - 1995, 19.11.95
இடம்: NORGESIDRETTSHOGSKOLE
Songsvei 80
Krinsja

விண்ணப்பக் கட்டணம்: 500 குரோணர்.
விண்ணப்ப முடிவு திகதி: 01 . 11 . 95

மேலதிக விபரங்கள், தொடர்புகளிற்கு:

22191260, 90685943, 90064081

ஒழுங்குகள்: தமிழர் ஒருங்கிணைப்புக்குழு

---

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்
## பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு



# புலர்வின் பூபாளம்



## கலைவிழா

காலம்: 14 - 10 - 1995 சனிக்கிழமை, மாலை 7 மணி
இடம்: Bull theater Salen
Rosenhranz gt 8

மேலதிக விபரங்களிற்கு
T.R.O, P.boks 4742 Sofienberg, 0509 Oslo.

---

சொந்த மண்ணில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து அகதி முகாம்களில் அவதியுறும் எமது உடன் பிறப்புகளுக்கு உதவும் முகமாக

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

இத்தாலிக் கிளை நடாத்தும்

# 10வது ஆண்டு விழா

**காலம்:**
**29 . 10 . 1995**
**ஞாயிற்றுக் கிழமை**
**மாலை 6.00 மணி**

**இடம்:**
**டாந்தே அரங்கம்**
TEATRO DANTE

## நிகழ்ச்சிகள்:

- மங்கள விளக்கேற்றல்
- இன்னிசை ராகங்கள்
- கடல் அலையே கொஞ்சம் நில்லு
  _ நகைச்சுவை நாடகம்
- றணசுறு றணசுறு சூரையா
  _ அபிநய நடனம்
- ஐரோப்பிய பைத்தியங்கள்
  _ பாடல் அபிநயம்
- பூ!சுடும்
  _ சமூக சீர்திருத்த நாடகம்



நிகழ்ச்சியில் புதிய முகங்களையும்
புதிய ஆக்கங்களையும்
காணக்கூடியதாக இருக்கும்

நிகழ்ச்சிகள் யாவும் வழமைபோல் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகும்

---

நாகர்கோவில் பாடசாலை மீது
நிகழ்த்தப்பட்ட குண்டு வீச்சினையும்
சிறிலங்கா அரசின் கொடிய இன
ஒழிப்பினையும் கண்டிக்கும்

# அடையாள எதிர்ப்பு வாரம்

**02.10.95 முதல் 09.10.95 வரை**

இவ் அடையாள எதிர்ப்பு வாரத்தின் இறுதி நாளாகிய 09.10.95 அன்று நோர்வேயில் வாழும் அனைத்துத் தமிழ் மாணவர்களையும் நாகர்கோவில் பாடசாலைப் படுகொலையைக் கண்டித்து கையில் கறுப்புப்பட்டி அணிந்து பாடசாலை செல்லுமாறு கோருகின்றோம். இவ் அடையாள எதிர்ப்புக்கு ஒத்துழைப்பு நல்குமாறு அனைத்துப் பெற்றோர்களையும் வேண்டிக் கொள்கின்றோம்.

அஞ்சல் அட்டைகளையும், கறுப்புப்பட்டிகளையும் எமது அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
தொலைபேசி இலக்கம்: 22 19 12 60

இவ் அடையாள எதிர்ப்பு வாரத்தில், இத்தகைய படுகொலைகளைத் தடுத்து நிறுத்தக் கோரும் அஞ்சல் அட்டைகளை நோர்வே வெளிநாட்டமைச்சருக்கு நாம் அனைவரும் அனுப்புவோம்!


ஒழுங்குகள்: தமிழர் ஒருங்கிணைப்புக்குழு - நோர்வே

www.tamilarangam.net

# சக்தி கொண்ட
# தலைவனுடன் எழுகிறோம்



சக்தி கொண்ட தலைவனுடன் எழுகிறோம் - அவன்
தரிசனத்தில் தேசத்தாயைத் தொழுகிறோம்
சுற்றி நின்ற பகையை வெல்ல எழுகிறோம் - உண்மைச்
சுதந்திரத்தைத் தெய்வமென்று தொழுகிறோம்




ரத்த ஊற்றை எங்கள் மண்ணில் தோண்டினார் - பௌத்த
சிங்களத்தான் தனது எல்லை தாண்டினார்
எத்தனைநாள் சுட்டெரிப்பைத் தாங்குவோம் - பிச்சை
ஏந்தி ஏந்தி நித்திரைக்கு ஏங்குவோம்



அடக்குமுறையாளர் செய்யும் பாதகம் - அ
எதிர்ப்பதற்கே புலிகள் கையில் ஆயுத
நடப்பதனைச் சொல்லத்தானே ஊடகம் - அ
நம்பிக்கையில் நாமெடுத்தோம் ஊர்வ

தரணியிலே தமிழனுக்கோர் தாயகம்! - இதைத்
தடுத்திடுதல் ஏது சன நாயகம்?
கருணை கொண்ட பெரிய பிரித்தானியா - நீ
கண்ணை மூடி வாழ்தல் நியாயமா?

துணை கொடுக்கலாமா?...
கணை தொடுக்கலாமா?...
எமையழிக்கலாமா?..........
இது அடுக்குந்தானா?.........

**புலவர் சிவநாதன்**



T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-346 1963 , F: 384 0683

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்